
janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 | 2023 அக்டோபர் 15 - அக்டோபர் 21 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 28




## காவிரியில் தண்ணீர் திறந்துவிடக் கோரி அக்.11ல்

# விவசாயிகள் ஆவேச மறியல் - கடையடைப்பு

**உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி தமிழகத்திற்கு உரிய காவிரி நீரை திறந்து விட கர்நாடக அரசை வலியுறுத்தியும், தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடக்கூடாது என கர்நாடகாவில் போராட்டம் நடத்தி வரும் பா.ஜ.க மற்றும் கன்னட அமைப்புகளை கண்டித்தும், டெல்டா விவசாயத்தைப் பற்றி பலமுறை வலியுறுத்தியும் அலட்சியப்படுத்தி வரும் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்தும் காவிரி படுகை பாதுகாப்பு கூட்டியக்கத்தின் சார்பில் அக்டோபர் 11 ஆம் தேதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், திருச்சி, புதுக்கோட்டை, அரியலூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் முழு கடையடைப்பு மற்றும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன் மாபெரும் மறியல் போராட்டம் நடைபெற்றது.**

கிராமங்கள், நகரங்கள், பேரூராட்சிகள் உட்பட அனைத்து இடங்களிலும் சிறிய கடைகள் முதல் பெரிய வர்த்தக நிறுவனங்கள் வரை அனைத்தும் அடைக்கப்பட்டிருந்தன. காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட கடைகள், வர்த்தக நிறுவனங்கள் அடைக்கப்பட்டன. தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் சுமார் 40 ஆயிரம் கடைகள் அடைக்கப்பட்டன. ஆட்டோக்கள், தனியார் பேருந்துகள் ஓடவில்லை. கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டன. இதனால் காவிரி பாசனப் பகுதி மாவட்டங்களில், கடைவீதிகள், சாலைகள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடின. வங்கிகள், அஞ்சலகங்கள் உள்ளிட்ட ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பாக விவசாயிகள் பல ஆயிரக்கணக்கில் திரண்டு மறியல்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## வெறிச்சோடிய டெல்டா மாவட்டங்கள்












கட்சிக் கடிதம்

# சாதிவாரி கணக்கெடுப்பு! மோடி அரசு அலறுகிறது!



போர்க்குணமிக்க தோழர்களே!

**சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தலாமா? இந்தியர்களை சாதியாக பிரிப்பது சரியா? இந்துக்களை பிளவு படுத்துவதன் மூலம் காங்கிரஸ் நாட்டையே அழிக்க முடிவு செய்துவிட்டது.**

என்னைப் பொறுத்தவரை இந்த நாட்டில் ஏழைகள் தான் பெரும்பான்மையினர். ஏழைகளை மேம்படுத்த எடுக்கும் முயற்சிதான் நாட்டை முன்னேற்றும் என்று அக்டோபர் 3ம் தேதி சத்தீஸ்கர் மாநிலத்தின் ஜக்தல்பூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி முழங்கி இருக்கிறார்.

அதற்கு முந்தைய நாளில், பீகார் அரசு தனது சாதி வாரி கணக்கெடுப்பு முடிவுகளை அறிக்கையாக வெளியிட்டிருந்தது. 1931இல் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன் பின்னர் இப்போதுதான் ஒரு மாநிலம் அதை செய்திருக்கிறது.

கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் தவிர மற்ற எல்லோரும் இந்துக்கள் என்று சட்டம் அடையாளப்படுத்துகிறது. அவர்கள் பல சாதிகளைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். எந்தெந்த சாதியில் எவ்வளவு மக்கள் இருக்கிறார்கள் என்பதற்கு துல்லியமான கணக்கீடு எதுவும் கிடையாது.

பீகார் கணக்கெடுப்பின்படி, அந்த மாநிலத்தில் 84 சதவீதம் பேர், பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடி மக்களாக இருக்கிறார்கள். ஆதிக்க சாதியினர் 15 சதவீதத்திற்கும் குறைவு. ஆனால் அவர்கள்தான் அனைத்தையும் கட்டுப்படுத்துகிறார்கள். அரசியல், ஊடகம், வணிகம், அனைத்தும் அவர்கள் கையில் உள்ளன.

இந்தியா உலகத்தின் ஐந்தாவது மிகப்பெரிய பொருளாதாரத்தை கொண்ட நாடாகும். ஆனால் இங்கு செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான இடைவெளி மிகப் பெரிது. அந்த இடைவெளி மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

ஏழைகளாக இருப்பவர் யார்? அவர்களும் இந்துக்கள் தான். ஆனால் அவர்கள் பழங்குடி, பட்டியலின, பிற்படுத்தப்பட்ட சமூகங்களை சார்ந்தவர்கள்.

முஸ்லிம்களும் இதர சிறுபான்மையினரும்தான் நமது எதிரிகள், இதிலிருந்து மீள, இந்துக்கள் எல்லோரும் ஒன்று சேர வேண்டும் என்ற இந்துத்துவ அறைகூவலை இந்த கணக்கெடுப்பு சல்லி சல்லியாய் உடைத்திருக்கிறது.

இந்தக் கணக்கெடுப்பு வெளியில் வராமல் இருக்க ஆர்.எஸ்.எஸ்.–பி.ஜே.பி. அரசு அனைத்து முயற்சிகளையும் செய்தது. இந்த முடிவுகளை வெளியிடாமல் தடுக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்காடியது. அரசியலமைப்புச் சட்டம் ஏழாவது பிரிவின்படி, 1948 ஆம் ஆண்டின் சென்சஸ் சட்டம், 1990 ஆம் ஆண்டின் சென்சஸ் விதிகள் ஆகியவற்றின் படி மக்கள் தொகை கணக்கு எடுக்கும் அதிகாரம் ஒன்றிய அரசுக்கு மட்டுமே உண்டு. வேறு எந்த அமைப்புக்கும் அந்த தகுதி இல்லை என்று வாதாடியது. ஆனால் உச்ச நீதிமன்றம் தடை விதிக்கவில்லை.


பீகார் அறிக்கை வருவதற்கு முன்பு செப்டம்பர் 30ஆம் தேதி, அதே சட்டீஸ்கர் மாநிலத்தின் பிலாஸ்பூரில் பேசியபோது தான் ஒரு பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவன் என்றும், அதனால்தான் தன்னை காங்கிரஸ் குறி வைக்கிறது என்றும் மோடி பேசி இருந்தார்.

பிற்படுத்தப்பட்ட விளிம்புநிலை சாதிகளைப் பட்டியலிட்ட அவர், சிறுபான்மையினரை தாஜா செய்யும் காங்கிரஸ் கொள்கைகளால் தான் அந்த சாதிகளைச் சேர்ந்தவர்களால் முன்னேற முடியவில்லை என்றும் குறைபட்டுக் கொண்டார்.

பீகார் அறிக்கை வந்ததும், இந்துக்களே ஒன்றுபடுங்கள் என்ற இந்துத்துவக் கோட்பாட்டின் ஆணிவேர் அறுபடுகிறது என்று தெரிந்த பின்பு பிளேட்டை மாற்றி போட்டார் மோடி.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தனது ட்விட்டர் (எக்ஸ்) பக்கத்தில், "பீகார் கணக்கெடுப்பு ஓபிசி + எஸ்சி + எஸ்டி= 84 சதவீதம் என வெளிப்படுத்தி இருக்கிறது. ஆனால் 90 அரசு செயலாளர்களில் மூன்று பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள். நிதிநிலை அறிக்கை தயாரிப்பதில் அவர்களுக்கு 5% பங்குதான் உள்ளது. அதிக மக்கள் தொகை கொண்டவர்களுக்கு அதிக உரிமைகள். இதுவே எங்கள் உறுதிமொழி" என்று கூறியிருந்தார்.

அதிர்ந்து போன மோடி, இப்படிச் சொல்லலாமா? பெரும்பான்மை மக்களுக்கு மட்டுமே உரிமைகளா? அப்படியானால் சிறுபான்மையினர் உரிமைகளை குறைக்க




வேண்டும் என்று காங்கிரஸ் கூறுகிறதா? இந்துக்களே அதிகம் என்பதால் எல்லா உரிமைகளையும் அவர்களை எடுத்துக் கொள்ளலாமா?

எப்போதும் மோடி தனது பேச்சாற்றலை பயன்படுத்தி, எதிர் கருத்துகளை கிண்டல் செய்வார். பிரச்சனைகளை திசைதிருப்புவார். எதிர்க்கட்சியினர் மீது வன்மத் தாக்குதல் தொடுப்பார் என்பது தெரிந்த விஷயம்தான்.

இப்போதும் "காங்கிரஸ் கட்சி காங்கிரஸ்காரர்களால் நடத்தப்படவில்லை. உண்மையான காங்கிரஸ் தலைவர்களால் பேச முடியவில்லை. திரைமறைவில் இருந்து தேச விரோத சக்திகளோடு கூட்டுச் சேர்ந்தவர்கள் அதனை இயக்குகிறார்கள்"

சாதிவாரியாக கணக்கீடு வெளியிடுவது இந்தியாவை பாழ்படுத்தும் என்று மோடி சொல்வது உண்மையா? 2019ல் அரசியல் சட்டத்தை திருத்தி, பொருளாதார ரீதியாக நலிவடைந்தோருக்கு 10% இட ஒதுக்கீடு கொண்டு வந்தது எதற்காக?

வருடத்துக்கு 8 லட்ச ரூபாய் அதாவது மாதத்துக்கு 67.7 ஆயிரம் ரூபாய் வருவாய் கொண்டவர்கள் பொருளாதார ரீதியாக நலிந்தவர்கள் என்று உச்சவரம்பு விதித்தது எதற்காக?

இந்துத்துவாவை தூக்கிப்பிடிக்கிற உயர் சாதியினரை திருப்திப் படுத்துவதற்காகத்தானே!

பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் இனத்தவரின் வாய்ப்புகளைத் தட்டிப் பறிப்பதற்காகத் தானே!

பிஜேபியின் வெற்றிக்கு பயன்படுத்தப்பட்ட 'சோசியல் இன்ஜினியரிங்' என்பது என்ன? சாதிகளுக்கு இடையே சண்டை மூட்டி விட்டு, அதன் பயனாய் அதிக எண்ணிக்கை கொண்ட பெரிய சாதிகளை தன் பக்கம் இழுத்துக் கொள்கிற ஈனச் செயலைத் தவிர வேறு என்ன?

சாதிவாரிக் கணக்கெடுப்பு, இந்தியாவை சாதி ரீதியாக பிளவுபடுத்துகிறது என்று சொல்வதற்கான யோக்கியதை மோடிக்கு உண்டா?

பிற்படுத்தப்பட்ட, பட்டியலின பெரும்பான்மைமக்களுடைய உரிமைக்கான குரல் மேலெழும்போதெல்லாம், இந்துத்துவக் கோட்டை சரிகிறது. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு என்று மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஏற்று விபி சிங் அரசு அறிவித்தபோது...

அதைத் தடுக்க ரத யாத்திரை நடத்தி அரசையே கவிழ்த்தவர்கள் அல்லவா இவர்கள்!

வடமாநிலங்களில் பெரும் கலவரங்களை நடத்தியவர்கள் அல்லவா!

நாடு இதனை எளிதில் மறந்து விடாது.

ஏழைகள்தான் பெரும்பான்மையினர் என்று இப்போது பேசும் மோடிக்கு, இந்த ஞானம் எப்போது வந்தது?

மோடியின் ஆட்சியில், அதானியும் அம்பானியும் பெருத்திருக்கிறார்களே தவிர, ஏழை மக்கள் வாழ்க்கை தரம் உயர்ந்ததாக ஒரு புள்ளி விவரம் கூட இல்லையே!

உலகில் கடும் பட்டினி கிடக்கும் மக்கள் நிறைந்த 15 நாடுகளில் ஒன்றாக அல்லவா இந்தியா இருக்கிறது.

இந்தியாவின் ஒரு கோடி பணக்காரர்களுக்கு நாட்டின் மொத்த சொத்துகளில் 40% சொந்தமாக இருக்கும் போது, 70 கோடிக்கு மேற்பட்ட அடித்தள மக்களுக்கு 3% சொத்துக்கள் கூட சொந்தமாக இல்லையே!

இதுதான் ஏழைகளைப் பற்றி இவர் அக்கறை கொள்ளும் லட்சணமா?

பெரும்பான்மையான இந்துக்களே உரிமைகளை எடுத்துக் கொண்டால், சிறுபான்மையினர் என்ன செய்வார்கள் என்ற நடிப்பை யார் நம்புவார்கள்?

மோடி பேசிய பொய்கள் என்று ஒரு புத்தகமே வந்துவிட்டது. 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு' என்பது தமிழ் பழமொழி. பத்தாண்டுகள் வரை தாக்கு பிடித்தது அதிக காலம் தான். தற்போது குட்டு வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தியா கூட்டணிக்கு எதிராக ஆளில்லாத, பேர் தெரியாத கட்சிகளை எல்லாம் சேர்த்து 37 கட்சிகள் என் பின்னால் நிற்கின்றன என்று காண்பிக்க மோடி முயன்றார். பெரிய கட்சியான சிவசேனையை பிளவுபடுத்தி ஒரு துண்டு துக்காணியை தன் பக்கம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சிரோன்மணி அகாலி தளமும் வேளாண் விவசாயிகள் போராட்டத்தின் போது வெளியேறிவிட்டது.

நிதீஷ் குமார் கூட்டணியில் இருந்து வெளியேறியது மட்டுமில்லாமல் இந்தியா கூட்டணியினுடைய ஒருங்கிணைப்பாளராக செயல்படுகிறார்.

கடைசியாக நடந்த கூட்டத்தில் தன் அருகில் இரண்டாவது பெரிய கட்சியாக அமர வைத்திருந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இப்போது கூட்டணியை முறித்துக் கொண்டது.

தன் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள எந்தப் படுபாதகமும் செய்வதற்கு ஆர்எஸ்எஸ் – பாஜக தயங்காது என்பதில் எள்முனை அளவும் சந்தேகம் இல்லை.

பொறுமையாகவும் பொறுப்போடும் செயல்பட்டு 2024ல் இந்த தீய சக்திகளை ஆட்சியில் இருந்து அகற்றுவதே ஒரே தீர்வு.

மீண்டும் சந்திப்போம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# பாஜகவை ஆட்டிவைக்கும் ஐந்து மாநில தேர்தல்கள்



டி.எம்.மூர்த்தி

**ராஜஸ்தான், மத்திய பிரதேசம், தெலுங்கானா, சட்டீஸ்கர், மிசோரம் ஆகிய ஐந்து மாநிலங்களுக்கான மாநில சட்டப்பேரவைகளுக்கான தேர்தல் நவம்பர் மாதத்தில் நடைபெற உள்ளன இவற்றுக்கான வாக்கு எண்ணிக்கை டிசம்பர் மூன்றாம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.**

இந்தி பேசும் பகுதிகள், தென்னிந்தியா, வடகிழக்கு என வெவ்வேறு பகுதிகளில் நடைபெறும் இந்த தேர்தல் 2024 இல் நடக்கும் நாடாளுமன்ற தேர்தலுக்கான ஒரு முன்னோட்டமாக கருத இயலும்.

### முதல்வர் வேட்பாளர்

ராஜஸ்தானிலும் சட்டீஸ்கரிலும் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் உள்ளது. மத்திய பிரதேசத்தில் ஆட்சியைப் பிடித்தும் கூட, 15 மாதத்தில் காங்கிரசின் ஜோதிராதித்ய சிந்தியாவை பிஜேபி இழுத்து, ஆட்சியையும் கைப்பற்றிக் கொண்டது.

வழக்கமாக எந்த தேர்தல் என்றாலும் உங்கள் முதலமைச்சர் வேட்பாளர் யார்? பிரதமர் வேட்பாளர் யார்? என்று கேள்வி மேல் கேள்வி போட்டு துளைப்பது பிஜேபியின் வழக்கம். ஆனால் இந்த ஐந்து மாநிலங்களிலும் யார் முதலமைச்சர் என்று பிஜேபி சொல்லவில்லை. மாநிலத் தலைவர் யாரையும் முன் வைக்காமல் மோடியின் செல்வாக்கு மற்றும் பிம்பத்தை முன்னிறுத்தியே இந்தத் தேர்தலை சந்திப்பது என பிஜேபி முடிவெடுத்து விட்டது.

மோடிக்கு இந்தியா முழுமையும் பெரும் வரவேற்பு இருப்பதாக அந்தக் கட்சி நினைக்கிறது. ஆனால் கர்நாடகாவில் 11 முறை சென்று மோடி பிரச்சாரத்தில் ஈடுபட்டும் பிஜேபி மண்ணைக் கவ்வியது. இது தென்னிந்திய மாநிலம். இப்போது இந்தி இதயப் பகுதியிலேயே தோல்வியுற்றால் அது இந்திய அரசியல் போக்கு மாறிவிட்டது என்பதையே உணர்த்தும்.

### சாதி வாரி கணக்கெடுப்பு

சோர்வுற்றிருந்த காங்கிரஸ் கட்சி கர்நாடக தேர்தல் வெற்றியால் உற்சாகமடைந்து இருக்கிறது. ராஜஸ்தானிலும் சட்டீஸ்கரிலும் தனது ஆட்சியை தக்க வைத்துக் கொண்டு மத்திய பிரதேசத்தை மறுபடியும் கைப்பற்றுமானால் அது காங்கிரசை வலிமையடையச் செய்யும். அதோடு தேசம் தழுவிய எதிர்க்கட்சியாக மீண்டும் உருவம் பெறும்.

பீகார் அரசு வெளியிட்டுள்ள சாதிவாரி கணக்கெடுப்பு இப்போது முக்கியத்துவம் பெறுகிறது. அதேபோன்ற ஒரு கணக்கெடுப்பை பிஜேபி ஆட்சிக்கு வந்தால் நடத்துமா? என்ற கேள்வி இப்போது முன்வைக்கப்படுகிறது. இந்தக் கேள்வி, தேர்தலில் முக்கியமான பங்காற்றும். கல்வி வேலை வாய்ப்புகளில், பிற்படுத்தப்பட்ட பட்டியலின மக்களை ஓரங்கட்டி நிறுத்தி விட்டு, இந்துக்களின் ஒற்றுமை என்று பசப்புவது பலன் தராமல் போகும்.

### ராஜஸ்தான்

ராஜஸ்தான் தேர்தலுக்காக பரிவர்த்தன் யாத்திரா என்ற பெயரில் அங்குள்ள 200 தொகுதிகளையும் தொட்டுச் செல்லும் வகையில் பல யாத்திரைகளை பிஜேபி 20 நாட்கள் நடத்தி இருக்கிறது. இவற்றை துவக்கி வைக்க மோடி, அமித்ஷா, ராஜ் நாத் சிங், நித்தின் கட்கரி ஆகியோர் மாநிலத்திற்கு வந்தார்கள். இந்த யாத்திரைகள் குறித்து முன்னாள் பிஜேபி முதலமைச்சர் வசுந்தரா ராஜே படத்துடன் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு இருந்தன. அவர் இரண்டு முறை முதலமைச்சராக இருந்தவர். 33 ஆண்டுகளாக தனது தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுபவர்.

ஆனால் அவர் இந்த கூட்டங்களில் ஒன்றில் கூட பங்கேற்கவில்லை. மகாராணி என்று கொண்டாடப்பட்ட அவருக்கு இப்போது தலைமையுடன் பிணக்கு ஏற்பட்டுள்ளது. அவர் எதேச்சதிகாரமாக செயல்படுகிறார் என்று பிஜேபி தலைமை கருதினாலும், அவருக்கான ஆதரவு அந்த மாநிலத்தில் கணிசமாக இருக்கிறது.

### மத்திய பிரதேசம்

மத்திய பிரதேசத்தை பொருத்தவரை சிவராஜ் சிங் சௌகான் நீண்ட காலமாக முதல்வராக இருக்கிறார். அங்கு பத்திரிகையாளர் கூட்டத்தில், "சவுகான் இப்போது முதல்வராக இருக்கிறார். நாங்கள் தேர்தலில் போட்டியிடுகிறோம். அடுத்த முதல்வர் யார் என்பதை கட்சி முடிவு செய்யும்' என்று அமித் ஷா பேசினார்.

ஒன்றிய அரசில் அமைச்சராக உள்ள மூவருடன், ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி சார்பில் நிறுத்தப்பட்டுள்ளனர். ஜோதிராதித்ய சிந்தியா, காங்கிரஸ் கட்சியிலிருந்து மாறியதால்தான் காங்கிரஸ் அரசு கவிழ்க்கப்பட்டு பிஜேபி ஆட்சிக்கு வந்தது. அவரும் முதல்வர் பதவிக்கு பெரும் போட்டியாளராக இருப்பார்.

அண்மையில் சிவராஜ் சிங் சௌகான், ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது, "எனது அரசு நல்ல அரசா இல்லையா? நான் முதல்வராக வேண்டுமா வேண்டாமா?, மோடி மீண்டும் பிரதமராக வேண்டுமா, வேண்டாமா?, ஒன்றியத்திலும் மாநிலத்திலும் பிஜேபி மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதா, இல்லையா?' என்று மக்களிடம் கேள்வி எழுப்பியது, அவர் யாருக்கும் பதவியை விட்டுத்தரத் தயாராக இல்லை என்பதை நன்கு உணர்த்துகிறது.

இது தவிர குறிப்பிட வேண்டிய மற்றொரு விஷயமும் உள்ளது. தமிழ்நாட்டில் எழுப்பப்பட்ட சனாதன ஒழிப்பு என்ற பிரச்சனையை பிஜேபி மத்திய பிரதேசத்தில் பெரிதாக பேசிக் கொண்டிருக்கிறது. திமுக சனாதன ஒழிப்பு பற்றி பேசுகிறது அதனோடு காங்கிரஸ் கூட்டணி வைத்திருக்கிறது எனவே இவை அனைத்தும் இந்து விரோத சக்திகள் என்று சொல்லி வாக்குகளை கவர்வதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

### சத்தீஸ்கர்

சத்தீஸ்கரில் உள்ள 90 தொகுதிகளில் 68 தொகுதிகளில் வென்று 2018ல் காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்தது. அது ஊழல் நிறைந்த ஆட்சி என்பதுதான் பிஜேபியின் பிரச்சாரமாக இருக்கிறது.

போர் நடக்கும் போது, தரைப்படைக்கு ஆதரவாக எதிர் நாட்டுக்குள் பறந்து சென்று விமானப்படை குண்டு பொழிவதைப் போல, அமலாக்கத்துறை, மத்திய புலனாய்வுத்துறை, வருமான வரித்துறை ஆகியவை, வாரத்துக்கு குறைந்தபட்சம் இரண்டு ரெய்டுகளை அங்கு நடத்திக் கொண்டிருக்கின்றன. கர்நாடகாவில் இவர்கள் ஆண்டபோது 40 சதவீத கமிஷன் ஆட்சி என்று ஊரெல்லாம் சிரித்தது.

அங்கே பிஜேபியின் பிரபலமான தலைவர் முன்னாள் முதலமைச்சர் ராமன் சிங். இங்கும் முதல்வர் வேட்பாளர் அறிவிக்கப்படவில்லை. தொகுதிகளுக்கான வேட்பாளர் தேர்வில், முன்பு தோற்றதற்கு காரணமான மூத்த தலைவர்களே மறுபடியும் நிறுத்தப்படுகிறார்கள் என்று உட்கட்சி சண்டை பிஜேபிக்குள் நடந்து கொண்டிருக்கிறது.



### தெலுங்கானா

தெலுங்கானாவில் ஆட்சியில் இருப்பது கே. சந்திரசேகர ராவின் பாரத ராஷ்டிர சமாதி. (முன்பு தெலுங்கானா ராஷ்டிர சமிதி என்று இதற்குப் பெயர்) காங்கிரஸ், பிஜேபி, பிஆர்எஸ் என அங்கு மும்முனைப் போட்டி நடைபெறுகிறது. பிஜேபி 'விஷன் சவுத்' என்ற திட்டத்தை வைத்துக் களம் இறங்குகிறது. முன்பு எந்த ஆதாரமும் இல்லாமல் எதிரணியைக் குறிவைத்து, சிறுபான்மையினரை தாக்கி 'கேரளா ஸ்டோரி', 'காஷ்மீர் ஃபைல்ஸ்' படங்களை எடுத்ததை போல, இப்போதும் அங்கு ராஜாக்கர்களை அவதூறு செய்து ஒரு திரைப்படம் தயாரிக்கப்பட்டு கொண்டிருக்கிறது.

### மிசோரம்

மிசோரத்தை பொருத்தவரை, அங்கே பிஜேபி ஆதரவு பெற்ற 'மிசோரம் நேஷனல் பிரண்ட்' என்ற கட்சி ஆட்சி நடத்துகிறது. அதன் முதலமைச்சராக ஜோரம் தங்கா இருக்கிறார். ஆனால் மணிப்பூரில் பிஜேபியின் ஈவிரக்கமற்ற அணுகுமுறை காரணமாக, வடகிழக்கு எல்லைப்புற மாநிலங்களின் மக்கள் கொதிப்படைந்து இருக்கிறார்கள். ஜோரம் தங்கா இனியும் பிஜேபிக்கு ஆதரவளிப்பது நடக்காத காரியம். ஏனெனில் நம்பிக்கை இல்லா தீர்மானம் நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்ட போது அந்தக் கட்சியின் ஒரே நாடாளுமன்ற உறுப்பினர் ஆட்சிக்கு எதிராக வாக்களித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே பிஜேபி இங்கு காலூன்றுவதற்கு வாய்ப்பே இல்லை.

எவ்வாறாயினும் டிசம்பர் மூன்றாம் தேதியன்று வாக்கு எண்ணிக்கை முடிந்து, தேர்தல் முடிவுகள் வெளியாகும். அது இந்திய அரசியலில் அடுத்த கட்டத்தை நோக்கிய பயணத்தை துவக்கி வைக்கும்.

### இடதுசாரிகள்:

இந்த தேர்தலில் மோடி அரசு வீழ்த்தப்பட வேண்டும் என்பதுதான் இடதுசாரிகளின் நோக்கமாகும். அதே நேரத்தில் இடதுசாரிகளும் தேர்தலில் போட்டியிட்டாக வேண்டும். தெலுங்கானாவில் மட்டும் காங்கிரஸ் கட்சியோடு தொகுதி பங்கீடு செய்து போட்டியிடுவது என அரசியல் முடிவு காணப்பட்டுள்ளது. இன்னும் எத்தனை தொகுதிகள் என்பதற்கான தீர்வு எட்டப்படவில்லை.


சத்தீஸ்கர் மாநிலத்தில் சிபிஐ, சிபிஐ(எம்), சிபிஐ(எம்எல்) ஆகியவை சேர்ந்து இடது முன்னணியை அமைத்துள்ளன. இது 40 முதல் 45 தொகுதிகளில் போட்டியிடக்கூடும். ராஜஸ்தானில் சிபிஎம்முக்கு இரண்டு சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஏற்கனவே இருக்கிறார்கள். ஆனாலும் கூட்டணி உறுதிப்படாத நிலையில் இடதுசாரிகள் தனியாக போட்டியிட நேரிடலாம். மத்திய பிரதேசத்தில் சிபிஐ, சிபிஎம் இரண்டும் 15 தொகுதிகள் வீதம் 30 தொகுதிகளில் போட்டியிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

தொடர்புக்கு: 94443 60869

## வினாடி - வினா

1. 1927ல் மனுஸ்மிருதியை தீயிட்டுக் கொளுத்திய தலைவர் பெயர் என்ன?
2. காந்தி தலைமையில் முதல் சத்தியாகிரகம் எங்கு, எப்பொழுது நடைபெற்றது?
3. மாப்ளா விவசாயிகள் கிளர்ச்சி எந்த ஆண்டு தொடங்கியது?
4. இரண்டுலட்சம் ஆண்டுகளுக்கு முன் ஆதிமனிதன் வசித்த குகை தமிழ்நாட்டில் எங்கு உள்ளது?
5. விவசாய மற்றும் தொழில்துறை உற்பத்தியை அதிகரிக்க 1958ல் சீனா கொண்டு வந்த திட்டத்தின் பெயர் என்ன?
6. உலகிலேயே மிகப்பெரிய நாடு எது?

விடைகள் 12 ஆம் பக்கம்



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 28

## தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடியின் அரசு

நிதி நிதி ஒதுக்கீடு செய்வதில், ஒன்றிய அரசு தமிழ்நாட்டை எவ்வாறு வஞ்சித்து வருகிறது என்பதை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு சட்டப்பேரவையில் விரிவாக எடுத்துரைத்திருக்கிறார். தெளிவான புள்ளி விவரங்களை தெரிவித்து இருக்கிறார்.

தமிழ்நாட்டிலிருந்து நேரடி வரியாக ஒன்றிய அரசு வசூலிக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும், மாநில அரசின் பங்கீடாக வெறும் 29 பைசா மட்டுமே திரும்பத் தரப்படுகிறது. ஆனால் பாரதிய ஜனதா கட்சி ஆளுகிற உத்தரப்பிரதேசத்தில், ஒன்றிய அரசு ஒரு ரூபாய் நேரடி வரி வசூல் செய்தால், அந்த மாநிலத்திற்கு நிதிப் பங்கீடாக ரூபாய் 2.73 திரும்பத் தரப்படுகிறது.

2014–15 கணக்காண்டு முதல் 2021–22 வரையில், நேரடி வரியாக தமிழ்நாட்டிலிருந்து 5.16 லட்சம் கோடி ரூபாய் வசூலிக்கப் பட்டிருக்கிறது. இதில் நிதிப் பங்கீடாக தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டது 2.08 லட்சம் கோடி மட்டுமே.

ஆனால் உத்தரப்பிரதேசத்தில் இதே ஆண்டுகளில் நேரடி வரியாக ரூபாய் 2.24 லட்சம் கோடி வசூலானது. ஆனால் பங்கீடாக திருப்பித் தரப்பட்டதோ ரூபாய் 9.04 லட்சம் கோடிகள் ஆகும். அதாவது வசூலித்ததை விட கொடுத்தது 4 மடங்குக்கும் கூடுதலாக உள்ளது.

ஒரு கண்ணில் வெண்ணெய், இன்னொரு கண்ணில் சுண்ணாம்பு என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு என்ன இருக்க முடியும்!

கடந்த 14 ஆண்டுகளாக நிதி கமிஷன் தமிழ்நாட்டுக்கு வழங்கும் தொகையை குறைத்துக் கொண்டு வருகிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 6.1% தமிழ்நாட்டில் இருந்தும் நிதியில் 4.079% மட்டுமே கொடுக்கப்படுகிறது.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில், தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. இதற்காக பாராட்டப்படாவிட்டாலும் தண்டனை வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

முன்பு, 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த முறையை 15 வது நிதி குழு மாற்றியது. இப்போது 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒதுக்கீடு என்பதால் நிதி பங்கீட்டைக் குறைக்கிறார்கள். நாடாளுமன்ற தொகுதிகளை குறைக்கும் அபாயமும் உள்ளது.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களின் உற்பத்தி குறியீடு, கிழக்கே உள்ள 15 மாநிலங்களின் ஜிடிபி யை விட அதிகம். மக்கள் தொகை குறைவு, உற்பத்தி அதிகம் என்ற நல்ல அம்சங்களே இந்த மாநிலங்களைப் பழிவாங்க பயன்படுத்தப் படுகின்றன.

சரக்கு சேவை வரியை (ஜிஎஸ்டி) நேரடியாக வசூலிப்பதால் மாநிலங்கள் நிதி சுயாட்சியை இழந்துவிட்டன. எந்தப் பொருள் மீது எவ்வளவு வரி என்று நிர்ணயிக்கும் உரிமை பறிக்கப்பட்டு விட்டது. என்றாலும் மாநில வருவாயைப் பாதுகாப்பதற்காக இழப்பீடு வழங்குவதாக ஒன்றிய அரசு சொன்னது. அது 2021 வரை வழங்கியதோடு நிறுத்தப்பட்டு விட்டது. இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு இழப்பீட்டை நீட்டிக்குமாறு மாநிலங்கள் கேட்டும், ஒன்றிய அரசு உறுதியாக மறுத்து விட்டது.

சென்ற மே மாதம் உச்ச நீதிமன்ற வழங்கிய தீர்ப்பில் "ஜிஎஸ்டி கவுன்சில் எந்த ஒரு முடிவையும் பொது கருத்தின் அடிப்படையில்தான் எடுக்க வேண்டும். பெரும்பான்மை முடிவு என்று எடுத்து நமது வளமான பாரம்பரியத்துக்கு இழுக்கு ஏற்படுத்தக் கூடாது. அந்த கவுன்சிலின் முடிவுகள், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளை கட்டுப்படுத்தக் கூடியது அல்ல. எல்லோரும் இணங்கும் முறையில் முடிவுகளை எடுத்து இந்திய நாட்டின் கூட்டமைப்பு முறைமையை பாதுகாக்க வேண்டும்" என்று தெளிவாக உத்தரவிட்டுள்ளது. இதை எல்லாம் மோடி அரசு காதில் போட்டுக் கொள்ளவில்லை.

நகர்ப்புற வீடு கட்டும் திட்டம், கிராமப்புற வீடு கட்டும் திட்டம் ஆகியவை "பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா" என்ற பெயரில் வழங்கப்பட்டாலும், அதில் 70% தொகையை மாநில அரசு தான் வழங்குகிறது.

சில ஆயிரம் பேர் பேசும் சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.643.84 கோடி ஒதுக்கிய ஒன்றிய அரசு, உலகெங்கும்10 கோடிக்கும் அதிகமான மக்கள் பேசும் தமிழுக்கு 22.94 கோடியைத் தான் ஒதுக்கி இருக்கிறது.

மோடியின் சித்து விளையாட்டுக்களுக்கு அடிபணியாமல் இருக்கும் தென் மாநிலங்கள், குறிப்பாக தமிழ்நாடு, தொடர்ந்து மோடி அரசால் ஒடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பாரபட்ச அரசு 2024ல் மக்களால் விரட்டப்பட வேண்டும்.

# பற்றி எரிகிறது காசா? அமைதிப் பேச்சுக்கு வழி என்ன?



மு.வீரபாண்டியன்

கடந்த சில நாட்களாக பாலஸ்தீன காசா பகுதி இஸ்ரேல் குண்டு வீச்சுகளால் பற்றி எரிகிறது. போர் நியதிகள் அனைத்தையும் இஸ்ரேல் அப்பட்டமாக மீறுகிறது. எங்கும் மரண ஓலம். அழுகைக் குரல். தடை செய்யப்பட்ட பாஸ்பரஸ் குண்டுகளை மக்கள் வசிப்பிடங்களில் வீசுகிறது இஸ்ரேல்.

காசா பகுதிக்குச் செல்லும் மின்சாரம், குடிநீர் இணைப்புகளைத் தடை செய்துவிட்டது. மருத்துவமனை, ஆம்புலன்ஸ் மீது குண்டுகளை வீசுகிறது. எகிப்து நாட்டின் மருத்துவ உதவிகளைக் கூட தடுக்கிறது இஸ்ரேல். உயிர் தப்பித்து வேறு பகுதிகளுக்குச் செல்லும் மக்கள் சாலைகளை தடுக்கிறது இஸ்ரேல்.



நீண்ட நெடும் காலப் பகையை போரில் வெளிப்படுத்துகிறது இஸ்ரேல். பாலஸ்தீனம், ஹமாஸ் போராளிகளிடம் போர் விமானங்கள் இல்லை என்பது இஸ்ரேலுக்கு தெரியும்.

ஹமாஸ் போராளிக் குழுக்கள் திடீரென இஸ்ரேல் மீது வீசிய ராக்கெட் தாக்குதல்தான் போருக்கான மூல காரணம் என சில ஊடகங்கள் பொய்யைப் பரப்புகின்றன.

உண்மை தெரிந்தும் கூட இந்தியாவின் பிரதமர் இஸ்ரேல் பக்கம் ஆதரவு என்கிறார். இஸ்ரேல் தொடுத்த போரை ஆதரிக்கிறதா இந்தியா?

ரஷ்ய அதிபர் புட்டின், இரு நாடுகளும் அமைதிப் பேச்சு நடத்த வேண்டும் என்கிறார். மூன்றாவது நாடு தலையிடக்கூடாது என்கிறார்.

ஐரோப்பிய ஒன்றியம் இஸ்ரேலுக்கு ஆதரவு என்கிறது.

பிரச்சனை என்பது 'ஹமாஸ்' என்பது போல் திசை திருப்பப்படுகிறது. இது உண்மை அல்ல. ஹமாஸ் செயல்களை நியாயப்படுத்த முடியாது என்றும் கூறுகின்றனர்.

ஹமாஸை விட பல நூறு மடங்கு பயங்கரவாத செயலில் இஸ்ரேல்தான் ஈடுபட்டது. இஸ்ரேல் ஒப்பந்தங்களை மீறி காசா பகுதியில் தங்கள் நாட்டு குடிமக்களை குடியமர்த்த முயற்சிக்கிறது.

ஜெருசலேம் மூன்று மதங்களின் நல்லிணக்க பூமி. கிறிஸ்து உயிர்த்தெழுந்தது ஜெருசலேம் தான் என்பது நம்பிக்கை. முகமது நபி இங்கிருந்து தான் சொர்க்கம் சென்றதாக நம்புகிறார்கள். யூதர்களின் டெம்பிள் மவுண்ட் இங்குதான் உள்ளது.

அரபுப் பகுதி என்றாலும் சிறுபான்மை மக்களான கிறிஸ்தவர், யூதர்கள் நல்லிணக்கமாகவே வாழ்ந்தார்கள். இந்தப் பகுதி முழுவதையும் சொந்தம் கோருகிறது இஸ்ரேல். தனது ராணுவ மேலாதிக்கத்தால் பாலஸ்தீனர்களை அடக்கி ஒடுக்குகிறது இஸ்ரேல்.

இதுவரை போடப்பட்ட பல ஒப்பந்தங்கள் – ஆஸ்லோ ஒப்பந்தம், கேம்டேவிட் ஒப்பந்தம், காசா அமைதிப் பேச்சு – என அனைத்தையும் இஸ்ரேல் மீறுகிறது.

ஜெருசலேம் பொதுப்பகுதி அது உலகிற்கு சொந்தம் என்பதனையும் இஸ்ரேல் ஏற்க மறுக்கிறது. இஸ்ரேல் நாட்டின் அனைத்து அராஜகங்களுக்கும் அமெரிக்கா உறுதுணை. ஐநா தீர்மானங்களில் ஒன்றைக் கூட இஸ்ரேல் மதிக்கவில்லை. இஸ்ரேலை தனிமைப்படுத்த முயற்சித்தால், தனது 'வீட்டோ' ரத்து அதிகாரத்தால் இஸ்ரேலை அமெரிக்காவும் மேற்கு உலகமும் காப்பாற்றும்.

பாலஸ்தீனத்தின் அமைதி விருப்பங்களை – விடுதலை வீரர் யாசர் அரபாத்தின் அமைதித் திட்டங்களை – எப்போதும் இஸ்ரேல் நிராகரித்தே வந்துள்ளது.

அரபு மற்றும் இஸ்ரேல் நல்லுறவு எனும் அமெரிக்க கொள்கைகள் இந்த மண்ணில் தோற்றுவிட்டது.

### தலித், மலைவாழ் மக்கள், பெண்கள் மீதான

# அடக்குமுறைகளுக்கு எதிராக டிச. 3 டெல்லியில் அகில இந்திய பேரணி

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில குழு கூட்டம் சென்னை பாலன் இல்லத்தில் மாநிலத் தலைவர் இரா. நல்லகண்ணு தலைமையில் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் இன்றைய அரசியல் நிலை குறித்து விளக்கிப் பேசினார். வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில பொது செயலாளர் மு. வீரபாண்டியன் எதிர்கால இயக்கம் குறித்தும், வேலை அறிக்கை சமர்ப்பித்தும் பேசினார். தேசிய துணைத் தலைவர் பொ. லிங்கம் அமைப்பு நிலை குறித்து பேசினார். மாநில செயலாளர்கள் எஸ். கே. சிவா, அஷரப்அலி உறுப்பினர் பதிவு குறித்து பேசினார். வழக்கறிஞர் சிவகங்கை கிருஷ்ணன் ஹைதராபாத் கருத்தரங்க முடிவுகள் குறித்து விளக்கி பேசினார். முன்னதாக வி.உதயகுமார் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். நிறைவாக கூட்டத்தை முடித்து வைத்து, அகில இந்திய தலித் உரிமைகள் இயக்கத்தின் தலைவர் புதுவை அ. ராமமூர்த்தி தேசிய குழு முடிவுகளை விளக்கிப் பேசினார்.

ஒன்றிய மோடி அரசு பொறுப்பேற்றதிலிருந்து தொடர்ந்து நாடு முழுவதும் தலித் மக்கள், மலைவாழ் மற்றும் பழங்குடிகள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருவதை கண்டித்தும், அடக்குமுறைகளை ஒன்றிய அரசு தடுத்து நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான முறையில், சட்டரீதியாக பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி டெல்லியில் டிசம்பர் 3ஆம் தேதி அகில இந்திய அளவிலான பேரணி நடைபெறுகிறது. தமிழகத் திலிருந்து நூற்றுக்கணக்கானோர் பங்கேற்பதென்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டம் வாச்சாத்தி மலைவாழ் மக்கள் வழக்கில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மாநில குழு பாராட்டி வாழ்த்தி வரவேற்கிறது. இதுபோன்று ஒடுக்கப்பட்ட மக்களுக்கான மற்ற வழக்குகளையும் விரைவில் விசாரித்து தீர்ப்புகளை வழங்க வேண்டும் என்றும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நிலவுகிற சாதிய ஒடுக்கு முறைகளுக்கு எதிராக அனைவரும் போராட முன்வர வேண்டும். மேலும் இது போன்ற நிலைமைகள் தொடராத வகையில் அரசு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மாநில குழு வலியுறுத்துகிறது

தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர்களின் நலனை கருத்தில் கொண்டு அத்துறைக்கு தனி நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறோம். மத்திய, மாநில அரசுகள் ஆதிதிராவிடர் பட்டியலின மக்களின் மேம்பாட்டிற்காக ஒதுக்கப்படும் நிதி உரிய முறையில் செலவிடப்படுகிறதா என்பதனை தெரிந்து கொள்ள மாநில அளவில் சுய அதிகாரத்துடன் செயல்படும் வகையில் தனி ஆணையம் ஒன்றை அமைத்திட வேண்டும் என மாநில குழு கேட்டுக் கொள்கிறது.

கூட்டத்தில் தேசிய குழு உறுப்பினர் ஜி.லதா எக்ஸ் எம்.எல்.ஏ, நெல்லை சுகுமாரன், விருதுநகர் பழனி குமார், வேலூர் மணி, தூத்துக்குடி வழக்கறிஞர் முத்துலட்சுமி, ரஞ்சனி கண்ணம்மா, திருப்பத்தூர் வெங்கடேசன், வடசென்னை ஜி. சுப்பிரமணி, சு. பாஸ்கர், செங்கல்பட்டு கர்ணன், காஞ்சிராமச்சந்திரன், பி.எஸ். எல்லப்பன், ராமநாதபுரம் செந்தில், விழுப்புரம் முருகன், தென் சென்னை அசோகன், கோவை சக்திவேல், திருச்சி செல்வராஜ், கடலூர் லாரன்ஸ், ஈரோடு கே. ராஜன், ஈரோடு வடக்கு பரமேஸ்வரன் உட்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து முன்னணி பொறுப்பாளர்கள், அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.



த.லெனின்

# தொகுதி மறுசீரமைப்பு பாஜகவின் தேர்தல் சூழ்ச்சி!

**இந்திய நாடாளுமன்ற புதிய கட்டடத் திறப்பு விழாவில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் அதிகரிக்கும் என்று பேசினார். இதனை தேர்தல் சீர்திருத்தத்தின் தொடக்கம் என்றோ ஜனநாயகத்தை பலப்படுத்தும் நிகழ்ச்சி என்றோ கருத இயலாது.**

மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளை அதிகரித்தால், அது தென் மாநிலங்களைப் பாதிக்கும் தேசிய இனப் பிரச்சனையை உருவாக்கும். இந்தி பேசும் மாநிலங்களுக்கும் இது சாதகமாக இருக்கும்.

இந்தியாவில் தற்போது 543 மக்களவை உறுப்பினர்கள் உள்ளனர். மாநிலங்களவையில் 245 உறுப்பினர்கள் உள்ளனர்.

### புதிய நாடாளுமன்றம்:

எதிர்காலத்தைமனதில்கொண்டுகூடுதல் இருக்கைகளுடன் புதிய நாடாளுமன்றம் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, மக்களவை அரங்கில் 888 இருக்கைகளும் மாநிலங்களவை அரங்கில் 384 இருக்கைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தின்போது, மக்களவையில் 1,224 பேர் வரை அமர்ந்து அவை நிகழ்வில் பங்கெடுக்க முடியும் வகையில் உள்ளது.

நாடாளுமன்ற அவைகளின் செயல்பாடு உறுப்பினர்களின் பேச்சுக்கு போதிய நேர ஒதுக்கீடு இல்லாத நிலையில் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டால் நாடாளுமன்ற செயல்பாட்டிலும் மாற்றங்களை கொண்டு வர வேண்டி இருக்கும் என்பது கண் கூடு. ஆனால் நாடாளுமன்ற முறைமையே ஒவ்வாததாக கருதும் மோடியும் பாஜகவும் இதற்கு சம்மதிப்பார்களா?

### மக்கள் தொகைக்கு ஏற்ப தொகுதிகள் தென்மாநிலங்களுக்கு பாதகம்!

நாடாளுமன்றத் தொகுதிகள் அதிகரிக்கப்பட்டால், அது தென் மாநிலங்களுக்குப் பாதகமாக முடியும் என்ற நியாயமான அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அப்படி எண்ணிக்கை அதிகரிக்கப்படுவது பல புதிய பிரச்னைகளையும் ஏற்படுத்தும்

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு, ஒவ்வொரு பத்தாண்டிற்குப் பிறகும் நாட்டில் உள்ள நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையைத் திருத்த முடிவுசெய்யப்பட்டது. இதற்கென 1952ஆம் ஆண்டில் தொகுதி மறு வரை சட்டம் (Delimitation Commission Act) அதன்படி ஒவ்வொரு பத்தாண்டிற்கும் ஒரு முறை தொகுதி மறு வரை ஆணையம் அமைக்கப்பட்டு, தொகுதிகள் மறுவரையறை செய்யப்படும்.

1952ல் செய்யப்பட்ட திருத்தத்தின்படி இந்தியாவில் 494 தொகுதிகள் இருந்தன. 1963ல் தொகுதிகளின் எண்ணிக்கை 522ஆக உயர்த்தப்பட்டது. 1973 இந்த எண்ணிக்கை 543ஆக மேலும் உயர்த்தப்பட்டது. அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டது.

தொகுதி மறுவரையும் காலநீட்டிப்பும்!

1975ல் இந்தியாவில் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியால் நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்டப்போதுதான் மக்கள் தொகை கட்டுப்பாட்டுத் திட்டங்களும் தீவிரமாக செயல்படுத்தப்பட்டன. அந்த நேரத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 42வது திருத்தம் கொண்டுவரப்பட்டு தொகுதி மறுசீரமைப்பை அடுத்த 25 ஆண்டுகளுக்கு மேற்கொள்ளக்கூடாது என இந்தத் திருத்தம் கூறியது. அதாவது மக்கள் தொகை கட்டுப்பாட்டை ஒழுங்காகச் செயல்படுத்திய மாநிலங்கள் இதனால் தண்டிக்கப்படக் கூடாது என்பதற்காக இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

வாஜ்பாயி பிதமராக இருந்த 2001ல் இந்த 25 ஆண்டு காலம் முடிவுக்கு வந்தபோது, 2002ல் தொகுதி மறுசீரமைப்பு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பலரும் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 84வது திருத்தத்தின் மூலம் இது மேலும் 25 ஆண்டுகளுக்கு தள்ளிப்போடப்பட்டது. இந்த 25 ஆண்டு 2026ல் முடிவுக்கு வருகிறது.

2000வது ஆண்டில் வெளியிடப்பட்ட தேசிய மக்கள் தொகைக் கொள்கை யின்படி, 2026க்குள் இந்தியாவின் அனைத்துப் பகுதியிலும் மக்கள் தொகை நிலைபெற்றுவிடும் எனக் கருதப்பட்டது. ஆகவேதான், அந்த ஆண்டிற்குப் பிறகு, தொகுதி மறுசீரமைப்புச் செய்யலாம் என முடிவெடுக்கப்பட்டது ஆனால் அப்படி மக்கள் தொகை நிலை பெறாத நிலையில் எப்படி இதனை அமல்படுத முடியும்?

அரசமைப்புசட்டம்பிரிவு81இரண்டாவது விதி மாநிலத்தின் மக்கள் தொகைக்கும் அந்த மாநிலத்தில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை இடையிலான விகிதம் எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் எனச் சொல்கிறது ஆனால் 60 லட்சத்திற்கு குறைவான மக்கள் தொகை கொண்ட சிறிய மாநிலங்களுக்கு இது பொருந்தாது என குறிப்பிடுகிறது. இதன்படி பழங்குடியினர் அதிகம் வாழும் வடகிழக்கு மாநிலங்கள் பாதிப்படையாது. உண்மையில் அதன் தனித்த கலாச்சாரத்தை பாதுகாப்பதற்கு உதவும். தேசிய இனப் பிரச்சினைகளை ஒத்திசைவோடு அணுகும் முறையாகவும் இது அமையும். ஆனால் இதே முறை பல்மொழி பேசும் மாநிலங்களுக்கும் பொருந்தக்கூடியது தானே?



### பொதுவாக இது இரண்டு வகைகளில் அமல்படுத்தப்படலாம் என கூறப்படுகிறது!

1. மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளை நிரவல் செய்வது

2. ஏற்கனவே இருக்கும் நாடாளுமன்ற இடங்களில் எண்ணிக்கையை மாநில அலகாக வைத்து அதில் 50 விழுக்காடு அதிகரிக்கச் செய்வதன் மூலம் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை சமன்படுத்த முயல்வது

ஒருவேளை மக்கள் தொகை மட்டுமே கருத்தில் கொண்டால் மொழி பெரும்பான்மை வாதத்திற்கு இடம் கொடுத்ததாக அமைந்து எதிர்காலத்தில் சோவியத் ஒன்றியும் சந்தித்த அதே சிக்கலை அதே பிளவுகளை இந்தியாவும் சந்திக்க நேரலாம். எனவே இதில் பொறுப்புணர்வோடு அனைவரும் சிந்திக்க வேண்டும்

ஆனால் பாஜகவும், ஆர்எஸ்எஸ். ஸும் தொடர்ந்து மதப் பெரும்பான்மை வாதத்திற்கும், மொழி பெரும்பான்மை வாதத்திற்கும் எப்போதும் ஆதரவு தெரிவித்து வந்திருக்கின்றன. எனவே தனது தேர்தல் வெற்றிக்காக அவர்கள் எதையும் கையில் எடுப்பார்கள். ஒரு காலத்தில் இஸ்லாமியர்கள் தான் மக்கள் தொகையில் அதிகம் வளர்ந்து வருகிறார்கள் இப்படியே விட்டால் 2050 இல் இந்தியாவில் இஸ்லாமியர்கள் பெரும்பான்மை பெற்று விடுவார்கள் என்ற அச்சத்தை எந்த ஆதாரமும் இன்றி, கூச்ச நாச்சமும் இன்றி இதற்கு முன்பு எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தொடர்ந்து பரப்புரை செய்தார்கள்.

உண்மையில் இந்து மற்றும் இஸ்லாமிய பெண்களின் கருத்தரிப்பு வீதம் ஏறத்தாழ சமமாக இருந்த போதே இந்த கூக்குரல்கள் எழுந்தன என்றால் இப்போது இந்தி பேசும் மாநிலங்களில் மக்கள் தொகையை கட்டுப்படுத்தாது தென் மாநில இந்து பெண்களை விட வட மாநில இந்து பெண்களின் கருத்தரிப்பு விகிதம் அதிகரித்து வருகிறது. இதனால் நாளடைவில் இந்தி பெரும்பான்மை வாத ஆதிக்கம் ஏற்படாதா? கல்வி அறிவில் குறைந்த இந்த மாநிலங்கள்தான். மக்கள் தொகையை அதிகரிக்கவும் செய்துவிட்டன. அத்தோடு பொருளாதார சமூக வளர்ச்சியிலும் இம் மாநிலங்கள் மிகவும் பின்தங்கியே இருக்கின்றன

உத்தர பிரதேசத்துக்கு 11 மக்களவை தொகுதிகள் கூடுதலாக கிடைக்கும். தமிழகத்தில் 8 மக்களவை தொகுதிகள் வரை குறைந்து 31 மக்களவை தொகுதிகளாக மாறலாம். 42 தொகுதிகள் உள்ள ஆந்திரா, தெலங்கானாவில் மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கை 34 ஆக குறையலாம். கேரளாவின் எண்ணிக்கை 20 லிருந்து 12 ஆக குறையலாம்.

தமிழ்நாட்டின் மக்கள்தொகை 2.08% குறையும். 1971இல் நாட்டின் மக்கள்தொகையில் 7.52%ஆக இருந்த தமிழ்நாட்டின் பங்களிப்பு 2026இல் 5.44%ஆக குறைந்துவிடும். பிரிக்கப்படாத ஆந்திரத்தில்(ஆந்திரம்–தெலங்கானா சேர்ந்த பகுதி) 1.46% மக்கள்தொகை குறையும். 1971இல் 7.94% பங்களிப்பு செய்த இவ்விரு மாநிலங்களும் 2026இல் 6.48% அளவுக்குக் குறைந்துவிடும். கேரளத்தில் 1.36% மக்கள்தொகைப் பெருக்கம் குறையும். 1971இல் நாட்டின் மக்கள்தொகையில் 3.89% கேரளத்தில் இருந்தது. 2026இல் இது 2.54%ஆக சுருங்கிவிடும். மேற்கு வங்கத்தில்கூட மக்கள்தொகை 1.03% அளவு குறையும். 1971இல் 8.008%ஆக இருந்தது 2026இல் 7.05%ஆகக் குறைந்துவிடும்.

மக்கள்தொகை அடிப்படையில் தொகுதிகளின் எண்ணிக்கையை வரையறுத்தால், மக்கள்தொகையைச் சிறப்பாகக் கட்டுப்படுத்திய மாநிலங்களுக்குத் தொகுதிகள் குறைப்பு, தண்டனையாகவும் அதில் அக்கறை செலுத்தாமல் அலட்சியமாகச் செயல்பட்ட மாநிலங்களுக்கு அதிகத் தொகுதிகள் வாய்ப்பாக அமையும் என்பது என்ன நியாயம்?

அதுவே மாநிலங்களை அலகாக வைத்து தொகுதிகள் அதிகரிக்கப்பட்டால் உ.பிக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் 143 ஆக அதிகரிக்கும் பீகாருக்கு 86 ஆகவும் அதிகரிக்கலாம் தமிழ்நாட்டிற்கு 10 இடங்கள் அதிகரிக்கலாம் அதிகரிக்கலாம். ஒட்டுமொத்த ஆந்திரா தெலுங்கானாவிற்கு மேலும் 10 இடங்கள் அதிகரிக்கலாம். கேரளாவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை எந்த மாற்றமும் இன்றி அப்படியே தொடரலாம். இந்த முறையில் கூட தென் மாநிலங்கள் பெறும் அளவிற்கு தங்களுடைய விகிதாச்சாரத்தை பிரதிநிதித்துவத்தை இழக்கும் அபாயம் தான் எழுந்துள்ளது என்பதை நாம் அறியலாம்.

### மக்கள் தொகையில் மாநிலங்களின் பங்களிப்பு!

இந்திய மக்கள்தொகையில் உத்தர பிரதேசத்தின் பங்கு 1.74% அதிகரிக்கும். 1971இல் 15.30%ஆக இருந்த அதன் பங்களிப்பு 2026இல் 17.03%ஆக உயரும். பிஹாரின் பங்களிப்பு 1.59% அதிகரிக்கும். 1971இல் 7.69%ஆக இருந்தது 2026இல் 9.28%ஆக உயரும். ராஜஸ்தான் மக்கள்தொகை 1.17% அதிகரிக்கும். 1971இல் 4.70%ஆக இருந்தது 2026இல் 5.87%ஆக உயரும்.

### வரி வருவாய் பகிர்வில் வளர்ந்த மாநிலங்கள் தியாகம்!

மக்கள் தொகையை கட்டுப்படுத்துவதில் மட்டுமின்றி உயர்கல்வி வளர்ச்சியிலும் தென்னிந்தியா சாதனைகளை படைத்துள்ளது உயர்கல்விக்கான ஒட்டு மொத்த மாணவர் சேர்க்கை தேசிய சராசரி 27% ஆக இருக்கும் நிலையில் தமிழ்நாட்டில் 52% ஆகவும், கேரளாவில் 43% தெலுங்கானா 39% ஆகவும் உள்ளது பீகார் 16% ஆகவும், உத்தர பிரதேசம் 23% ஆகவும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் தெற்கு வடக்கு மாநிலங்களுக்கு இடையேயான ஏற்றத்தாழ்வு அதிகரித்து வருகிறது. கர்நாடகாவில் தனி நபர் வருமானம் 1,53123 ரூபாயாகவும், தமிழ்நாடு 1,45528, கேரளா 1,34878, ஆந்திரம் 1,14324 ரூபாய்களாக இருக்கும் நிலையில் பீகார் 28,127, மத்திய பிரதேசம் 58,334, ராஜஸ்தான் 74009, உ.பி 39,371 ரூபாயாகவும் உள்ளதை கருத்தில் கொண்டால் ஒட்டு மொத்த வட மாநிலங்களில் வளர்ச்சி நிதிக்கு தென் மாநிலங்களே அதிகம் அளித்து வருவதும் தெரியவரும்.

கடந்த 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒன்றிய அரசிடமிருந்து மாநிலங்களுக்கான வரி வருவாயை பகிர்ந்து அளிக்கலாம் என்ற முடிவில் தென் மாநிலங்கள் அதிருப்தியை தெரிவித்தன.

14வது நிதிக்குழு தென் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட வரி வருவாய் 17.98% ஆக இருந்தது. ஆனால் 15வது நிதிக்குழுவில் அது15.8% ஆக குறைந்து விட்டது

இப்படி நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக தியாகம் செய்வதெல்லாம் தென் மாநிலங்கள் எனும் போது மக்கள் பிரதிநிதித்துவ முறையிலும் தியாகம் செய்ய சொல்வது ஆபத்தானது. உண்மையில் அது பிரிட்டிஷ் அரசின் காலனி ஆதிக்க பிரித்தாலும் சூழ்ச்சியே! பிரித்தாள்வதா? அல்லது ஒருமித்து வாழ்வதா? என்பதே நம் முன்னால் இருக்கும் ஒரே கேள்வி!

ஜனநாயகத்தில் ஒவ்வொரு குரலுக்கும் இடம் இருக்க வேண்டும். ஒரு மெய்யான கூட்டாட்சிக்கு பிராந்திய சமநிலையை பேணுவதும் அவசியம் ஆகும். அமெரிக்க நாடாளுமன்ற அவையில் அனைத்து மாநிலங்களுக்கும் சமமான உறுப்பினர் எண்ணிக்கை அளிக்கப்பட்டுள்ளது போல இந்தியாவிலும்எதிர்காலத்தில் கொண்டுவர ஏன் தயங்க வேண்டும்?பெரும்பான்மைவாத சூழ்ச்சியில் ஏன் மயங்க வேண்டும்? நாட்டின் ஒற்றுமையும் ஒருமைப்பாட்டையும் காக்க இது ஒன்றே சிறந்த வழி!

தொடர்புக்கு 9444481703

# பேறுகால தாய்மார்களின் இறப்பை தடுத்திட என்ன செய்ய வேண்டும்?



ஜி.ஆர்.இரவீந்திரநாத்

**மதுரை ராஜாஜி மருத்துவமனையில் கர்ப்பிணிப் பெண்ணின் மரணம் மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. இதற்கான காரணங்களை கண்டறிய துறைசார்ந்த மருத்துவ நிபுணர்களின் குழுவை நியமிக்க வேண்டும்.**



பேறு கால மரணங்கள், தொடர்பாக தொடர்ந்து பல்வேறு விதமான சர்ச்சைக்குரிய கருத்துக்களை பரப்புவது ,மகப்பேறு மருத்துவர்களை நம்பிக்கை இழக்கச் செய்கிறது. எனவே, உண்மையான காரணங்களை முழுமையான கோணத்தில் அலசி ஆராய்ந்து பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும். அதைவிடுத்து பணியில் இருக்கும் மருத்துவரை, எல்லாவற்றிற்கும் காரணமென குற்றம் சாட்டி, பலிக்கடா ஆக்கும் போக்கை கைவிட வேண்டும்.

துறை சார்ந்த மருத்துவத் துறையினர் ஆய்வை மேற்கொள்ளாமல், மகப்பேறு மருத்துவ அறிவியல் துறை சாராத மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர் உள்ளிட்டோரை ஆய்வு செய்ய வைத்து மருத்துவர்களை குற்றவாளிகளாக்குவது, சரியானதல்ல. தவறான நடைமுறையாகும்.

அவசரகாலத்தில் உயிருக்குப் போராடும் நிலையில் வரும் நோயாளிகளை காப்பற்ற முதலில் சிகிச்சைகளில் தான் கவனம் செலுத்த வேண்டும்.

நோயாளிகளின் case sheet ல் , விபரங்களை பதிவது என்பதை விட உடனடி முக்கியப் பிரச்சினை ,அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு நோயாளிகளை உயிரை காப்பதுதான். எத்தகையச் சூழலில் எத்தகைய சிகிச்சை முறைகள் வழங்கப்பட்டன, என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை எல்லாம் முழுமையாக விசாரித்து அறியாமல், ஒரு தலைபட்சமாக, முன்கூட்டியே முடிவு செய்து கொண்டு, சர்வாதிகாரப் போக்கோடு, மருத்துவக் கட்டமைப்பு குறைபாடுகளை மறைக்கும் நோக்குடன் மாவட்ட ஆட்சியர் , மாவட்ட சுகாதார அதிகாரிகள்,மாநகர சுகாதார அதிகாரிகள் செயல்படுவது கடும் கண்டனத்திற்குரியது. இத்தகைய அதிகார வர்க்கத்தின் ஆதிக்கப் போக்கிற்கு தமிழ்நாடு அரசு முடிவு கட்ட வேண்டும்.

மருத்துவத்துறை பரிசீலனைக் கூட்டம் என்பது, பிரச்சினைகளை முழுமையாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். அது குறைபாடுகளை சரி செய்வதற்கானதாக இருக்க வேண்டும். பிரச்சினைகள் எழும் பொழுது ஒரு சில தனிப்பட்ட நபர்களை குற்றவாளிகளாக்கும், பலிக்கடா ஆக்கும் போக்கிற்கு முடிவு கட்ட வேண்டும். அதே சமயம் தனிப்பட்ட நபர்களின் அலட்சியம், கவனக் குறைவு பிரச்சினைக்கு காரணமானால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

அரசு மருத்துவமனைகளில் போதுமான அளவு மகப்பேறு மருத்துவர்கள் உள்ளிட்ட சிறப்பு மருத்துவர்கள் இல்லை. கடும் பற்றாக்குறை நிலவுகிறது. அதைப் போக்கிட வேண்டும்.

மருத்துவக் கல்வி இயக்குனர் பிரிவில், தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னையில் உள்ள எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை முதல் பல்வேறு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் , மாவட்ட மருத்துவமனைகள், இரண்டாம் நிலை நகரங்களில் உள்ள பொது மருத்துவமனைகள் , சீமான்ங் (Cemonc) மைய மருத்துவ மனைகளில் மகப்பேறு மருத்துவர்கள் உள்ளிட்ட சிறப்பு மருத்துவர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. அதைப் போக்கிட வேண்டும்.

நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவர்கள், செவிலியர்கள், லேப் டெக்னீசியன்களுக்கான புதிய பணி இடங்களை உருவாக்கிட வேண்டும்.

மாதத்திற்கு 300 பிரசவங்கள் நடக்கும் அரசு மருத்துவமனைகளில் கூட மூன்று மகப்பேறு மருத்துவர்கள் மட்டுமே பணிபுரியும் அவல நிலை உள்ளது. அம்மருத்துவர்கள் மூன்று நாளைக்கு ஒரு முறை 24 மணி நேர வேலை செய்து வருகின்றனர். இது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். தொழிலாளர் விரோதப் போக்காகும்.இத்தகைய கடும் பணிச்சுமை மகப்பேறு மருத்துவர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது.இதனால் பலர் அரசு வேலையை விட்டே போய்விடுகின்றனர்.

மகப்பேறு மருத்துவர்கள் மற்றும் இதர மருத்துவர்களின் 24 மணி நேர பணியை ரத்து செய்ய வேண்டும். இது சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பிற்கு எதிரானதாகும். காலை 8 முதல் 2 மணிவரை, பிற்பகல் 2 முதல் 8 வரை, இரவு 8 முதல் காலை 8 மணிவரை என மூன்று சிஃப்ட்டுகளாக மகப்பேறு மருத்துவர்களின் பணி நேரத்தை மாற்ற வேண்டும். தொடர்ச்சியாக 24 மணி நேரப் பணி என்ற, அராஜகத்தை,மனித உரிமை மீறலை உடனடியாக கைவிட வேண்டும்.இது போன்ற 24 மணி நேர பணி நேரம் உருவாக்கும் கவனக்குறைவால், நோயாளிகளுக்கு பெரும் பாதிப்புகள் ஏற்படுகிறது என்பதை தமிழ்நாடு அரசு உணர வேண்டும்.

சில இடங்களில் பிரசவத்திற்கு பின்பு தாய்க்கு ஏற்படும் அதிக உதிரப்போக்கு போன்ற காரணங்களுக்காக, அவசர சிகிச்சைக்கு கிட்டத்தட்ட 90 கிலோமீட்டர் தொலைவில் உள்ள வேறொரு அரசு மருத்துவ மனைக்கு அனுப்ப வேண்டிய சூழல் இருக்கின்றது.

பிரசவம் நடைபெறுகின்ற பல அரசு மருத்துவமனைகளில், மகப்பேறு மருத்துவர், குழந்தைகள் மருத்துவர்,மயக்க மருத்துவர், போதிய செவிலியர்கள் இல்லாத நிலை உள்ளது. செயல்படும் நிலையில் அறுவை அரங்கம்,இரத்த வங்கி போன்றவை இல்லாமலும் உள்ளது.

இதனால், பிரசவத்தின் பொழுது ஏதேனும் திடீர் சிக்கல் ஏற்பட்டால் தாயையும் ,சேயையும் காப்பாற்ற முடியாத நிலை ஏற்படுகிறது. இதற்கு, மருத்துவர்கள் பலிக்கடா ஆக்கப்படுகிறார்கள். இக்குறைபாடுகளை களைய வேண்டும்.

பேறுகாலத் தாய் மரணம் என்பது ஒரு லட்சம் உயிருள்ள குழந்தை பிறப்பிற்கு எத்தனை தாய் மரணம் ஏற்படுகிறது என்று கணக்கிடப் படுகிறது.

தமிழ்நாட்டில் பேறுகாலத் தாய் மரணம், ஒரு லட்சம் உயிருள்ள குழந்தை பிறப்பிற்கு 54 தாய் மரணம் என்ற விகிதத்தில் உள்ளது.

அதே நேரத்தில், கேரளாவில் இந்த விகிதம் 19 ஆக மிகவும் குறைந்துள்ளது. பேறுகால இறப்பு குறைவாக உள்ளதில், முதல் மாநிலமாக கேரளா உள்ளது. இரண்டாவது மாநிலமாக மகாராஷ்டிராவில் இவ்விகிதம் 33 ஆக உள்ளது.

தமிழ்நாட்டில் சிறு முன்னேற்றம் இருந்தாலும் கூட, கடந்த சில ஆண்டுகளாகவே பேறுகால தாயின் மரண விகிதம் தமிழ்நாட்டில் தொடர்ந்து 50 க்கும் மேலாகவே இருந்து வருகின்றது.

கேரளாவில் பேறு கால மரணம் 30 லிருந்து 19 ஆகவும், மகாராஷ்டிராவில் 38 லிருந்து 33 ஆகவும்,தெலங்கானாவில் 56 லிருந்து 43 ஆகவும் , ஆந்திராவில் 58 லிருந்து 45 ஆகவும் குறைந்துள்ளது.

இவ்வாறு தொடர்ந்து மற்ற மாநிலங்களில் ,பேறுகால இறப்பு குறைப்பில் நல்ல முன்னேற்றம் இருக்கும் பொழுது, தமிழ்நாட்டில் தொடர்ந்து பேறுகால தாய் மரணங்கள் குறையவில்லை என்பது கவலையோடு கவனிக்கத்தக்கது.

இம்மாநிலங்களின் அனுபவங்களை தமிழ்நாடு ஆராய்ந்து, கடைபிடிக்க வேண்டும்.

கர்ப்பிணிப் பெண்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலேயே பெரிய அரசு மருத்துவமனைகள் இருந்தாலும் கூட , அப் பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் தான் பிரசவம் பார்க்க வேண்டும் என்று கர்ப்பிணிகளை வற்புறுத்துவது சரியல்ல.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற வசதி குறைவான மருத்துவமனைகளில் பிரசவ எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என , இலக்கு (Target) நிர்ண யித்து செயல்படுவது பல்வேறு எதிர்மறை பாதிப்புகளை உருவாக்குகிறது.

அரசு மருத்துவமனைகளில் பெரும்பாலும் மருத்துவக் காப்பீடு அடிப்படையில் மருத்துவசிகிச்சை வழங்கப் படுவதால் , காப்பீடு தொடர்பான எழுத்து பணிகளில் பயிற்சி மருத்துவர்கள், முதுநிலை மருத்துவ மாணவர்கள், அரசு மருத்துவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதனால், நோயாளிகளை மருத்துவர்கள் சரியாக கவனிக்க முடிவதில்லை.

எனவே, உடனடியாக மருத்துவக் காப்பீட்டு திட்டத்தை அரசு மருத்துவமனைகளில் நடைமுறைப் படுத்துவதை கைவிட வேண்டும்.

சென்னை மாநகராட்சி உள்ளிட்ட மாநகராட்சி மற்றும் உள்ளாட்சி மருத்துவமனைகளை அரசு மருத்துவமனைகளுடன் இணைக்க வேண்டும்.

அரசு மருத்துவமனைகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்வதற்கு, போதாமைகளை அறிந்து கொள்வதற்கு ,அரசு மருத்துவர்களிடம் ,மருத்துவத் துறை பணியாளர்களிடம் பிரச்சினைகளைக் கேட்டறிய வேண்டும். அதன் அடிப்படையில் குறைகளை போக்க வேண்டும்.

உலக நல நிறுவனம் (WHO) மற்றும் ஒன்றிய அரசு (Indian Public Health Standard PHC,CHC, District Hospital), அரசு மருத்துவமனைகளின் தரம் குறித்தும், இருக்க வேண்டிய கட்டமைப்புகள் குறித்தும் வெளியிட்டுள்ள, வழிகாட்டுதல்களின் அடிப்படையில் அனைத்து கட்டமைப்புகளையும் உடனடியாக மேம்படுத்த வேண்டும்.

தொடர்புக்கு: 9940664343

## ⟵ முக்கிய அறிவிப்பு ⟶

ஜனசக்திக்கு எழுதும் கட்டுரைகள் 500 வார்த்தைகளுக்கு மிகாமல் டைப் செய்து வேர்டு பைலில் இமெயிலில் அனுப்ப வேண்டும் வாரம் தோறும் திங்கள்கிழமைக்குள் கிடைக்க வேண்டும்.

இயக்கச் செய்திகளை டைப் செய்து, செவ்வாய்க்கிழமை பகல் 1 மணிக்குள் ஜனசக்திக்கு கிடைக்கும் வகையில் இமெயிலில் மட்டும் அனுப்ப வேண்டும். யாருடைய வாட்ஸ்அப் எண்ணுக்கும் அனுப்பக் கூடாது.

பிரச்சார நோட்டீஸ், மனுக்கள் போன்றவற்றை அப்படியே அனுப்பக் கூடாது. அவற்றை செய்தி வடிவில் சுருக்கி அனுப்ப வேண்டும்.

ஜனசக்தி உள்ளடக்கம் குறித்த தொடர்புக்கு:

**டி.எம்.மூர்த்தி**, ஆசிரியர்: **9444360869**

**த.லெனின்: 9444481730**

ஜனசக்தி சமூக ஊடகங்கள் தொடர்புக்கு:

**வ.மணிமாறன்: 9500001224**

இயக்கச் செய்திகள் குறித்த தொடர்புக்கு:

**பிரதாப் சந்திரன்: 9382679798**

ஜனசக்தி விநியோகம், சந்தா குறித்த தொடர்புக்கு:

**கே.கணேசன்: 9444331138**

ஜனசக்தி பணம் செலுத்துதல் சம்பந்தமான தொடர்புக்கு:

**இளசை கணேசன்: 8220468816**

**ஆசிரியர் குழு, ஜனசக்தி**

# எம்.எஸ்.சுவாமிநாதன் மறைவிற்கு மவுன ஊர்வலம்



விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் மறைவையொட்டி மவுன ஊர்வலமும் அவரது படத்திற்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது. வட்ட செயலாளர் கோவிந்தன் தலைமை வகித்தார். தேசியகுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, தவிச மாவட்ட செயலாளர் சவுந்திரபாண்டியன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.



அருண் நெடுஞ்செழியன்

# இடதுசாரி ஊடகங்களை கண்டு அஞ்சும் ஆர்.எஸ்.எஸ் – பாஜக

# உண்மையைப் பேசினால் தேச விரோதமா?

**“ஜனநாயகத்தின் தாய் இந்தியா” என உலக அரங்கில் அலங்கார சொற்களால் உரை நிகழ்த்துகிற பிரதமர் மோடி, நடைமுறையிலோ இந்தியாவில் ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைக்கிற முதல் ஆளாக செயல்படுகிறார்.**






பாஜக –ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தத்தை, அதன் செயல்பாடுகளை எதிர்ப்பவர்கள் இந்த நாட்டில் இருக்கவே கூடாது என்ற எண்ணத்தில் ஒரே நாடு ஒரே கட்சி என்ற முழக்கத்தின் கீழ் எதிர்க்கட்சிகளை அமலாக்கத்துறை மூலமாக மிரட்டி ஒடுக்குவது; ஊடகங்களை மிரட்டி அச்சுறுத்துவது என்பதை முதன்மைப் பணியாக மேற்கொண்டு வருகிற பாஜக. தற்போது தங்களுக்கு ஒத்துழைக்காத ஊடகங்களை சட்டப்பூர்வ வன்முறையின் துணையுடன் அச்சுறுத்துகிறது.

கடந்த அக்டோபர் 3 ஆம் தேதி, இந்தியாவில் ஊடக சுதந்திரத்திற்கு கறுப்பு நாளாக விடிந்தது. அன்றைய தினம் அதிகாலை 6 மணி அளவில் தீவிரவாதிகளை சுற்றி வளைப்பது போல, இடதுசாரி கருத்தியலை பேசுகிற நியூஸ்க்ளிக் என்ற ஆங்கில செய்தி இணையதளத்தின் ஆசிரியர் பிரபீர் புர்கயஸ்தா மற்றும் அதன் மனித வளத்துறை தலைவர் அமித் சக்ரவர்த்தி ஆகியோரை சட்ட விரோதநடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தில் (UAPA) டெல்லி காவல்துறை கைது செய்துள்ளது. நியூஸ்கிளிக் டெல்லி அலுவலகத்திற்கும் சீல் வைக்கப்பட்டுள்ளது.

இவர்களோடு இப்பத்திரிக்கையில் பங்களிப்பு செய்கிற மூத்த பத்திரிகையாளர்கள், அரசியல் விமர்சகர்கள், பகுதிநேர ஊழியர்கள் என 46 பேரின் வீடுகளில் சோதனை என்ற பெயரில் போலீஸ் வன்முறை ஆட்டம் நடத்தியது. பிறகு அவர்களின் கைப்பேசி, லேப்டாப் சாதனங்களை பறித்துவைத்துக் கொண்டதுடன், சுமார் 10 மணி நேரமாக போலீஸ் நிலையத்தில் விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

நியூஸ்கிளிக் இணையதளத்திற்கு சீனாவின் ஆதரவு அமைப்பிடமிருந்து நிதியுதவி (funding) வருவதாக அமெரிக்காவின் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையானது, கடந்த ஆகஸ்ட் மாதத்தில் செய்தி வெளியிட்டிருந்தது. இந்தக் கட்டுரையை முகாந்திரமாகக் கொண்டு வழக்குப்பதிவு செய்ததாக கூறும் டெல்லி காவல்துறை, பத்திரிகையாளர்கள் வீட்டில் நடைபெற்ற சோதனை, விசாரணை, கைது நடவடிக்கையை நியாயப்படுத்துகிறது.

நாயை கொல்ல வேண்டும் என்றால், அதற்கு முதலில் வெறி நாய் என்று பெயர் வைக்க வேண்டும் என்றொரு சொல் வழக்கு நம் ஊரில் உள்ளது. அதுபோல ஆர்.எஸ்.எஸ் பாஜகவிற்கு எதிரான ஊடகங்களை அச்சுறுத்தி முடக்க வேண்டும் என்றால் அதற்கு முதலில் சீன ஆதரவு, தேசத்துரோகி பட்டம் கொடுக்க வேண்டும். பின்பு உடனடியாக ஜாமீனில் வெளிவர முடியாத, ஆள்தூக்கி சட்டத்தில் கைது செய்ய வேண்டும். இதுவே பாஜகவின் பொதுவான உத்தியாகும்.

ஒன்றிய அரசின் இந்தக் குற்றச்சாட்டு போலியானது; ஜோடிக்கப்பட்டது என நியூஸ் கிளிக் நிறுவனம் மறுத்துள்ளது. மேலும், நியூஸ்கிளிக் பத்திரிகையாளர்களிடம் விசாரணை நடத்திய டெல்லி சிறப்புக் காவல் துறையினர், டெல்லியில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்திற்கு ஆதரவாக செயல்பட்டது குறித்தும் டெல்லி வகுப்புவாத கலவரம் தொடர்பான செய்திகள் குறித்தும் மீண்டும் மீண்டும் கேள்வி எழுப்பியது குறிப்பிடத்தக்கது.

“ஒன்றிய அரசின் கொள்கைகள் மீதான விமர்சனங்கள் தேசப் பாதுகாப்பிற்கு எதிரானது ஆகாது” என மீடியாஒன் ஊடகத்தின் மீதான ஒன்றிய அரசின் தடையை ரத்து செய்து உச்சநீதிமன்றம் அண்மையில் அதிரடி தீர்ப்பு வழங்கியது குறிப்பிடத்தக்கது. மேலும் “அரசு அதிகாரத்தை நோக்கி உண்மையைப் பேசுவதும் குடிமக்களுக்கு உண்மை நிலைமையை எடுத்துக் கூறுவதும் ஊடகத்தின் கடமையாகும். நாட்டின் சமூகப் பொருளாதாரம், அரசியல் சித்தாந்தம் போன்றவை குறித்து தாங்கள் விரும்பும்படியான, ஒற்றை நோக்கு கருத்துக்களை மட்டுமே பேச வேண்டும் என நினைப்பது, நாட்டின் ஜனநாயகத்திற்கு புதைகுழி வெட்டும் செயலாகும்” என்று 134 பக்க தீர்ப்பில், ஒன்றிய அரசின் ஊடக சர்வாதிகாரப் போக்கு குறித்த கடுமையான வார்த்தைகளை உச்சநீதிமன்றம் பயன்படுத்தியதை இங்கே நினைவுபடுத்திப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

மீடியா ஒன் மீதான பாசிஸ்ட்களின் வன்முறைக்கு எதிராக நீதிமன்றத்தின் படியேறி நீதி பெற்ற ஊடகங்கள், நியூஸ் கிளிக் மீதான சட்ட விரோதநடவடிக்கைகள் தடுப்புச் சட்ட (UAPA) வழக்கையும் கைது நடவடிக்கையையும் உடனடியாகத் தடுக்க வேண்டும் என உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு கூட்டாக கடிதம் எழுதியுள்ளனர்.

பாசிஸ்ட்களும் ஊடக சுதந்திரமும்:

பாசிஸ்ட்களின் பொதுவான குணாம்சங்களில் ஒன்று, தங்களை நாகரிகமான கண்ணியமான அரசியல்வாதிகளாக வெளி உலகிற்கு காட்டிக் கொண்டு திரைமறைவில் சட்டப்பூர்வ வன்முறையை ஏவி விடுவார்கள். முசோலினியின் பாசிசம், ஜெர்மனியின் நாசிசம் ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இவர்கள் முதலாளித்துவ ஜனநாயகத்திற்கு பொருத்தமான அரசியல்வாதியாக தங்களைக் காட்டிக் கொண்டே குண்டர் படைகளால் ஒருங்கிணைக்கப்பட்ட வன்முறையை நிகழ்த்தியவர்கள். இந்த அடிச்சுவட்டை ஆர்எஸ்எஸ் பாஜக வெற்றிகரமாக பின்பற்றி வருவதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை.

பிரதமர் நரேந்திர மோடி, அமித்ஷா ஆகிய இரு முக்கிய அதிகார மையங்களும் முதலாளிய அரசியல்வாதிகளாக, தங்களை கச்சிதமாக பொருத்திக் கொண்டு நாகரிகமாகவும் கண்ணியமாகவும் நடந்துகொண்டு, தொழில் அதிபர்களின் ஆதரவைப் பெறுகின்றனர். மறுபுறம் சட்டப்பூர்வ வன்முறையைக் கொண்டு ஜனநாயகத்தின் குரல்வளையை நெறிக்கின்றனர். இஸ்ரேல் பாலஸ்தீன போருக்கு உடனடியாக குரல் கொடுக்கிற பிரதமர் மோடி, மணிப்பூர் கலவரம் குறித்து கள்ள மௌனம் காப்பது தற்செயலானது அல்ல!

தற்போது வலதுசாரி சக்திகளின் சட்டப்பூர்வ வன்முறை மற்றும் சட்டத்திற்கு புறம்பான வன்முறைகளால் இந்தியாவில் முற்போக்கு சக்திகள் வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன. சிதறுண்ட எதிர்க்கட்சிகள் “இந்தியா” என்ற கூட்டணியை உருவாக்கியுள்ளதை ஆரோக்கியமான வளர்ச்சியாகப் பார்க்கிற அதே நேரத்தில் வெற்று அறிக்கைகள் மட்டுமே பாசிஸ்ட்களை கட்டுப்படுத்தாது. தற்போது இந்திய அரசின் தன்னாட்சி நிறுவனங்கள் இந்துத்துவ சித்தாந்த செல்வாக்கால் சீரழிந்து வருகின்றன. தாராளமய ஜனநாயக சக்திகள் நீதிமன்றத்தில் தஞ்சம் அடைந்துள்ளன.

ஆனால் ஜனநாயகம் என்றால் என்னவென்று தெரியாத ஆர்எஸ்எஸ் அமைப்பும், அதன் அரசியல் கட்சித் தலைவர்களும் ஜனநாயகம் குறித்து பகட்டாக வெளிநாட்டு மாநாடுகளில் கதையளப்பதும், உள்நாட்டில் எதிர்க்கட்சிகளையும் ஊடகங்களையும் நாஜிக்களை மிஞ்சி சர்வாதிகரமாக ஒடுக்குவது என முரணின் முகவரியாக செயல்பட்டு வருகின்றனர்.

ஆர்.எஸ்.எஸ் – பாஜக அமைப்பு முழு அரசாங்கமாகி விட்டது. அதன் கட்டுப்பாடற்ற அதிகார வன்முறை வெறியாட்டமானது, வெற்றி முரசு கொட்டியபடி பீடுநடை போடுகிறது. பாசிசம் எதார்த்த உண்மையாகிக் கொண்டிருக்கிறது!

நாடு முழுவதும் முற்போக்காளர்கள், ஜனநாயக சக்திகள் ஓரணியில் திரள வேண்டிய வரலாற்றுத் தேவை அவசர அவசியமாகிவிட்டது!

தொடர்புக்கு: 9842391963

# சிறுபான்மையினர்களுக்கு எதிராக வன்முறை, வெறுப்பு அபாயகரமாக அதிகரிப்பு

## உள்துறை அமைச்சருக்குப் பினாய் விஸ்வம் எம்பி கடிதம்

நாட்டில் தொடரும் அடித்துக் கொல்லும் கும்பல் வன்முறை குறித்து ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்களுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசியக்குழு செயலாளர் பினாய் விஸ்வம் எழுதிய கடிதம் வருமாறு:

“நாட்டின் ஜனநாயக உணர்வுள்ள மதசார்பற்ற மக்களுக்கு வலியும் வேதனையும் அளித்த ஒரு நிகழ்வு குறித்து உங்களுக்கு நான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். ஒரு பழ வியாபாரியின் மாற்றுத் திறனாளி இளைய மகன் டெல்லி வடகிழக்கின் சுந்தர் நகரியில் கொடூரமாக அடித்துக் கொல்லப்பட்டான். தாக்குதல் நடத்தியவர்கள் வெட்கமற்று அந்த நிகழ்வைப் படம் பிடித்துள்ளனர். முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த புத்தி சுவாதினமற்ற அந்தப் பையன் ஒரு கோயில் அருகே ஸ்டாலில் வைக்கப்பட்டிருந்த ‘பிரசாதத்தை’த் திருடி விட்டான் என்றும், அது குறித்து தாக்குதல் நடத்தியவர்கள் விசாரித்தபோது அவனால் பதிலளிக்க முடியவில்லை என்றும் சொல்லப்பட்டது. அதன் விளைவாய் அவனை ஒரு காவித் துணியால் மரத்தில் கட்டிவைத்து இரக்கமற்று முஷ்டியாலும், தடிகளாலும் அவன் இறக்கும் வரை உதைக்கப்பட்டிருக்கிறான்.

அடித்தே கொல்லுகின்ற இந்தக் காட்டுமிராண்டித்தன நிகழ்வு, நமது சமூகத்தை வகுப்புவாத விஷத்தால் தீவிரமாக நச்சாக்கியுள்ளது. சிறுபான்மையின மக்களைப் பொதுவெளி உரையாடலில் பேய்பிசாசாகச் சித்தரிக்குமளவு சட்டம் ஒழுங்கும், நமது குடியரசின் விழுமியங்களும் சீர்குலைக்கப்பட்டுள்ளன. நமது குடியரசு, மதச்சார்பின்மை மற்றும் சகோதரத்துவ விழுமியங்களின் அடிப்படையில் கட்டி அமைக்கப்பட்டது. ஆனால் இப்போது முழுமையும் வெறுப்பு மற்றும் பிளவுகளால் சூழப்பட்டுள்ளதன் விளைவாய் இத்தகைய கொடூர நிகழ்வுகள் அரங்கேறுகின்றன. துரதிருஷ்டமான இந்நிகழ்வுகள் தனித்த ஒன்றல்ல, மாறாக பரப்பப்படும் பொய்த் தகவல்கள், வகுப்புவாதத்தில் தூண்டப்பட்ட பிரச்சாரம் மற்றும் பிளவுபடுத்தலின் சங்கிலித் தொடர் நிகழ்வுகளாகும்.

சிறுபான்மையினர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் வெறுப்பு, அச்சுறுத்தும் அளவு அதிகரிப்பதன் பின்னணியில், அரசியல் லாபங்களுக்காகச் சமூகத்தைத் தீவிரமாக வகுப்புவாதமாக்குவதன் வெளிப்பாடான இந்நிகழ்வை மிகக் கடுமையாக அணுகும்படி நான் உங்களை வற்புறுத்துகிறேன். நேரடியாக உங்கள் பொறுப்பில் உள்ள டெல்லியின் சட்டம் ஒழுங்கு நிர்வாகம், இந்த அளவு சீர்குலைந்து மோசமாவது ஒவ்வொருவருக்கும் கவலையளிப்பதாகும். இந்த வெறுப்புக் குற்றச் செயலில் பாதிக்கப்பட்டவரின் உறவினருக்குத் தாராளமான நிவாரணம் வழங்குவதும், தாக்குதல் நடத்திய குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி சட்டத்தின் கடுமையான பிரிவுகளின் கீழ் தண்டிக்கப்படவும் வேண்டும். இந்த அதிர்ச்சி அளிக்கும் நிகழ்வு உங்களின் உடனடி கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என நான் நம்புகிறேன்.” என தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# தத்துவார்த்த ரீதியாக சிந்தித்து அமைப்பு ரீதியாக செயல்படுபவர்கள் கம்யூனிஸ்டுகள்




தத்துவார்த்த ரீதியாக சிந்தித்து அமைப்பு ரீதியாக செயல்படுபவர்கள் கம்யூனிஸ்டுகள் என்று வேலூர் சிறப்பு பேரவை கூட்டத்தில் தோழர் கே சுப்பராயன் எம் பி பேசினார்.

வேலூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சிறப்பு பேரவை கூட்டம் வேலூர் விருப்பாட்சிபுரம் விஜயலட்சுமி தீனதயாளன் திருமண மண்டபத்தில் நடந்தது. இச்சிறப்பு பேரவை கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜி. லதா தலைமை தாங்கினார். வேலூர் மாநகர செயலாளர் எம். ஜீவா வரவேற்று பேசினார். இதில் ஏ ஐ டி யு சி மாநில தலைவர் காசி விஸ்வநாதன் வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட மைய உறுப்பினர் எல். மணி, மாவட்ட துணைச் செயலாளர் துரைச்செல்வம். அமைப்பு நிலை மற்றும் ஜனசக்தி, தாமரை இதழ் களின் விற்பனை குறித்து பேசினார்.

சிறப்பு அழைப்பாளராய் கலந்து கொண்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டுக்குழு தலைவர் கே. சுப்பராயன் எம்.பி.தற்கால அரசியல் நிலவரமும் நமது கடமைகளும் எனும் தலைப்பில் பேசினார்.

கம்யூனிஸ்டுகள் என்பவர்கள் தத்துவ ரீதியாக சிந்திப்பவர்கள் அமைப்பு ரீதியில் இயங்குபவர்கள். எதையும் கூடி விவாதித்து உண்மை அறிபவர்கள். இந்தியர்களுக்குள் மூடநம்பிக்கைகளும் மத நம்பிக்கையும் வேரூன்றி உள்ளது. இதனால் மோடி போன்ற விஷ முள் செடி வளர்வதற்கு வாய்ப்பாக உள்ளது.

மோடி ஆட்சியிலே அம்பானி அதானிகளுக்கு பல லட்சம் கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ஆனால் கல்விக் கடன் பெற்று படித்த மாணவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை அதனால் கடன் திருப்பிக்கட்ட இயலவில்லை. தனியார் நிறுவனங்கள் மூலம் கடன் பெற்றவர்கள் மிரட்டப்படுகிறார்கள், அவமானப்படுத்தப்படுகிறார்கள். அதனால் கல்வி கடன் பெற்ற மாணவர்கள் தற்கொலை நிலைக்கு தள்ளப்படும் கொடுமை நடக்கிறது.

மோடி ஆட்சியிலே ஏழரை லட்சம் கோடி ஊழல் நடந்துள்ளது. இதை நாம் சொல்லவில்லை. மத்திய அரசின் கீழ் செயல்படும் மத்திய கணக்காயர் குழு செயல்படுத்தப்பட்ட திட்டங்களை ஆய்வு செய்து ஊழலை அம்பலப்படுத்தி உள்ளது. இறந்து போனவர்களுடைய பெயரில் நிதி வழங்கியுள்ள கேவலம் தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. மோடி அரசு வெட்கப்பட வேண்டிய விஷயம் இது.

இந்தியா முழுவதும் அக்டோபர் இரண்டாம் தேதி காந்தி பிறந்த தினத்தை கொண்டாடுகிறது. ஆனால் காந்தியை கொன்ற நாதுராம் கோட்சேவுக்கு சிலை வைக்க வேண்டும் என்று ஆர். எஸ். எஸ்., பி. ஜே. பி. யினர் செயல்படுகின்றனர். இந்திய மக்களின் நலனுக்கு எதிரான ஜனநாயகத்திற்கு எதிரான மோடி அரசு அகற்றப்பட வேண்டும். இவ்வாறு பேசினார்.

இதில் மாவட்ட குழு, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள், இடைக்கமிட்டி உறுப்பினர்கள், கிளைச் செயலாளர்கள், வர்க்க வெகுஜன அரங்க பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பயிர் காப்பீடு வழங்குவதில் பாரபட்சம்

### தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டன ஆர்ப்பாட்டம்

ராமநாதபுரம் மாவட்டம் போகலூர் ஒன்றியம் பாண்டி கம்மாய் குரூப்பில் உள்ள 11 கிராமங்களுக்கு பயிர் இன்சூரன்ஸ் தொகை வழங்கப்படவில்லை. 1500 ஏக்கர் பரப்பளவில் பயிரிட்ட நெற்பயிர்கள் முற்றிலும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ 3000 மட்டும் காப்பீட்டுத் தொகை தற்போது அறிவிக்கப் பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் ரூ 26000 வழங்கிய நிலையில், சில பகுதிகளில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழுமையான அளவில் இழப்பீடுகள் கிடைப்பதில்லை. எனவே அரசு காப்பீடு நிறுவனங்கள் மூலம் பயிர் காப்பீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்கிற கோரிக்கைகளை வலியுறுத்தி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, தமிழ் நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் மாவட்டத் தலைவர் கே. ஜீவா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஏ. ஐ. டி. யு. சி. மாவட்ட பொதுச் செயலாளர் என். கே. ராஜன், சிபிஐ மாவட்டச் செயலாளர் என்.எஸ். பெருமாள், விவசாய சங்க மாவட்டச் செயலாளர் ஆர். கருணாநிதி, சி. பி. ஐ. பரமக்குடி நகர் செயலாளர் கே. ஆர். சுப்பிரமணியன், பாண்டி கன்மாய் கிராம விவசாய சங்க பொறுப்பாளர் கே. ஆதிமூலம் உள்ளிட்டோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

# பாஜகவின் பொய் செ...

## அம்பலப்படுத்து...



வ.மணிமாறன்

**பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாஜகவும்; அதனுடன் இணைந்த சங் பரிவார் அமைப்புகளும் அரசியல் நோக்கங்களுக்காக சமூக ஊடகங்களை பயன்படுத்துவதில்(?) உலக அளவில் முன்னணியில் உள்ளன.**

இந்து தேசியவாத சித்தாந்தத்தை முன்னெடுத்துச் செல்லவும், உலகின் மிகப்பெரிய தேர்தல் ஜனநாயகத்தின் மீதான தங்களின் பிடியை மேலும் இறுக்கவும் சமூக ஊடகங்களில் தீவிரமான பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதில் பெரும் வெற்றியையும் ஈட்டியுள்ளனர். இந்த பரப்புரைகள் அனைத்திலும் பொய்யும் வெறுப்பும் மதவெறியுமே நிறைந்திருக்கின்றன.

பாஜகவின் இந்த வெற்றிக்கு அடித்தளமாக இருப்பது, முகநூல், டுவிட்டர், வாட்ஸ்ஆப் போன்ற சமூக ஊடகங்களில் கட்டமைக்கப்பட்ட செய்திகளைப் பரப்புவதற்கான மிகப்பெரிய வலைப்பின்னல் (நெட்வொர்க்) ஆகும். இதனைப் பயன்படுத்தி மதச் சிறுபான்மையினரை தனிமைப்படுத்தியும்; அரசின் மீதான விமர்சனங்களை நசுக்கியும் வருகின்றனர். இந்து தேசியவாத நிகழ்ச்சி நிரலை செயல்படுத்த பிரதமர் மோடியுடன் இணைந்த வலதுசாரி சக்திகளின் பரந்த முயற்சியின் ஒரு பகுதிதான் சமூக ஊடகத் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது. இது பற்றி விரிவாக ஆய்வு செய்து வாஷிங்டன் போஸ்ட் கட்டுரை வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் மிகப்பெரிய பொய் செய்தி தொழிற்சாலையாக இயங்கிக் கொண்டிருக்கும் பாஜக தகவல்நுட்பப்பிரிவின் (ITcell) செயல்பாடுகளை இந்தக் கட்டுரை வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளது. இந்த பொய் செய்தி தொழிற்சாலை எப்படி இயங்குகிறது? வெறுப்பு பரப்புரை எப்படி மேற்கொள்ளப்படுகிறது? என்பது குறித்து பல முக்கியமான தகவல்கள் இதன் மூலம் வெளி உலகிற்கு தெரியவந்துள்ளது.

கர்நாடகா மாநிலத்தில் அண்மையில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தல் நடப்பதற்கு




சில மாதங்களுக்கு முன்பே வாஷிங்டன் போஸ்ட் செய்தியாளர்கள் அங்கு சென்று, ஆய்வு மேற்கொண்டனர். பாஜகவின் தகவல் நுட்பப் பிரிவு உறுப்பினர்கள் எப்படி எல்லாம் வேலை செய்கிறார்கள் என்பதை அவர்களுடன் நெருக்கமாக இருந்து தெரிந்துகொண்டனர்.

பாஜக தகவல் நுட்பப் பிரிவு இந்து மக்களிடம் அச்சத்தை ஏற்படுத்தி, எப்படி வாக்குகளாக மாற்றுகின்றனர் என்பதை வாக்குமூலங்களாகப் பெற்றுள்ளனர். கர்நாடக மாநில பாஜக தகவல் நுட்பப் பிரிவில் அதிகாரப்பூர்வமாக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பேர் வேலை செய்வதாக அதன் முன்னாள் மாநில தலைவர் வினோத் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வாஷிங்டன் போஸ்ட் கட்டுரையின் தொடக்கத்தில், கர்நாடக மாநிலம் மங்களூர் அருகே உள்ள சிறிய கிராமத்தைச் சேர்ந்த வங்கி ஊழியர் சச்சின் பாட்டீலின் வாக்குமூலம் இடம்பெற்றுள்ளது. அதில், அவருடைய வாட்ஸ்ஆப் எண்ணுக்கு பாஜக தரப்பினர் ஏராளமான செய்திகளை அனுப்பியுள்ளனர். தொடக்கத்தில் பாஜக அரசு போட்டுள்ள சாலைகள், புதிதாக கட்டப்பட்ட பள்ளிகள், ஏழைகளுக்கு இலவச உணவு போன்ற செய்திகளை அனுப்பி வந்துள்ளனர். தேர்தல் நெருங்க நெருங்க பரப்புரையின் வடிவத்தையே பாஜக மாற்றியுள்ளது. அதாவது, கர்நாடகாவில் உள்ள முஸ்லிம்கள் சிலரால், கொல்லப்பட்ட இந்துக்களின் பெயர்கள் என்று ஒரு பட்டியலை அனுப்பினர்.

அடுத்து, இந்து சிறுமிகளை லவ்ஜிஹாத் முறையில் இஸ்லாமிய இளைஞர்கள் காதலித்து அவர்களை ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில் சேர்த்து விடுதாக செய்திகளை அனுப்பியுள்ளனர். அதில், "உங்கள் (இந்து) வீட்டுக் குழந்தைகள் பாதுகாப்பாக இருக்க பாஜகவுக்கு வாக்களியுங்கள். இந்துக்களின் இந்தியாவை ஆளுகின்ற இந்து தேசியவாத பாஜகவுக்கே உங்கள் ஓட்டு" என்பன போன்ற மத வெறுப்பு செய்திகளை தொடர்ந்து அனுப்பி உள்ளனர்.

ஒரு நாளைக்கு குறைந்தது 6 வாட்ஸ் ஆப் குழுக்களில் இருந்து 120க்கும் மேற்பட்ட செய்திகள் அவருக்கு

## மால்வியாவுக்கு சிறப்புரிமையா? ஆபத்து

உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் பற்றி இன்ஸ்டாகிராமில் பத்திரிகையாளர் குழு பதிவு ஒன்றைப் போடுகிறது. அந்தப் பதிவை இன்ஸ்டாகிராம் நீக்கிவிட்டது. அது குறித்து மறு ஆய்வு (ரிவியூ) செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதற்கு, அதற்கான அவசியம் இல்லை என இன்ஸ்டாகிராம் நிர்வாகம் மறுத்துவிட்டது. இப்பிரச்சனை குறித்து 'தி வயர்' ஆய்வு செய்ததில், பாஜக தகவல் தொழில்நுட்ப பிரிவை(ஐடி செல்) சேர்ந்த அமித் மால்வியா புகார் அளித்து (ரிப்போர்ட்) அந்தப் பதிவு நீக்கப்பட்டிருக்கிறது.

பேஸ்புக், வாட்சாப், இன்ஸ்டாகிராம் இவற்றின் தாய் நிறுவனமான மெட்டா(விமீஜீணி), பிரபலங்களுக்குச் சிறப்புரிமை ஒன்றை வழங்கியிருக்கிறது. அதற்கு ஹீசிலீமீநீளீ ஜீக்ஷீஷீரீக்ஷீணீனீ என்று பெயர். இந்த ஹீசிலீமீநீளீ ஜீக்ஷீஷீரீக்ஷீணீனீ எனப்படும் சிறப்புரிமை கொடுக்கப்பட்டவர்கள் ஆய்வே (ரிவியூ) இன்றி முகநூல், இன்ஸ்டாகிராம் போன்றவற்றில் உள்ள பதிவுகளை நீக்க முடியும். இந்தியாவில் இந்த சிறப்புரிமை மால்வியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது என தி வயர் கூறுகிறது. ஆனால் மெட்டா செய்தித்தொடர்பாளர் ஸ்டோன், அப்படி சிறப்புரிமை மால்வியாவுக்கு வழங்கப்படவில்லை என மறுத்தார். ஆனால், மெட்டா செய்தித் தொடர்பாளர் ஸ்டோன் அனுப்பிய இமெயில் ஆதாரத்தை தி வயர் வெளியிட்டது. இந்த சர்ச்சையில், தி வயர் கூறியதுதான் உண்மை என்பது பலருடைய அனுபவம். ஜனசக்தி முகநூல் பக்கமும் இதுபோன்ற சிக்கலை சந்தித்துக் கொண்டிருக்கிறது. மெட்டா நிறுவனம் பாஜகவுக்கு கைகட்டி நிற்பது ஜனநாயகத்துக்கும் சுதந்திரமான தகவல் தொழில்நுட்ப செயல்பாடுகளுக்கும் எதிரானது. கண்டிக்கப்பட வேண்டியது.

# சய்தி தொழிற்சாலை

## துகிறது வாஷிங்டன் போஸ்ட்






வந்துள்ளன. அவற்றைப் படிக்கும் சாதாரண மக்கள் பாஜகவுக்குதான் வாக்களிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தக் கூடியதாக அந்தச் செய்திகள் இருந்தன என்றும் சச்சின் பாட்டீல் கூறியிருக்கிறார்.

வாக்காளர் பட்டியலகளை கையில் வைத்துக் கொண்டு, வீடு வீடாகச் சென்று தகவல்களை சேகரித்து வாட்ஸ்ஆப் குழுக்களில் அவர்களை இணைத்தனர். இப்படி உருவாக்கப்பட்ட குழுக்களில் பரப்புரை செய்வதற்காக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ஊழியர்களை பாஜக பணியில் அமர்த்தி இருந்தது.

இந்த சமூக ஊடக கட்டமைப்பு, மத வெறுப்பு, வதந்தி, பொய் போன்ற வன்மங்களை பரப்புவதற்கே பாஜகவுக்கு பயன்பட்டிருக்கிறது. மேலும் காங்கிரஸ் கட்சி குறித்த தவறான எண்ணங்களை மக்களிடம் பரப்புவதற்கான பணிகளில் நாள்தோறும் பாஜகவினர் ஈடுபட்டனர் என்றும் வாஷிங்டன் போஸ்ட் தெரிவித்திருக்கிறது.

பாஜகவின் அதிகாரப்பூர்வ இணைய வழி பரப்புரையுடன், பாஜக நிர்வாகிகள் மற்றும் வேட்பாளர்கள் தனித்தனியாக பரப்புரைகளையும் மேற்கொண்டனர்.

வாட்ஸ்ஆப்பில் செய்திகளைப் பரப்புவதற்கு என இந்தியாவிலேயே தனித்திட்டம் வைத்திருக்கும் ஒரே கட்சி பாஜக தான். கடலோர கர்நாடகா பகுதியில் பெரும் வெற்றி பெற்றதற்கு இந்த வாட்ஸ்ஆப் திட்டம் முக்கியப் பங்காற்றி இருக்கிறது.

மங்களூரைச் சேர்ந்த பாஜக சமூக ஊடகத் தலைவரான அஜித்குமார் உல்லால், பாஜகவின் ''வார் ரூமில்'' பணியாற்றினார். கடலோர கர்நாடகாவில் ஒவ்வொரு பகுதிக்கும் 9 தன்னார்வலர்களைக் கொண்ட சமூக ஊடக ''செல்'' இருப்பதாகவும், இதில் கருத்துகளை எழுதும் காப்பிரைட்டர், அவருக்குத் துணையாக கிராபிக்ஸ் மற்றும் வீடியோ எடிட்டர்கள் மூன்று பேர் பணியாற்றியதாகவும் உல்லால் கூறினார். 200 வாட்சாப் குழுக்களில் இருக்கும் அவர், புதிய பதிவு ஒன்றைப் போட்டவுடன் பல ஆயிரக்கணக்கான




மக்களுக்குச் சென்றுவிடும் என உறுதியுடன் கூறினார். ''மொபைல் வைத்திருக்கும் ஒவ்வொரு பாஜக தொண்டனும் சமூக ஊடகப் போராளி'' என்றும் உல்லால் தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டிலேயே பாஜக நிர்வாகிகள் தொலைபேசி எண்களை சேகரித்து பெரிய தரவுத்தளங்களை உருவாக்கினர். செய்தி அனுப்பும் செயல்முறையை ஒழுங்குபடுத்துவதற்கான வழிகளையும் தேடத் தொடங்கினர்.

பைதான் குறியீட்டில் (Python code) எழுதப்பட்ட மென்பொருளைப் பயன்படுத்தி, ஒரு சில கிளிக்குகளில் பல்லாயிரம் பேருக்கு செய்திகளை அனுப்பினர். இது வாட்சாப்பின் இணைய இடைமுகத்தை அபகரித்து உருவாக்கப்பட்ட செயல்முறையாகும்.

கும்பல் வன்முறைகளும் கொலைகளும் அதிகரித்தன. வதந்திகளும் பொய் செய்திகளும் வேகமாக பரவியதால் ஏற்பட்ட இந்த விளைவுகளை கண்டு அதிர்ச்சி அடைந்த வாட்ஸ் அப் பொறியாளர்கள் புதிய கட்டுப்பாடுகளை கொண்டுவந்தனர். செய்திகளை பகிர்வதைக் கட்டுப்படுத்த தொழில்நுட்ப மாற்றங்களைச் செய்தனர்.

2020 ஆம் ஆண்டு மெட்டா நடத்திய கள ஆய்வில், ''மோதல், வெறுப்பு, வன்முறையை ஊக்குவிக்கும் பதிவுகளை அதிக அளவில் பார்த்ததாக'' இந்திய பயனர்கள் தெரிவித்துள்ளனர். வெறுப்பையும் வன்முறையையும் ஊக்குவிக்கும் இந்தப் பதிவுகள் ''பெரும்பாலும் வாட்ஸப் குழுக்களில் இஸ்லாமியர்களையே குறிவைத்தன.''

''முஸ்லிம் எதிர்ப்பு சொல்லாட்சிகள் தேர்தல்களில் இடம்பெற வாய்ப்புள்ளது'' என உள் ஆய்வுகள் எச்சரித்த போதும், ஒரு தளத்தை கண்காணிக்கவோ அல்லது நிர்வகிக்கவோ மெட்டா நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை.

''பாஜக ஊழியர்கள் எரிச்சலூட்டும் பதிவுகளை உருவாக்கவில்லை'' என அதன் சமூக ஊடகப் பிரிவு கூறுகிறது. இருப்பினும் அத்தகைய பதிவுகளை அவர்கள் பரப்பினர். ''நாங்கள் சொல்லாத கருத்துகளை ட்ரோல் பக்கங்கள் சொல்கின்றன'' என்கிறார் அதில் பணியாற்றும் ஆல்வா.

செல்வாக்குமிக்க 'ராஷ்டிர தர்ம' ட்ரோல் பக்கத்தை நடத்தும் சந்தோஷ் கெஞ்சம்பா, ''பழிக்குப் பழி வாங்க அழைப்பு விடுத்ததாக'' கூறினார். ''முஸ்லீம்கள் தங்களின் இடத்தை அறிந்து இந்தியாவை இந்து நாடாக மாற்ற உதவுவதற்கான 'நாகரிகப் போரின்' ஒரு பகுதி இது'' என்றும் அவர் கூறினார்.

கடலோர கர்நாடகாவில் 'அஸ்த்ரா' என்ற பெயரில் செய்திகள் நிறைய வந்தன. பாஜக மற்றும் அவர்களை சார்ந்தவர்களிடம் அஸ்த்ரா செய்திகள் செல்வாக்குப் பெற்றன. ஆனால், அவை முஸ்லீம்களுக்கு எதிரான வெறுப்புணர்வையும் வன்முறையையும் தூண்டின. முஸ்லிம்களை எதிர்நிலையில் நிறுத்தின.

'ஆயுதம்' என்று பொருள்படும் 'அஸ்த்ரா' வாட்ஸ்ஆப்பை ஆயுதமாக மாற்றியது. அஸ்த்ரா செய்திகளை யார் அனுப்புகிறார்? எங்கிருந்து வருகிறது? என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் பாஜகவினர் உருவாக்கிய வாட்ச்ஆப் குழுக்கள் அனைத்துக்கும் அஸ்த்ரா செய்திகள் சென்றடைந்தன. கடலோர கர்நாடகா பகுதியில் உள்ள குழுக்கள் அனைத்திலும் மீண்டும் மீண்டும் பகிரப்பட்டன.

உடுப்பி மாவட்ட பாஜகவின் சமூக ஊடகத் தலைவரான சுதீப் ஷெட்டி, ''அஸ்த்ரா போன்ற சமூக ஊடகப் பக்கங்கள் அதிகாரப்பூர்வ பாஜக கணக்குகளை விட செல்வாக்கு பெற்றுள்ளன. அவை எங்களின் ரகசிய ஆயுதம்'' என்று பெருமையுடன் கூறினார்.

வாஷிங்டன் போஸ்ட் செய்தியாளர்கள் அஸ்த்ரா அலுவலகத்தை கண்டறிந்து அங்கு சென்றனர். 'அஸ்த்ரா' அங்கு இருந்தார். கண்ணாடி அணிந்த 28 வயது இளைஞர் அவர். பெயர் சுனில் பூஜாரி.

ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங் எனப்படும் ஆர்எஸ்எஸ் 1980 முதல் கடலோர கர்நாடகாவில் வேலை செய்து வருகிறது. தொடக்கத்தில் பழங்குடி மக்களுக்கு வீடுகள் கட்டித் தருவது, ஏழை மக்களுக்கு உணவு அளிப்பது போன்றவற்றில் ஈடுபட்டனர். முகாம்கள் நடத்தி இந்துத்துவா பயிற்சிகளை அளித்தனர். அவர்களில் அரசியல் ஆர்வம் உள்ளவர்களை பாஜகவுக்கு அனுப்பி வைத்தனர்.

பஜ்ரங்தள் அமைப்பை தீவிரமானதாக மாற்றி, பசுக்களைக் கடத்தியதாக இஸ்லாமியர்களை குற்றம்சாட்டி, அவர்கள் மீது தாக்குதல் நடக்கும் அளவுக்கு செல்ல வைத்தது.

பாஜக மற்றும் சங் பரிவாரின் வெறுப்பையும் வன்முறையையும் தூண்டும் பதிவுகள் சமூக ஊடகப் பகிர்வுகளாக மட்டும் இருப்பதில்லை. அவை கும்பல் வன்முறையாகவும் உடல் ரீதியான தாக்குதலாகவும் மாறுகின்றன. சமூகத்தையே இரண்டாகப் பிளவுபடுத்தி விடுகிறது.

பாஜக உருவாக்கியிருக்கும் இந்தக் கட்டமைப்பு பொய்யையும் வெறுப்பையும் பரப்பும் மிகப்பெரும் தொழிற்சாலையாக இருப்பதை வாஷிங்டன் போஸ்ட் கட்டுரை தெளிவாக எடுத்துக்காட்டு இருக்கிறது. இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், பாசிஸ்ட்டுகளுக்கு எதிராக மக்களை திரட்ட வேண்டிய பணி ஜனநாயக சக்திகள் முன் உள்ளது.

(வாஷிங்டன் போஸ்ட் கட்டுரையின்
முக்கிய பகுதிகள் மட்டும்)
தொடர்புக்கு: 9500001224

## தோழர் வி.இராதாகிருஷ்ணனுக்கு அஞ்சலி



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழரும், சுதந்திர போராட்டத் தியாகியுமான தோழர் வி.இராதாகிருஷ்ணன், தனது 102வது வயதில் காலமானார். நியூ செஞ்சுரி காலனியில் பார்வைக்காக வைக்கப்பட்ட அவரது உடலுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா. நல்லக்கண்ணு, கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர்கள் நா.பெரியசாமி, மு.வீரபாண்டியன், ஜனசக்தி ஆசிரியர் டி.எம்.மூர்த்தி, ஏஐடியுசி பொதுச் செயலாளர் இராதாகிருஷ்ணன், மாநிலத் தலைவர் காசி விஸ்வநாதன், பாஸ்கர், கட்டிட இரவி, இரா.துரைசாமி, திருச்சி சுரேஷ், செல்வ குமார், சி.மகேந்திரன், க.சந்தானம் தலைமையில் என்.சி.பி.எச் தோழர்கள், ஜனசக்தி சார்பில் த.லெனின், இளசை கணேசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா.கருணாநிதி, டி.மாரியப்பன், ஏ.எஸ்.கண்ணன், மு.சம்பத், வி.ஜெகனாதன், கோபிநாதன், மனோகரன், என்.எஃப்.ஐ.டபிள்யு. ஜீவசுந்தரி, மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் ஜி. இராமகிருஷ்ணன், மாவட்டச் செயலாளர் சுந்தர்ராஜ், லெனின் சுந்தர் மற்றும் கவிஞர் ஜீவபாரதி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

## காந்தி பிறந்தநாள் நிகழ்வு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்டக் குழு சார்பில் சேலம் மாநகரில் உள்ள காந்தி சிலைக்கு மாவட்ட செயலாளர் ஏ.மோகன் மாலை அணிவித்தார். நிகழ்ச்சியில் மாவட்ட துணைச்செயலாளர்கள் எம்.ராமன், ஏ.கந்தன், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பி.பரமசிவம், டி.வி.கருணைதாஸ், ஆர்.ரமேஷ், எஸ்.பி.கே.ராமச்சந்திரன் உள்ளிட்ட மாவட்டக்குழு உறுப்பினர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஆத்தூரில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் என்.எம்.சடையன் மாலை அணிவித்தார். பெத்தநாயக்கன்பாளையம் நகர செயலாளர் எஸ்.முருகன், மாவட்டக்குழு உறுப்பினர் ஈ. ஆர். கே. ஆகியோர் கலந்து கொண்டனர்.

எடப்பாடியில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு வட்டச் செயலாளர் ஏ.சுப்ரமணி மாலை அணிவித்தார். ஆர்.அய்யனார், சி.பெரியதம்பி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

# பாண்டியாறு மோயாறு இணைப்புத் திட்டம்! கே.சுப்பராயன் தலைமையில் ஆலோசனை!





ஈரோடு,திருப்பூர்,கரூர் மவட்டங்களில் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு பாசனத்தையும், இலட்சக்கணக்கான மக்களுக்கு குடிநீர் ஆதாரத்தையும் அளித்துவருவது பவானி ஆறும் பவானிசாகர் அணையும், காலநிலை மாற்றத்தால்பருவமழை பொய்ப்பிப்பதால் பவானியின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டு வருகிறது. தேவையோ அதிகமாகிவருகிறது. நீர்வரத்தோ குறைந்து வருகிறது. நீலகிரி காடுகளில் பிறந்து,கேரளம் வழியாக அரபிக்கடலுக்கு சென்று மறையும் பாண்டியாறை,மோயாறுடன் இணைத்தால் பவானிசாகரின் நீர்வரத்தை அதிகரிக்க முடியும்.

இத்திட்டத்தின்பால் அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைக் கூட்டம், கோபி மாவட்டக் கட்சி அலுவலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் தலைமையில் நடைபெற்றது. ஈரோடு மாவட்ட ஊராட்சியின் முன்னாள் தலைவரும், மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவருமான எஸ்.வி.சரவணன் முன்னிலை வகித்தார். ஓய்வு பெற்ற வேளாண்மைத்துறை இணை இயக்குநர்அ.நே.ஆசைத்தம்பி திட்டத்தினை பற்றி விளக்கி பேசினார். பவானிசாகர்,சத்தி,கோபி,நம்பியூர்,டி.என் பாளையம், பவானி, பெருந்துறை பகுதிகளில் இருந்து விவசாயிகளும் ,ஆர்வலர்களும் பங்கேற்றனர்.

கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சரின் கவனத்திற்கு இத்திட்டத்தினை கொண்டு செல்வது, சத்தி, கோபி, பவானி, ஈரோடு, பெருந்துறை ஆகிய மையங்களில் இத்திட்ட விளக்கக் கூட்டங்களை நடத்துவது, டிசம்பர் மாதம் ஒரு கோரிக்கை மாநாட்டினை நடத்துவது என முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# மிகவும் மாசடைந்துள்ள கொடுங்கையூர் குப்பை மேட்டை சீர்படுத்துக!

**சென்னை மாநகராட்சியில் மாதகராட்சி உறுப்பினர் ரேணுகா வலியுறுத்தல்**



பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் மாநகராட்சி மன்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ரேணுகா கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்.

தமிழ்நாடு அரசு மகளிர் உரிமைத்தொகை பெறும் பெண்களின் குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூபாய் 2 லட்சம் 25 ஆயிரம் மேற்படக்கூடாது என வரையறுத்துள்ளது, அதாவது மாதம் 18,750/ என்பது குறைவான ஊதியம் என்று பொருளாகிறது. எனவே மாதம் 18,750 அதிகமாக மாத ஊதியம் பெறுவோர் இடமிருந்து மட்டுமே தொழில் வரி வசூலிக்கும் வகையில் தொழில் வரி வரம்பை திருத்துமாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மன்றத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

அதிகரித்து வரும் டெங்கு காய்ச்சல் வேதனை அளிக்கிறது, கொரோனா வைரசை விட கொடுமையானது டெங்கு காய்ச்சல் பரப்பும் வைரஸ்கள் தான், ஏனென்றால் டெங்கு காய்ச்சலை தடுக்க பாதுகாப்பான தடுப்பு ஊசி இதுவரை கண்டுபிடிக்கவில்லை. டெங்கு காய்ச்சல் பரப்பும் கொசு நன்னீரில்தான் உற்பத்தியாகிறது,எனவே மக்களிடம் போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும். அதுபோல, மழை நீர் வடிகாலில் தண்ணீர் தேங்கா வண்ணம் மாநகராட்சி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தெரு நாய்களின் தொல்லைகளும் அதிகமாக உள்ளது. தெருநாய்களை பிடித்து ராபிஸ் தடுப்பு ஊசி செலுத்தி, பின் அடையாளம் ஏற்படுத்தி மீண்டும் பிடித்த இடத்திலேயே விடுவது வழக்கம். மிகவும் வெறிபிடித்த பாதிக்கப்பட்ட நாய் மற்றும் நோய்வாய்ப்பட்ட நாய்களை மீண்டும் பிடித்த இடத்தில் விடுவதை தவிர்த்து, குவாரன்டைன் ஹோம் (Qurantine home) போல ஏற்படுத்தி பாதுகாக்க வேண்டும்.

1980ல் இருந்து குப்பை கொட்டும் இடமாக கொடுங்கையூர் குப்பை மேடு உள்ளது 342 ஏக்கர் பரப்பளவு கொண்ட குப்பைமேடு வளாகத்தில், கிட்டத்தட்ட 9 மண்டலங்களில் இருந்து குப்பை கொட்டப்படுகிறது, அங்கு 100 அடி உயரத்திற்கு குப்பைகள் மலை போல் உள்ளன. அங்கு நிலத்தடி நீர் மிகவும் மாசடைந்து உள்ளது. Biomining மூலம் நிலத்தை மீட்டெடுக்கும் பணி ஆகஸ்ட் மாதம் முதல் தொடங்கப்படும் என்றீர்கள், ஆனால் இதுநாள் வரை பணி தொடங்கவில்லை. விரைவாக பயோமைனிங் வேலையை தொடங்க வேண்டும். மேலும் குப்பைகளை கொண்டு waste to electricity, bio CNG gas தயாரிப்பு போன்ற திட்டங்களை கொடுங்கையூர் குப்பை கிடங்கில் மேற்கொள்ளப் போவதாக கூறியுள்ளீர்கள். இத்திட்டங்கள் எல்லாம் environmental friendly இருக்க வேண்டும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படாவண்ணம் மேற்படி திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதை மாநகராட்சி உறுதி செய்ய வேண்டும்.

மாநகராட்சியில் பணிபுரியும் NULM தூய்மை பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்கும் விதமாக நாள் ஒன்றுக்கு 687 ரூபாய் ஊதியம் உயர்த்தி வழங்க ஆணை பிறப்பிட்ட மாநகராட்சிக்கும், அரசுக்கும் இத்தருணத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

# விடுதலைப் போராட்ட வீரர் வி.இராதாகிருஷ்ணன் மறைவு

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்**



விடுதலைப் போராட்ட வீரரும், ஜனசக்தி ஆசிரியர் குழுவில் நீண்ட ஆண்டுகள் பணியாற்றியவருமான வி.இராதாகிருஷ்ணன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த உறுப்பினர் விடுதலைப் போராட்ட வீரர் வி.இராதாகிருஷ்ணன் (102) அம்பத்தூர் நியூ செஞ்சுரி காலனியில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். வி.இராதாகிருஷ்ணன் கோவை மாவட்டம், பொள்ளாச்சி நகரில் வணிக குடும்பத்தில் பிறந்தவர். பள்ளியில் பயின்று வந்த காலத்தில் தீவிரமடைந்த விடுதலைப் போராட்டத்தால் ஈர்க்கப்பட்டு, அதில் ஈடுபட தொடங்கியவர். பல முறை சிறை தண்டனை பெற்று பொள்ளாச்சி, வேலூர், கோவை உள்ளிட்ட பல சிறைகளில் இருந்தவர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி தலைவர்கள் கே. பாலதண்டாயுதம், சி.ஏ.பாலன், ஆர்.கே.கண்ணன், ஆர்.கே. பாண்டுரங்கன் ஆகியோருடன் ஏற்பட்ட தோழமை உறவால் கம்யூனிஸ்ட் கொள்கை வழியை தேர்வு செய்தவர். தனது இறுதி மூச்சு வரை கொள்கை வழி பயணத்தை உறுதியுடன் மேற்கொண்டவர்.

ஆரம்ப காலத்தில் கட்சி தலைவர்கள். பி.சி.ஜோஷி, அஜாய் கோஷ், எஸ்.ஏ.டாங்கே. என்.கே.கிருஷ்ணன், சி.ராஜேஸ்வர ராவ், பார்வதி கிருஷ்ணன், மோகன் குமாரமங்கலம் ஆகியோரின் உரையை மொழியாக்கம் செய்தவர். அப்போது கட்சியில் இருந்த மற்றொரு இராதாகிருஷ்ணன் இவரை விட உயரமாக இருந்ததால் இவரை 'சோட்டா' இராதா என அழைத்து வந்தனர். அந்த பெயர் நிலைத்து விட்டது.

ஜனசக்தி இதழில் ஆரம்ப காலம் முதல் பல பத்தாண்டுகள் மொழிபெயர்ப்பாளராக தொடர்ந்து பணியாற்றியவர். பல இளம் பத்திரிகையாளர்களுக்கு பயிற்சி அளித்து உதவியவர். சோவியத் நாடு அலுவலகத்தில் சோவியத் பலகணி மாத இதழ் பொறுப்பாளராக பணிபுரிந்தவர்.

ரயில்வே தொழிலாளி குடும்பத்தை சேர்ந்த மோட்சமேரி இவரது வாழ்க்கை இணையர். சில வருடங்களுக்கு முன்பு காலமாகிவிட்டார். இவர்களுக்கு கீதா, டாக்டர் சாந்தி, பாரதி என்ற மூன்று மகள்கள் இருக்கின்றனர்.

வரலாற்று பதிவுகளின் களஞ்சியமாக திகழ்ந்த விடுதலை போராட்ட வீரர் வி.ராதாகிருஷ்ணன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் செலுத்தி, ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை இழந்து வாடும் அவரது மகள்களுக்கும், குடும்பத்தினருக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.

# தோழர் இரா.முத்தரசன் உடல் நிலை தகவல் பகிர்வு

அன்புமிக்க தோழர்களே, வணக்கம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் இரா முத்தரசன் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டொரு நாளில் பொது அறைக்கு மாற்றப்படலாம் என மருத்துவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். சுவாசப் பாதையில், நுரையீரல் பகுதியில் ஏற்பட்ட கிருமிகள் தொற்று குறைந்து வருகிறது. நோய் தொற்று கிருமிகள் முழுமையாக நீக்கப்படும் வரை மருத்துவக் கண்காணிப்பில் இருக்க வேண்டும் என்பது மருத்துவர்கள் அறிவுரையாகும்.

தோழர் இரா. முத்தரசன் அவர்களது உடல்நிலை பற்றி, விசாரித்து அவர் விரைவில் குணம் பெற வேண்டும் என்ற விழைவை தெரிவித்து வரும் நண்பர்கள், தோழர்கள் அனைவருக்கும் நன்றி. நேரில் மருத்துவ மனைக்கு செல்வதை தவிர்த்து தொடர்ந்து ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள
நா பெரியசாமி
மாநிலத் துணைச் செயலாளர்
09.10.2023

# கோவை செல்வ சிந்தாமணி குளம், நடைபாதையை பராமரிக்க கோரிக்கை

கோவை பேரூர் சாலையில் உள்ள செல்வ சிந்தாமணி குளத்தை பொலிவுறு நகரம் திட்டத்தின் கீழ் மாநகராட்சி பல்வேறு புனரமைப்பு பணிகளை செய்து, கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யும் இயந்திரங்களையும் பொருத்தி அவற்றை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கடந்த 2021 ஆம் ஆண்டு திறந்து விட்டது. மூன்றாண்டுகளாக சரியாக பராமரிக்கப்படாத நிலையில் தற்போது இந்த பகுதி புதர்மண்டி கிடக்கிறது. தினம்தோறும் இந்த குளத்தையும், நடைபாதையையும் பராமரிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை செல்வ சிந்தாமணி குளம் வாக்கர்ஸ் அசோசியேஷன் முன்வைத்துள்ளது.

# கோவையில் மதநல்லிணக்க கருத்தரங்கம்

இஸ்கப் மற்றும் பல்சமய நல்லுறவு இயக்கம் சார்பில், காந்தி 154 விழா மத நல்லிணக்கக் கருத்தரங்கமாக நடைபெற்றது. மகாத்மா காந்தி படத்திறப்பு, மதநல்லிணக்க உறுதிமொழி எடுத்தல் நிகழ்வுகளை அடுத்து கருத்தரங்கம் நடைபெற்றது. பல்சமய நல்லுறவு இயக்கத்தின் மாநிலத் தலைவர் ஹாஜி ஜெ.முகமது ரஃபி தலைமை தாங்கினார். இஸ்கஃப் மாவட்டச் செயலாளர் எம்.வி.ராஜன் வரவேற்புரை வழங்கினார். இஸ்கஃப் மாநிலப் பொதுச்செயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன் துவக்கவுரையாற்றினார். கோவை நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர்.நடராஜன், தி.முக. மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக், இ.தே. காங்கிரஸ் மாநில செயல்தலைவர் மயூரா ஜெயகுமார், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆறுமுகம், மேனாள் கோவை மாநகராட்சி மேயர் காலனி வெங்கடாசலம், ஆகியோர் கருத்துரை வழங்கினர். இஸ்கஃப் மாநிலப் பொருளாளர் எஸ்.கோட்டியப்பன் நன்றி கூறினார்.

# நவம்பர் 26, 27, 28 இல் தொழிலாளர்கள், விவசாயிகள் பெருந்திரள் போராட்டம்: வெற்றி பெறச் செய்வோம்!

## ஏஐடியுசி மாநில நிர்வாகக்குழு, மாவட்ட செயலாளர்கள் கூட்டம் தீர்மானம்!

தமிழ்நாடு ஏஐடியுசி நிர்வாகக்குழு மற்றும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் 7/10/2023 அன்று சென்னையில் மாநிலத் தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது. தேசிய துணைத் தலைவர் சி.எச். வெங்கடாசலம், தேசிய செயலாளர் டி.எம்.மூர்த்தி ஆகியோர் தேசிய பொதுக்குழு முடிவுகளை விளக்கி பேசினர். மாநில பொதுச் செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன் அறிக்கை சமர்பித்தார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

கர்நாடக அணைகளில் தற்போதும் 80 சதவிகிதத்துக்கும் அதிகமான தண்ணீர் உள்ள நிலையில், தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கக் கூடாது என கர்நாடகத்தில் இரண்டு முறை முழு அடைப்பு போராட்டத்தை பாஜக மற்றும் கன்னட அமைப்புகள் நடத்தின. இதனால் கர்நாடக அரசு தண்ணீர் திறந்து விட மறுத்து வருகிறது. எனவே, எஞ்சிய குறுவை பயிரைப் பாதுகாப்பதற்கும், சம்பா சாகுபடி பணிகளைத் தொடங்கிடவும் தமிழ் நாட்டுக்கு கர்நாடக அரசு காவிரியில் மாத வாரியாக கொடுக்க வேண்டிய தண்ணீரை திறக்க வலியுறுத்தி, காவிரி டெல்டா மாவட்டங்களில் அக்டோபர் 11 ஆம் தேதி முழு அடைப்பு மற்றும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன் மறியல் போராட்டம் நடத்துவது என காவிரிப் படுகை பாதுகாப்பு கூட்டியக்கம் அறிவித்துள்ளது.

இப்போராட்டத்தில் ஏஐடியுசியுடன் இணைக்கப்பட்ட சங்கங்களின் உறுப்பினர்கள் முழுமையாக பங்கேற்பார்கள் என்று தமிழ்நாடு ஏஐடியுசி நிர்வாகக் குழு மற்றும், மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் தீர்மானிக்கிறது.

### நவ. 26,27,28 இல் தொழிலாளர்கள்,விவசாயிகள் பெருந்திரள் போராட்டத்தை வெற்றி பெறச்செய்வோம்!

2014ல் பாஜக ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து, ஒன்றிய அரசாங்கம் முரட்டுத்தனமாக செயல்படுத்தி வரும், கார்ப்பரேட்களுக்கு சாதகமான கொள்கைகளால் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், அனைத்துப் பகுதி சாதாரண மக்களுக்கும் வாழ்க்கைச் சூழல் கடுமையாகி உள்ளது. மோடி அரசின் கொள்கைகள் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், நாட்டுக்கும் விரோதமானவை.

இந்த பேரழிவுக் கொள்கைகளில் இருந்து, "மக்களையும் அவர்களது வாழ்வாதாரத்தையும் காப்பாற்ற" நாட்டின் செல்வத்தை உழைத்து உருவாக்குகிற அமைப்புசார்ந்த மற்றும் அமைப்பு சாராத அனைத்துப் பகுதி தொழிலாளர்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும். மத்திய தொழிற்சங்கங்கள் சம்மேளனங்கள், தனிச்சங்கங்கள் ஆகியவற்றின் கூட்டமைப்பு, ஐக்கிய விவசாயிகள் முன்னணி (சம்யுக்தா கிசான் மோர்ச்சா எஸ்.கே.எம்) இணைந்து "மோடி ஆட்சியை வீழ்த்துவோம், தேசத்தை காப்போம்" என்ற முழக்கத்தை முன்வைத்து, ஆகஸ்ட் 24 அன்று புதுடெல்லியில் கூடிய வரலாற்று சிறப்பு மிக்க தொழிலாளர்கள், விவசாயிகள் தேசிய மாநாட்டு பிரகடனத்தின் படி நவம்பர் 26,27,28 தேதிகளில் இரவும் பகலும் நடைபெறஉள்ள பெருந்திரள் அமர்வு போராட்டத்தை வெற்றி பெறச்செய்வோம்.

### திருப்பூர் பனியன் தொழிலை காப்பாற்றுக

இந்தியாவின் பின்னலாடைகளின் தலைநகரம் திருப்பூரில் நாட்டின் மொத்த பின்னலாடை உற்பத்தியில் 90% உற்பத்தியாகிறது. ரூ.60,000 கோடி ஆண்டு வணிகத்துடன் நிஞ்றி க்கு 2% பங்களிப்பை வழங்குகிறது. ஏற்றுமதி வருவாயில் 15% பங்களிப்பதால், திருப்பூர் 'டாலர் நகரம்' என்று அழைக்கப்படுகிறது. 15 லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

நூல் விலை ஏற்றம் மற்றும் மின்சார கட்டணம் அதிகரிப்பு ஆகியவை இத்தொழிலை மிகவும் ஆழமாக பாதிக்கின்றன. திருப்பூரில் மட்டும் 20,000 க்கும் மேற்பட்ட விஷிவிணிகள் உள்ளன. குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு உதவும் வகையில் நூல் விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாசுக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை கடைபிடிப்பதில் சாயப்பட்டறை தொழிலுக்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கான செலவை மாநில மற்றும் ஒன்றிய அரசாங்கங்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் MSME களுக்கு கடன் வழங்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒரு கொள்கையை உருவாக்க ஒன்றிய அரசு முன்வரவேண்டும். விஷிவிணிகளுக்கு GST வரியில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும்.

### ஓய்வூதியம் பெறும் உடல் உழைப்பு தொழிலாளர்களுக்கும் மகளிர் உரிமத்தொகை வழங்குக

உடல் உழைப்பு தொழிலாளர்கள் குறைந்த ஊதியத்திற்கு 30 முதல் 40 ஆண்டுகள் உழைத்த தொழிலாளர்களுக்கு 60 வயதுக்கு பின்பு, தமிழ்நாடு அரசு உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியம் மூலம் ஓய்வூதியம் வழங்குகிறது. அந்த ரூ.1000/ ஓய்வூதியத்தை கொண்டுதான் வயதான காலத்தில் இவர்கள் வாழ்க்கை நடத்த வேண்டும். எனவே இந்த ஓய்தியம் பெறுவதை காரணம் காட்டி மாதந்தோறும் வழங்கும் ரூ.1000/ மகளிர் உரிமத்தொகையை மறுக்கக் கூடாது என்று வலியுறுத்துகிறோம்.

### டாஸ்மாக் நிறுவனத்திற்கு கண்டனம்

டாஸ்மாக் நிறுவனத்தில் சிறு,சிறு காரணங்களால் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட 646 தொழிலாளர்களுக்கு மீண்டும் பணி வழங்க டாஸ்மாக் நிறுவனம் முன் வந்துள்ளதை வரவேற்கிறோம். அவ்வாறு தொழிலாளர்களுக்கு மீண்டும் பணி வழங்க குற்ற வழக்குகள் எதுவும் இல்லை என்று ஒவ்வொரு தொழிலாளியும் காவல் துறையிலும், நோட்டரி சான்றிதழும் பெற்று வர வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ள நிபந்தனை அவர்களை குற்றவாளிகளைப் போல் பாவிக்கும் குரூர எண்ணம் கொண்டதாக உள்ளது.

இந்த தொழிலாளர் விரோத நிபந்தனையை தமிழ்நாடு ஏஐடியுசி கண்டிக்கிறது. நிபந்தனையின்றி பணி வழங்க தமிழ்நாடு அரசு தலையிட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

### உள்ளாட்சி துறையில் ஒப்பந்த முறையை கைவிடுக

ஊர்கள் விரிவடைந்து ஒவ்வொரு குடும்பமும் முன்பை விட அதிக குப்பைகளை வெளியேற்றும் இன்றைய சூழலில், தூய்மை பணியாளர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கவும், நவீனமாக்கவும் வேண்டிய அவசியம் உள்ளது. ஆனால் சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்தம், தினக்கூலி, சுய உதவிக்குழு போன்ற பல்வேறு பணிகளில் அற்ப கூலிக்கு ஒப்பந்ததாரர், மற்றும் உள்ளாட்சி நிர்வாகங்களின் சகல விதமான சுரண்டலுக்கும் ஆட்பட்டு பணிபுரிந்து வரும் தொழிலாளர்களில் இருந்தும் சுமார் 40% தொழிலாளர்களை வேலையை பறித்து வீட்டுக்கு அனுப்பி, ஊதியத்தை குறைத்து, வேலைப்பளுவை திணித்து ஒப்பந்ததாரர்கள் சுரண்டி கொழுக்க வகை செய்யும் வெளி முகமை முறையை தமிழ்நாடு அரசு முற்றாக கைவிட்டு, சமூக நீதி வழியில் பயணிக்க வேண்டும்.

### ஆட்டோ தொழிலாளர்களுக்கு செயலி உருவாக்குக

ஆட்டோ தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில் ஊபர், ஓலா போன்ற நிறுவனங்கள் அவர்களது உழைப்பை சுரண்டி வருகின்றன பொதுமக்களின் பயணத் தேவைக்கும் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. கேரள மாநிலம் போன்று ஆட்டோ தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிப்படையாமல் இருக்க தமிழக அரசு இதற்கான ஒரு செயலி உருவாக்கிட வேண்டும். இது பொதுமக்களுக்கும் பயனுள்ளதாக அமையும். ஊபர்,ஓலா போன்ற நிறுவனங்களை தடை செய்திட வேண்டும். என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

# பட்டாசு கடை நிறுவன பாதுகாப்பில் அரசு கடுமையான உறுதி காட்ட வேண்டும்

## இரா.முத்தரசன் வலியுறுத்தல்

பட்டாசு கடை நிறுவன பாதுகாப்பில் அரசு கடுமையான உறுதி காட்ட வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் வலியுறுத்தல்

தமிழ்நாடு கர்நாடக எல்லைப் பகுதியான அத்திப்பள்ளியில் உள்ள பட்டாசுக் கடைகளில் ஏற்பட்ட விபத்தில் 13 பேர் உடல் கருகி இறந்துள்ளனர் என்ற செய்தி பேரதிர்ச்சியும், பெரும் வேதனையும் தரும் இந்தச் சம்பவத்தில், இறந்தவர்கள் தவிர மற்றவர்கள் கதி என்ன என்பது உறுதி செய்ய வேண்டும்.

இது போன்ற கோர விபத்துக்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. ஒரு விபத்து உணர்த்தும் படிப்பினையில், அடுத்துத் தேவையான பாதுகாப்பு மற்றும் விபத்துத் தடுப்பு ஏற்பாடுகளில் கடுமையான நடைமுறைகள் ஏன் பின்பற்றப்படவில்லை என்ற கேள்வி எழுகிறது. அரசு நிர்வாகத்தில் நிலவும் உழலும், முறைகேடுகளும் இது போன்ற விபத்துக்களுக்கு வழிவகுத்து விடுகின்றன என பொதுமக்கள் புகார் கூறுகின்றனர். அத்திப்பள்ளி விபத்தில் இறந்து போன தொழிலாளர்கள் தமிழ்நாட்டின் அரூர், அம்மாபேட்டை, வாணியம்பாடி மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய ஊர்களில் இருந்து சென்றவர்கள் என செய்திகள் வெளியாகியுள்ளது.

வெடி விபத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கவும், எதிர் காலத்தில் விபத்து மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளில் தேவையான திருத்தங்களை செய்து, வரைமுறைகளை உருவாக்கி கடுமையாக அமலாக்க வேண்டும். இதில் தவறு நிகழுமானால் அனுமதியளிக்கும் அலுவலரும் பதிலளிக்கும் பொறுப்பேற்க செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்வதுடன், விபத்தில் உயிரிழந்த அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது என்று இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## சங்கே முழங்கு!



### மயிலாடுதுறை கூறைநாடு குமரன் பூங்காவா? குடிகாரர் பூங்காவா?



மயிலாடுதுறை நகரத்தில் வரதாச்சாரியார் பூங்கா, காந்தி நகர் பூங்கா, பெசன்ட் நகர் பூங்கா உட்பட பல்வேறு பூங்காக்கள் இருந்தாலும் கூட நகரின் மையப் பகுதியில் கூறை நாடு திருப்பூர் குமரன் பூங்கா, மக்கள் அதிகம் பயன்படுத்தும் பூங்காவாக அமைந்துள்ளது.

இப்பூங்கவைச் சுற்றிலும் உள்ள 30க்கும் மேற்பட்ட தெருக்களைச் சார்ந்த நூற்றுக்கணக்கான குடியிருப்பு வாசிகள் தினமும் காலை, மாலை வேலைகளில் சிறப்பாக பயன்படுத்தி வந்தனர். இப்பூங்காவை நகராட்சி நிர்வாகம் சார்பில் பல லட்சங்கள் செலவிடப்பட்டு பல்வேறு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

மரங்கள், பூச் செடிகள். அலங்கார மின்விளக்குகள் அமைக்கப்பட்டும் நடைப்ப யிற்சி மேற்கொள்வதற்காக சிமெண்ட் கற்கள் பதிக்கப்பட்டு நடைபாதை, குடும்பத்துடன் பொழுதை கழிப்பதற்கான ஏற்பாடுகள், காற்றோட்டமாக கூடி மகிழ குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் என்று அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டன. மேலும் 2004 ஆம் ஆண்டு அன்றைய சட்டமன்ற உறுப்பினர் ஜெக வீரபாண்டியன் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து முதியவர்கள் மற்றும் பெண்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப சிறு நூலகம் ஒன்றும் கட்டிக் கொடுக்கப்பட்டது.

ஆனால் தற்பொழுது இப்பூங்காவை பொதுமக்கள் பெரியவர்கள் பெண்கள் குழந்தைகள் பயன்படுத்துவதைவிட அருகிலுள்ள டாஸ்மாக் கடையில் மது அருந்த வருவோர் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே சென்றதால், அங்கே செல்கின்றவர்களை முகம் சுளிக்க வைப்பதுடன். கொஞ்சம் கொஞ்சமாக நடைப்பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள்



குறைந்து விட்டது.

மேலும் குப்பை கூலங்கள், பிளாஸ்டிக் கழிவுகள், பாட்டில்கள், புல் புதர் செடிகள் மண்டி கிடப்பது அதற்கு சாட்சியாகும். மக்கள் வருகை குறைந்து குடிகாரர்களின் வருகை அதிகரித்துக் கொண்டே செல்வது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் குமரன் பூங்காவை உடனே பராமரிப்பதுடன் உள்ளே உள்ள மது பாட்டில்கள் குப்பைகளை அகற்றி, நேர மேலாண்மை அறிவிப்பு செய்து நல்ல சூழலை ஏற்படுத்த வேண்டும்.

நகராட்சியின் பயன்படாத குப்பை அள்ளும் வாகனத்தையும் வேறு இடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். மேலும் பூங்காவை பராமரிக்க மற்றும் பாதுகாக்க தனியாக ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும், காவல்துறையின் தொடர் கண்காணிப்பும் இப்பூங்கா மீது இருக்க வேண்டும் என்றும் தியாகி திருப்பூர் குமரனின் 120வது பிறந்த நாளான அக்டோபர் 4ல் பொதுமக்கள் சார்பில் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

பட்டாசு கடைகளில்

## திடீர் ஆய்வுகளை கட்டுப்படுத்த ஏஜடியுசி மனு

விருதுநகர் மாவட்ட ஆட்சியரிடம் , ஏஜடியுசி தீப்பெட்டி பட்டாசு தொழிலாளர் சங்கம் சார்பில் அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவில் , தீபாவளி பண்டிகை நெருங்குவதால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் 2000க்கும் அதிகமான பட்டாசு விற்பனைக்கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் வருவாய்த்துறை, வணிகவரித்துறை மற்றும் காவல்துறை அலுவலர்கள் அடிக்கடி ஆய்வுகள் நடத்தி அச்சுறுத்துகின்றனர். இதனால் பட்டாசு வியாபாரம் பாதிக்கப்படுகின்றன. பட்டாசு தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாக்க அடிக்கடி திடீர் ஆய்வுகள் நடத்துவதை கட்டுப்படுத்த வேண்டுமென கூறப்பட்டுள்ளது. மாவட்ட தலைவர் சமுத்திரம் ,செயலாளர் ஜீவா இவர்களுடன் சிபிஐ தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருலாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் பாலமுருகன் உடன் இருந்தனர்.

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், தீண்டாமை ஒழிப்பு முன்னணி கூட்டு இயக்க

## ஆலோசனைக் கூட்டம்

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், தீண்டாமை ஒழிப்பு முன்னணி, விவசாய தொழிலாளர் சங்கம் மற்றும் தமிழக விவசாயிகள் சங்கம் ஆகியவை இணைந்து தலித் உரிமைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.இக்கூட்டத்தில் இந்திய கம்யுனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளர் நா.பெரியசாமி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாநிலப் பொதுசெயலாளர் மு. வீரபாண்டியன், தீண்டாமை ஒழிப்பு முண்ணணி மாநில செயலாளர் சாமுவேல்ராஜ், து. செயலாளர் க.சாமிநாதன், மாநிலப பொருளாளர் இ.மோகனா மற்றும் வி. தொ. ச மாநில செயலாளர் வி.மாரியப்பன் மற்றும் தலைமைக் குழு உறுப்பினர்கள் எஸ்.பாஸ்கர், ஆர்.எம்.சந்தோஷ், வடசென்னை மாவட்ட செயலாளர் ஜி.சுப்ரமணி ஆகியோர் கலந்து கொண்டனார்.

## சுங்கச்சாவடியை அகற்றிடக்கோரி உண்ணாவிரதப் போராட்டம்



மதுரை கப்பலூரில் உள்ள சுங்கச்சாவடியை அகற்றிடக்கோரி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சுங்கச்சாவடி எதிர்ப்பு போராட்டக் குழு சார்பில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் மாநிலக் கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் காளிதாஸ் தலைமையில் நடத்தினர். இதில் புறநகர் மாவட்டச் செயலாளர் முத்துவேல், துணைச் செயலாளர் சந்தனம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மாவட்ட ஏ.ஐ.டி.யு.சி. துணைத் தலைவர் மா.தம்பிசிவம் மகன் மறைவு

அரியலூர் மாவட்ட ஏ.ஐ.டி.யு.சி. துணைத் தலைவரும், ஏ.ஐ.டி.யு.சி. சுகாதார தொழிலாளர் சங்கத்தின் முன்னாள் செயலாளர் மா.தம்பிசிவம் அவர்களின் மகன் சிவப்பிரகாஷ் (வயது 18) அகால மரணம் அடைந்த செய்தி அதிர்ச்சியாக இருக்கிறது. அவரது இழப்பினால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை மாவட்ட ஏ.ஐ.டி.யு.சி. தெரிவித்து கொள்கிறோம்.

### வினாடி - வினா விடைகள்

1. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர்
2. 1917 ல் சம்பரானில் (பீகார் மாநிலம்) நடைபெற்றது.
3. 1921 ஆகஸ்ட் 6
4. பூண்டி நீர்த்தேக்கம் அருகே குடியம் குகை
5. மாபெரும் பாய்ச்சல்
6. ரஷ்யா

## டெல்லி பத்திரிக்கையாளர்கள் மீதான தாக்குதலை கண்டித்து தஞ்சையில் ஆர்ப்பாட்டம்




நியூஸ் கிளிக் தலைமை ஆசிரியர் கைது மற்றும் பல்வேறு பத்திரிகையாளர்கள் மீதான டெல்லி காவல்துறை தாக்குதல் மற்றும் அடக்கு முறைகளை கண்டித்து தஞ்சையில் கண்டன ஆர்ப்பாட்டம் இடதுசாரிகள் பொது மேடை சார்பில் தஞ்சாவூர் தலைமை அஞ்சலகம் முன்பு நடைபெற்றது. கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு உலகத் தமிழர் பேரவைப்பின் துணைத் தலைவர் அயனாவரம் சி. முருகேசன் தலைமை வகித்தார்.

இடதுசாரிகள் பொது மேடை ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன் முன்னிலை வகித்தார். ஏஜடியூசி சங்க நிர்வாகிகள் எஸ்.மனோகரன், கருணாகரன், தொலைதொடர்பு ஓய்வூதியர் சங்க நிர்வாகி எஸ்.முகிலன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 2023 வன பாதுகாப்பு திருத்த சட்டத்தை திரும்ப பெற வேண்டும்

### தமிழ்நாடு பழங்குடி சங்கத்தின் மாவட்ட மாநாடு வலியுறுத்தல்



தமிழ் நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் காஞ்சிபுரம் செங்கல்பட்டு ஒருங்கிணைந்த மாவட்ட 11 வது மாநாடு பேரணி திருப்போரூர் இள்ளலூர் சந்திப்பில் இருந்து மாவட்ட தலைவர் க. ஜெகதீசன் தலைமையில் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், திருப்போரூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர் எஸ்.ஆர். எல். இதயவர்மன், திருப்போரூர் பேரூராட்சி தலைவர் மு. தேவராஜ் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்துதனர்.

மாநாட்டு கொடியினை மூத்த தோழர் கல்பாக்கம் அணுமின் நிலைய ஏஜடியுசி ஸ்தாபகர் சி. சக்கரபாணி ஏற்றி வைத்தார். அதன் தொடர்ச்சியாக தோழர் கே.ரவி நினைவு ஸ்தூபிக்கு அனைவரும் மலர் தூவி வீரவணக்கம் செலுத்தினர். மாநாட்டிற்கு க. ஜெகதீசன், ஏ. குமாரி, கே. புவனா ஆகியோர் தலைமை தாங்கினார். மாநாட்டை துவக்கி வைத்து மாநில துணை தலைவர் ஜா. பூபாலன் பேசினார். அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்க தேசிய செயலாளர் டி.எஸ். நடராஜன் கிசிஞ்ஷி சிலீவீறீபீ றீவீஸீமீ இயக்குனர் டி. தேவன்பு, ஏஜடியுசி மாநில செயலாளர் வி. ஆதிமூலம். ஊரக உள்ளாட்சி பொது பணியாளர்கள் சங்க மாவட்ட தலைவர் ஆர். தேவராஜன் பழங்குடி மக்கள் முன்னனி நிறுவனர் சுடரொளிசுந்தரம் சிபிஐ திருப்போரூர் சட்டமன்ற தொகுதி செயலாளர் எம். பார்த்திபன் ஏஐஒய்எஃப் மாநில துணை தலைவர் மோ. வெங்கடேசன் ஏஐஎஸ்எஃப் மாவட்ட செயலாளர் ஜெ. அஜித்குமார் ஆகியோர் வாழ்துரை வழங்கினார்கள்.

ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள 2023 வன பாதுகாப்பு திருத்த சட்டத்தை திரும்ப பெற வேண்டும். 2006 வன உரிமை சட்டத்தை தீவிரபடுத்த வேண்டும்! மத்திய மாநில அரசுகள் திட்டத்தின் கீழ் பழங்குடி மக்களுக்கு வழங்க படும் தொகுப்பு வீடுகள் ஐந்து லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி தர வேண்டும். முனுசாமி தலைவராக, க. ஜெகதீசன் செயலாளராக, ஆறுமுகம் பொருளாளராக, துணைத்தலைவராக அரசு, துணைசெயலாளர்களாக ஹாருன்பாஷா, முரளி உள்ளிட்ட புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். மாநில செயலாளர் பி. பரமசிவம் நிறைவுரையாற்றினார். இறுதியாக, திருப்போரூர் ஒன்றிய செயலாளர் ஹாருன்பாஷா நன்றி கூறினார்.

## ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க திருவள்ளூர் மாவட்டப் பேரவை

தமிழ்நாடுஒடுக்கப்பட்டோர்வாழ்வுரிமை இயக்கம் திருவள்ளுர் மாவட்டப் பேரவை நடைப்பெற்றது.இக்கூட்டத்தில் புதியப் பொறுப்பாளர்களாக மாவட்டத் தலைவராக கிருஷ்ணன், மாவட்ட செயலாளராக இம்தியாஸ் பாஷா, மாவட்டப் பொருளாளராக பொன். குமார், தலைவர்களாக தேவந்திரன், பார்த்திபன், து. செயலாளராக லோகநாதன், வெங்கடேசன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இக்கூட்டத்தில் மாநிலப் பொதுசெயலாளர் மு. வீரபாண்டியன், தலைமைக்குழு உறுப்பினர்கள் பாஸ்கர்,சந்தோஷ் குமார் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.




## விவசாயிகள் அனைவருக்கும் பயிர்காப்பீடு வழங்கிடகோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்க 19வது நகர மாநாடு

திருத்துறைப்பூண்டியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க நகர 19வது மாநாடு, நாகை சாலை வசந்தம் மஹாலில் பி.எம். பக்கிரிசாமி தலைமையில் நடைபெற்றது.சங்கத்தின் மாவட்ட துணை செயலாளர் கே.ஆர்.ஜோசப் சங்க கொடியினை ஏற்றி வைத்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பி.வி.சந்திரராமன் மாநாட்டினை துவக்கிவைத்து பேசினார். சங்கத்தின் மாவட்ட துணை தலைவர் கே. உலகநாதன் எக்ஸ். எம்.எல்.ஏ., தீர்மானங்களை விளக்கி பேசினார். விவசாயிகள் சங்கத்தின் ஒன்றிய செயலாளர் கோ.ஜெயபால், கட்சியின் நகர செயலாளர் டி.பி.சுந்தர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நகர தலைவராக வழக்கறிஞர் சி. சிவசாகர், செயலாளராக ஜி. இராமலிங்கம், பொருளாளராக பி. குமார், துணை தலைவராக ஆர்.அமர்சிங், துணை செயலாளராக த.தர்மசீலன் ஆகியோர் புதிய பொறுப்பாளர்களாக தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டில் திருத்துறைப்பூண்டி, சிங்களாந்தி, தீவம்மாள்புரம் ஆகிய வருவாய் கிராமங்களுக்கு 2022 – 23 ஆம் ஆண்டிற்கான பயிர் காப்பீட்டு தொகையினை உடனடியாக அனைவருக்கும் வழங்கிடவும், ஆறு, வாய்க்கால்களில் மண்டி கிடைக்கும் வெங்காய தாமரையை உடன் அகற்றிடக்கோரியும் மற்றும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அனைத்து தொழிற்சங்கங்களின் சார்பில்

# லக்கிம்பூர் கேரி படுகொலைக்கு நீதிக்கேட்டு கருப்புக் கொடி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம்

லக்கிம்பூர் கேரி படுகொலைக்கு நீதிக்கேட்டு அனைத்து தொழிற்சங்கங்களின் சார்பில் கருப்புக் கொடி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

***நாமக்கல்:*** உத்திரபிரதேச மாநிலம் லக்கிம்பூர் கேரி விவசாயிகள் படுகொலைக்கு காரணமாக ஒன்றிய அமைச்சரை பதவிநீக்கம் செய்யக்கோரி அனைத்து தொழிற்சங்கங்களின் சார்பில், அகில இந்திய கருப்புக் கொடி கண்டன ஆர்ப்பாட்டம் நாமக்கல் பஸ் நிலையம் எதிரில் பூங்கா சாலையில் லிறிதி சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் ரி.தனசேகரன், விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ரி.அன்புமணி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் ஷி.ராமகிருஷ்ணன், ஏஐடியுசி மாவட்ட துணைத் தலைவர் தமிழ்மணி, ஏஐடியுசி அமைப்பு செயலாளர் ழி.முருகராஜ் உட்பட பல்வேறு சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

***தஞ்சாவூர்:*** தஞ்சாவூர் ரயிலடி முன்பு கருப்புகொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தொமுச மாவட்ட செயலாளர் கு.சேவியர், ஏஐடியூசி மாநிலச் செயலாளர் ஆர்.தில்லைவனம், சிஐடியு மாநில செயலாளர் சி.ஜெயபால், ஐஎன்டியூசி மாவட்ட செயலாளர் என். மோகன்ராஜ், ஏ. ஐ.டி.யூ.சி. மாவட்ட செயலாளர் கே.ராஜன், ஐக்கிய விவசாயிகள் முன்னணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் என்.வி.கண்ணன், ஆகியோர் தலைமை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் தாளாண்மை உழவர் இயக்க நிறுவனர் பொறியாளர் கோ. திருநாவுக்கரசு, சமவெளி விவசாயிகள் இயக்க ஒருங்கிணைப்பாளர் பொறியாளர் சு.பழனி ராஜன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளர் சாமி. நடராஜன், மாவட்ட தலைவர்கள் ஆர்.ராமச்சந்திரன் பி.செந்தில்குமார், விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் சி.பக்கிரிசாமி, ஏஐடியூசிதேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி. சந்திரகுமார் ஆகியோர் பங்கேற்று கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினார்கள்.

***தென்காசி:*** தென்காசியில் சி. ஐ. டி. யு. மணிகண்டன், ஏ. ஐ. டி. யு. சி. டி. சுப்பையா, எம்.எஸ்.கிட்டப்பா,எஸ்.மாரியப்பன், ஏ.பரமசிவன், ஜனசக்தி கே.பழனிச்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

***காஞ்சிபுரம்:*** காஞ்சிபுரத்தில், ஏ. ஐ. டி. யு. சி., சி. ஐ. டி. யு., எல். பி. எஃப். உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாயிகள் மாவட்ட செயலாளர் கே. நேரு, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மாவட்ட செயலாளர் ஆ.மூர்த்தி, எல்.பி.எஃப். மாவட்ட தலைவர் அ. இளங்கோவன் மற்றும் ஏ. ஐ. டி. யு. சி. மாவட்டத் துணைச் செயலாளர் எஸ். வி. சங்கர் மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

***அரியலூர்:*** உத்தரபிரதேச மாநிலம் லக்கிம் பூர்கெரி இடத்தில் விவசாயிகள் நடத்திய பேரணியில் கார்களை ஏற்றி பலரை படுகொலை செய்த சதிக்கு காரணமான பாஜக உள்துறை இணை அமைச்சர் அஜய் மிஸ்ரா டெனியை பதவியிலிருந்து நீக்கி வழக்கு போட்டு தண்டனை வழங்கிட கோரி அனைத்து தொழிற்சங்கம் விவசாயிகள் கூட்டமைப்பு அக்டோபர் 3 நாடு தழுவிய கருப்பு தினம் கடைப்பிடிப்பதையொட்டி மாவட்டத் அரியலூரில் அண்ணா சிலை அருகில் ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் த. தண்டபாணி, தொ.மு.ச மாவட்ட கவுன்சில் செயலாளர் ஸி.மகேந்திரன், சிஐடியு மாவட்ட செயலாளர் றி.துரைசாமி,INTUC மாவட்ட தலைவர் D.விஜயகுமார்,பிவிஷி மாவட்ட செயலாளர் ஷி. இராமசுவாமி ஆகியோர் தலைமையில் கருப்புக்கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

***கோவை:*** கோவை பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன்பு, மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பில் கருப்புக்கொடி ஏந்தியும், கருப்பு பேட்ஜ் அணிந்தும் தொழிற்சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் எல்.பி.எஃப். சங்கம் சார்பில் ப.மணி, வி.ஆனந்த், ஐ.என்.டி.யூ.சி. சார்பில் பி.சண்முகம், ஏ.ஐ.டி.யூ.சி. சார்பில் எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ., சி.தங்கவேல், கே.எம். செல்வராஜ், என்.செல்வராஜ், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட தலைவர் சு.பழனிசாமி, ஆர்.பாலகிருஸ்ணன், ஹச்.எம்.எஸ். சார்பில் டி.எஸ்.ராஜாமணி, சி.ஐ.டி.யூ. சார்பில் எஸ்.கிருஷ்ணமூர்த்தி, எம்.எல்.எப். சார்பில் தியாகராஜன், ஏ.ஐ.சி.சி.டி.யூ. சார்பில் ஆர்.பாலசுப்ரமணியன், எஸ்.டி.டி.யூ சார்பில் ஷாஜகான், எல்.டி..யூ.சி. சார்பில் ஜி.மணிகண்டன் ஆகியோர் பங்கேற்றனர்.

***புதுக்கோட்டை:*** புதுக்கோட்டையில் தொ. மு. ச. மாவட்ட செயலாளர் கி. கணபதி தலைமையில் நடைபெற்றது.

***நாகை:*** வேதாரண்யம் ஒன்றியத்தில் மாவட்ட செயலாளர் சிவகுரு பாண்டியன் தலைமையில் கருப்பு கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

***கள்ளக்குறிச்சி:*** கள்ளக்குறிச்சியில் அம்பேத்கார் சிலையருகில் கருப்பு கொடிகளுடன் கண்டன ஆர்ப்பாட்டம் தொமுச மாவட்ட கவுன்சில் தலைவர் கோ.திராவிட மணி தலைமையில் நடைபெற்றது. இதில் தவிச மாவட்ட செயலாளர் ஏ.வி.ஸ்டாலின் மணி, விதொச மாவட்ட செயலாளர் கே.எஸ்.அப்பாவு, விதொச மாவட்டத் தலைவர் பீ. சுப்பிரமணியம் கண்டன உரையாற்றினர்.

***செங்கல்பட்டு:*** செங்கல்பட்டு ராட்டினம் கிணறு அருகே கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் எஸ்.கே.எம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே. வாசுதேவன் தலைமையில் நடைபெற்றது .

தொமுச பேரவையின் மாநில செயலாளர் இரா.பொண்ணுராம் துவக்கி வைத்தார். எஸ். கே. எம். அமைப்பின் அகில இந்திய துணைத் தலைவர் டி.ரவீந்திரன் சிறப்பு உரையாற்றினார். ஏஐடியுசி மாநில துணை தலைவர் எம்.ஜஹாங்கீர் நிறைவுறை யாற்றி முடித்து வைத்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் கி.ராஜ்குமார், சி. ஐ. டி. யு. மாவட்ட செயலாளர் கே. பகத்சிங் தாஸ், ஏஐசிடியு மாநில சிறப்புத் தலைவர் சொ. இரணியப்பன் ஆகியோர் ஆர்ப்பாட்ட உரை நிகழ்த்தினார்கள். ஏஐடியுசிஅமைப்பு நிலை செயலாளர் பி.ரவிச்சந்திரன் நன்றி உரையாற்றினார்.















# தஞ்சை ஜி.கிருஷ்ணன் படத்திறப்பு, புகழஞ்சலி கூட்டம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஜி.கிருஷ்ணன் படத்திறப்பு, நினைவேந்தல் நிகழ்ச்சி தஞ்சாவூர் பெசண்ட் அரங்கத்தில் மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி தலைமையில் நடைபெற்றது. தி.மு.கழக செயல்திட்ட உயர்நிலைக் குழு உறுப்பினரும், தஞ்சை பாராளுமன்ற தொகுதி உறுப்பினருமான எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் முன்னிலையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழு தலைவர், திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், மறைந்த ஜி. கிருஷ்ணன் திருவுருவ படத்தினை திறந்து வைத்து, மலர் அஞ்சலி செலுத்தினார்.

நிகழ்வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில துணைச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா. பெரியசாமி, மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோ. பழனிச்சாமி, திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, வடக்கு மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி, காங்கிரஸ் கட்சி வயலூர் இராமநாதன், மார்க்சிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் சின்னைபாண்டியன், மதிமுக மாவட்ட செயலாளர் வி.தமிழ்ச்செல்வன் மக்கள் அதிகாரம் மாநில பொருளாளர் காளியப்பன், சிபிஎம்எல் மக்கள் விடுதலை மாவட்ட செயலாளர் இரா.அருணாச்சலம், திராவிடர் கழக மாவட்ட தலைவர் சி.அமர்சிங், விடுதலை சிறுத்தை கட்சியின் மைய மாவட்ட செயலாளர் கோ. ஜெயசங்கர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்டச் செயலாளர் எஸ்.எம். ஜெய்னுல் ஆபிதீன்,மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் உசைன், ஏ ஐ டி யூ சி மாநில செயலாளர் சி.சந்திரகுமார், சிபிஐ மாவட்ட பொருளாளர் ந.பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்று கிருஷ்ணனின் வாழ்க்கை வரலாறு குறித்து உரையாற்றினார்கள். முடிவில் சிபிஐ மாநகர செயலாளர் ஆர்.பிரபாகர் நன்றி கூறினார்.

# பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவு நாள்

***விருதுநகர்:*** விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மன்றம் உள்ளது .அதில் கவிஞரின் 64வது நினைவு நாளை முன்னிட்டு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. சிபிஐ மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் வி .இரவி, நகர செயலாளர் விஜயன், துணை செயலாளர் வேலுச்சாமி, பொருளாளர் முருகன் உள்பட பலர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினார்கள்.

***திருவாரூர்:*** மக்கள் கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் 64வது நினைவேந்தல் கூட்டம் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் திருவாரூர் கிளையின் சார்பாக நடத்தப்பட்டது. நகரமன்ற உறுப்பினர் ஜி.வரதராஜன் மலர் மாலை அணிவித்தார். கலை இலக்கிய பெருமன்ற துணைத்தலைவர் செல்லமணி தலைமையேற்று அனைவரையும் வரவேற்றார். கலை இலக்கிய பெருமன்றத்தின் செயலாளர் வீ. தர்மதாஸ் சிறப்புரையாற்றினார்.

# விவசாய தொழிலாளர் சங்கம் மயிலாடுதுறை மாவட்ட மாநாடு

மயிலாடுதுறை மாவட்ட வி.தொ.ச மாநாடு வே. நீதி சோழன் தலைமையில், சங்கத்தின் மாநில துணைத் தலைவர் பி.பத்மாவதி கொடியேற்றி வைத்தார். மாநில பொது செயலாளர் அ.பாஸ்கர் அரசியல் மற்றும் சங்கத்தின் அமைப்பு நிலையை பற்றி உரையாற்றினார். கட்சியின் மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் அமைப்பு நிலையை பற்றி விளக்கி பேசினார். பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றி மாநாட்டில் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட தலைவராக வே. நீதிசோழன், மாவட்ட செயலாளராக எஸ். சி. கணபதி, துணைத் தலைவராக சின்னத்துரை, துணைச் செயலாளராக தனசேகரன், பொருளாளராக வசந்தமாலா ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

# இந்த வார தம்பிக்குறள்

## 134. அறிவுப் பசி

**அறிவுப் பசியார்த் தெழாக்கால் அருஞ்செயல்**
**ஆற்றல் அரிதின் அரிது.**

'அறிவு தேடும் பசி' என ஒன்று மனிதனுக்கு இல்லையானால், உலகில் அரிய செயல்கள் நடந்திருக்க (நடக்க) இயலாது. (அறிவியல் முன்னேற்றம் உட்பட).

**தாகம் இலையானால் சாகும்மெய் தன்னறிவும்**
**வேக மிலையானா லாங்கு.**

மனிதருக்கு, நீர்வேட்கை இல்லையானால் வாழ இயலாது. அதைப் போலவே அறிவு வேகம் (வேட்கை) இல்லையானால் அறிஞனாக இயலாது.


க.இப்ராகிம்

# கானல் நீராகும் அண்ணாமலையின் கனவுகள்!

**வரலாற்று நெடுகிலும் பாஜகவின் நகர்வுகள் சமூக வெறுப்புணர்வை தூண்டுபவையாகவே இருக்கிறது. ஒரு கட்சி எந்த அளவிற்கு ஆபத்தானது என்பதற்கு பார'தீய' ஜனதா கட்சி நடத்திய கலவரங்களும், பிளவுவாத பொய்ப் பரப்புரைகளும் எடுத்துக்காட்டுகளாகும்.**

குறிப்பாக பிரதமர் மோடி தலைமையிலான பாரதிய ஜனதா அரசு 2014 ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, இந்தியா தன்னுடைய தனித்தன்மையை இழக்கத் தொடங்கிவிட்டது. போராடி பெற்ற உரிமைகளையும், சுதந்திரத்தையும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கிறது என்ற ஒரே காரணத்தினால் சீர்குலைத்து வருகிறது.

மதம், சாதி, இனம், பணம் என்று கூறி மக்களைப் பிளவுபடுத்தி பெரும்பான்மையினர் வாக்குகளை நோக்கி, அரசியல் நகர்வுகளை மேற்கொண்டு தேர்தல் வெற்றியை சுவைத்துக் கொண்டிருக்கும் பாரதிய ஜனதா, இதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அருவருக்கத்தக்க, அநாகரிக அரசியலின் வெளிப்பாடாகவே உள்ளது.

### குறிவைக்கப்படும் தமிழ்நாடு!

2024 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வரவேண்டும் என்பதற்காக தென்மாநிலங்களில் குறிப்பாக, தமிழ்நாட்டைக் குறிவைத்து பாஜக தன்னுடைய காய்களை நகர்த்தத் தொடங்கி இருக்கிறது.


மாநிலங்களை ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு சிபிஐ, அமலாக்கத்துறை, என்ஐஏ மூலமாக அச்சுறுத்தலை கொடுத்தும்; ஆளும் கட்சிகளை உடைத்து கூட்டணியில் இணைந்துக் கொண்டும்; எம்எல்ஏக்களை விலை கொடுத்து வாங்கியும் குறுக்கு வழிகளில் பாஜக ஆட்சி அமைத்து வருகிறது. இப்படி பீகார் மாநிலத்தில் ஐக்கிய ஜனதா தளம், கர்நாடக மாநிலத்தில் மதசார்பற்ற ஜனதா தளம், மகாராஷ்டிராவில் சிவசேனா, பஞ்சாபில் சிரோமணி அகாலி தளம் போன்ற கட்சிகளுடன் கூட்டணி ஆட்சி அமைத்து அதிகாரத்தில் அமர்ந்து கொண்டு, கூட்டணிக் கட்சிகளுக்கு ஆபத்தாக மாறிய வரலாறு உண்டு.

இதே ஃபார்முலாவை தான் தமிழ்நாட்டில் பாஜக கையாண்டு வருகிறது. அதிமுகவிற்கு பல்வேறு அழுத்தங்களை கொடுத்து கூட்டணியில் இணைந்து கொண்டது.

பின்னர், பாஜகவின் முக்கிய இலக்காக தமிழ்நாடு மாறியது. ஆனால் பாஜக எத்தனை சதிகளை செய்தாலும் அதற்கான எதிர்வினையை தமிழ்நாடு தொடர்ந்து அளித்து வருகிறது. இதனாலையே மற்ற மாநிலங்களில் ஏற்படுத்தியது போன்று தமிழ்நாட்டில் அவர்களால் கலவரங்களை ஏற்படுத்த முடியவில்லை. பொய்ப் பரப்புரைகள் அனைத்தும் அவர்களுக்கே எதிராக மாறி இருக்கிறது.

சென்ற ஆண்டு கிருஷ்ணகிரியில் விநாயகர் சதுர்த்தியில் கலவரம் செய்ய முற்பட்டனர். ஆனால் இந்த ஆண்டு இஸ்லாமியர்களும் இந்துக்களும் இணைந்து அன்னதானம் வழங்கி அதே பகுதியில் விநாயகர் சதுர்த்தியை கொண்டாடினர். இப்படி எல்லா திசைகளிலும் வெறுப்பு அரசியலுக்கு, எதிரான முன்னெடுப்பை தமிழ்நாடு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இதனால்தான் மற்ற மாநிலங்களைப் போன்று சாமியார்களை வைத்து கட்சியை வழிநடத்த ஆர்வம் காட்டிய பாஜக, தமிழ்நாட்டின் தனித்தன்மையை உணர்ந்து ஐபிஎஸ் அதிகாரி ஒருவரைத் தேடிப்பிடித்து பாஜகவின் மாநில தலைவர் பதவியை வழங்கியது. ஆனால் அவரும் தான் பாஜகவின் மூத்த தலைவர்களுக்கு சளைத்தவர் இல்லை என்பதை நிரூபித்து வருகிறார்.



தமிழ்நாடு பாஜகவில் குற்றப் பின்னணி கொண்ட ரவுடிகளையும் தாதாக்களையும் இணைத்து கட்சிப் பொறுப்புகளை வழங்கினார். ஊடகத்தினரிடம் அநாகரிகமாக நடந்து கொள்வது. மேடையில் பேசுவதற்கு திருக்குறள் தயார் செய்து கொடுப்பது முதல் அனைத்துப் பணிகளுக்கும் ஆட்களை வைத்து வேலையை செய்தார். தன்னுடைய முகத்தை மட்டும் கட்டிக் கொள்வது. எந்தவித முகாந்திரமும் ஆதாரமும் இல்லாத கருத்துக்களை ஏனோதானோ என்று பேசிச் செல்வார். அறமற்ற அரசியலில் தனக்கு போட்டி தானே என அண்ணாமலை சென்று கொண்டிருக்கிறார்.

2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பாஜகவின் மாநிலத் தலைவராக நியமிக்கப்பட்ட அண்ணாமலையை மாபெரும் தோற்றமாக உருவகப்படுத்த முயன்ற பாஜகவின் முயற்சிகள் கானல் நீராக மாறி இருப்பதை தமிழ்நாடு பாஜகவே தற்போது உணரத் தொடங்கியிருக்கிறது.

அண்ணாமலையின் தொடர் பேச்சுகளால் அதிர்ச்சியடைந்த அதிமுக, சுதாரித்து அண்ணாமலைக்கு எதிராக தீர்மானம் போட்டதோடு, கூட்டணியில் இருந்தும் விலகி இருக்கிறது. கூட்டணி விலகல் தொடர்பாக அதிமுக வெளியிட்ட அறிக்கையில், கூட்டணியில் இருந்து விலகுகிறோம் என்று பதிவு செய்தது. இதைப் பார்த்த தமிழக மக்களுக்கு ஆற்றல் மிக்க நபர்கள் வழிநடத்திய கட்சியில் அறிக்கை கூட தயார் செய்ய முடியாதவர்கள் தலைவராகி இருக்கிறார்களே என்ற மனநிலையை ஏற்படுத்தியது.

2024 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ்நாட்டை மையப்படுத்தி அரசியலை முன்னெடுக்க பாஜகவின் டெல்லி தலைமை தீட்டிய திட்டம் அண்ணாமலையால் பொய்த்து போனதை ஏற்றுக் கொள்ள முடியாமல், அண்ணாமலையை டெல்லிக்கு வரவழைத்தும் சந்திக்க மனமில்லாமல் திருப்பி அனுப்பியது பாஜக தலைமை.

அண்ணாமலை இல்லாமல் தமிழ்நாட்டில் பாஜக கூட்டங்கள் நடத்தப்படுகிறது. தலைவர் இல்லாத பிரஸ்மீட், மாநிலத் தலைவர் வருவதற்கு முன்பே தொடங்கிய மாவட்டச் செயலாளர்கள் கூட்டம். மேலும் ஒரு படி சென்று கூட்டத்தை நடத்துவதற்கு மாநிலத் தலைவர் தேவையில்லை, அமைப்புச் செயலாளர் போதும் என்று வானதி சீனிவாசன் பேசியதால், திக்கித் திணறுகிறது தமிழ்நாடு பாஜக.

''அண்ணன் எப்ப சாவான், திண்ணை எப்ப காலியாகும்''. என்ற மனநிலையில் தமிழ்நாட்டை அணுகிய பாஜகவிற்கு பேரிடியாக தனது கட்சிக்குள்ளே அந்த நிலை ஏற்பட்டிருப்பதை தமிழ்நாடு பாஜகவினர் பார்த்து வருகின்றனர்.

பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும் என்று சொன்ன தமிழ்நாட்டில் வெறுப்பு மற்றும் பிளவு அரசியலுக்கு ஒருபோதும் இடமில்லை. அண்ணாமலை என்றாலும், அவர் தலைவர் மோடி என்றாலும் தமிழ்நாட்டு மக்களிடம் பொய் பிம்பம் எடுபடாது.

**தொடர்புக்கு: 8072132523**

# சங்கிகளின் சனாதனம்...


எஸ்.கிருஷ்ணன்

அரசியல் பிழைத்தோருக்கு அறமே கூற்று என்கிறார் சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோவடிகள். அதையே இந்திய அரசியல் சட்டம் Equal Protection of Law என்கிறது. இந்தியா ஒரு இறையாண்மை கொண்ட ஜனநாயக, மதச்சார்பற்ற சோசலிச குடியரசு என்கிறது அரசியல் சட்ட முகப்புரை.

அரசியல் சட்டத்தின் பாதுகாவலர் இந்திய நாட்டின் ஜனாதிபதி. ஆனால் தலித்தாக இருந்த ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் நன்கு படித்த மேதை. அவர் மடம் ஒன்றுக்கு சென்றிருந்த போது நின்ற இடம் தண்ணீர் ஊற்றி கழுவப்பட்டது. இதுதான் ஆர்.எஸ்.எஸ் – பாஜக கும்பலின் சனாதானம்.

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா**
**செய்தொழில் வேற்றுமையான்"**

என்கிறார் உலகப்பொதுமறை எழுதிய திருவள்ளுவர்.

**"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளை கல்"**

என்று அதர்மம் பேசுபவரை கல்லால் அடிக்கிறார் வள்ளுவர்.

ஆனால், மனுதர்மம் பேசும் சனாதானம் சிவத்திலோ, வைணவத்திலோ, புத்தம், சைனம், சீக்கியர், இஸ்லாமியர், கிறிஸ்துவம் எங்குமே காணப்படவில்லை.

இந்தியாவில் உள்ள இதிகாசங்களில் இந்து என்ற சொல்லே கிடையாது. திராவிட சிந்தனைப் பள்ளியின் (Thiravidian School of Thoughts) கோட்பாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள இந்துச் சட்டம் தொகுக்கப்பட்டுள்ளது. இதனால் இந்து மதத்தின் ஆதாரமாக கருதப்படும் தர்மம் என்ற சொல் அறத்தை அடிப்படையாகக் கொண்டது. அறம் என்பது திராவிடச் சிந்தனைப் பள்ளியின் அறத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. அங்கு ஜாதி, முன்நிறுத்தப்படவில்லை.

பனாரஸ் சிந்தனைப் பள்ளி (Banaras School of Thought), மகாராஷ்டிரா சிந்தனைப் பள்ளி (Maharashtra School of Thought) முறையே வங்காளம், மகாராஷ்ட்ரத்தில் உள்ள மதச்சார்பற்ற தர்மநெறியில் உள்ள கோட்பாடுகளாகும். இந்து மதத்தை தோற்றுவித்தவர் என்று எவரும் இல்லை. அது ஒரு கும்பலால் தோற்றுவிக்கப்பட்ட சாதியக் கோட்பாடு. அதனால் சர்ஜான்ஸ் வில்லியம் என்ற ஆங்கில அதிகாரி வங்காளத்தில் 1897ல் இந்தியாவில் உள்ள 534 சமஸ்தானங்களில் நிலவிய பல்வேறு பழக்க வழக்கங்களைத் தொகுத்து சிந்து சமவெளி நாகரிகத்தை கைக்கொண்ட திராவிட இன மக்கள் காலத்தில் புழக்கத்தில் இருந்த சிந்து (Zindoo) என்ற வார்த்தை இந்துவாக மாறியது. இதற்கான ஆதாரம் கும்பகோணத்தில் உள்ள நூலகத்தில் உள்ளது. எனவே திராவிட சிந்தனைப் பள்ளி என்ற கோட்பாட்டின் அடிப்படையில், சாதி வேறுபாடும் கிடையாது. அதனால் சைவமும், வைணவமும் உள்ள திருக்கோயில்கள்,

**"புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே**
**ஒப்புரவின் நல்ல பிற"**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க ஒப்புரவு மட்டுமே மானுடம் தழைக்க இறைவழிபாட்டு முறையாக சமூக சேவையை போற்றி வளர்த்தனர். திருக்கோயில்கள் இன்னும் கிராமக் கோயில்களும் ஒவ்வொரு கிராமத்தின் பொதுச் சேவைக்கும் கோயில்களில் வைத்தே மக்கள் கூடி பிரிவினையின்றி கிராம தேவைகளை செயல்பாட்டின் மூலம் நிறைவேற்றுகின்றனர். அதையே இந்துச்சட்டம் Customs and Usage (பழக்கமும் வழக்கமும்) என்று வரையறுக்கிறது.

இதில் நிலத்தின் சொந்தக்காரர்களாக உழைத்து உணவு உற்பத்திக்கு உறுதுணையாக இருந்த ஆதிப் பழங்குடிகள்தான் ஆதிதிராவிடர்கள். அவர்கள் வருணாசிரம தர்மத்தால் நிலத்திலிருந்து காலப்போக்கில் பிராமணர்களால் வெளியேற்றப்பட்டனர். இதை பிரிட்டிஷ் அரசாங்கமே கடுமையாக எதிர்த்து வருணாசிரமம் கற்பித்த இந்து தர்மம் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலேயே முற்றிலும் மாற்றப்பட்டுள்ளது.

1. குழந்தைகள் திருமண மறுப்புச்சட்டம் 1929
2. விதவைகள் மறுமண சட்டம் 1856
3. உடன்கட்டை ஏறுதல் ஒழிப்புச்சட்டம் 1858
4. பெண்களுக்கு சமூக உரிமை சட்டம் 1946
5. சாதி ஒழிப்புச்சட்டம் 1950
6. இந்திய அரசியல் சட்டம் சுதந்திரத்திற்குப் பின்னால் 17வது பிரிவில் தீண்டாமை ஒழிப்பை வலியுறுத்துகிறது.
7. சிவில் உரிமை சட்டம் 1955
8. தலித் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989

போன்ற சட்டங்களால் அனைத்து மக்களும் சாதி வேறுபாடின்றி தீண்டாமையை ஒழிப்பதற்கான சமஉரிமைக்கான பாதுகாப்புச் சட்டமாகும். ஆனால் இத்தனை சட்டங்களை மீறி, அறத்தையும் மீறி இந்நாட்டில் நாள் ஒன்றுக்கு 10 தலித் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர். அதில் நான்கு பேர் கொடுமையாக கொல்லப்படுகின்றனர். இதற்கு இந்து சனாதானம் பேசும் பாஜக அரசின் பதில் என்ன?

**தொடர்புக்கு: 9443289949**

# கலை இலக்கியப் பூங்கா



## நூல் வெளியீடு

எழுத்தாளர் ராஜேஷ் ராதாகிருஷ்ணன் எழுதிய மூன்றாம் சிறுகதை தொகுப்பு "விடியல்" கோவில்பட்டி தமிழ்நாடு கலை இலக்கியப்பெருமன்றம் சார்பில் வெளியிடப்பட்டது.

நிகழ்விற்கு த.க.இ.பெ நகர செயலாளர் சு.முத்துராமன் தலைமை வகித்தார். த.மு.எ.க.ச நகர தலைவர் அபிராமி முருகன், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் கே.பி.ராஜகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாரீஸ்வரி வரவேற்புரையாற்றினார். சிறுகதை புத்தகத்தை செம்மலர் ஆசிரியர் ச.தமிழ்செல்வன் வெளியிட த.க.இ.பெ மாநில பொதுச்செயலாளர் மருத்துவர்.த.அறம் பெற்றுக்கொண்டு சிறப்புரையாற்றினார்.

நூல் குறித்து த.க.இ.பெ மாநில துணைத்தலைவர் கவிஞர் கண்மணி ராசா பேசினார், மற்றும் இந்நிகழ்வில் த.க.இ.பெ மாநில செயற்குழு உறுப்பினர் முனைவர் ஜி.சத்திய பாலன், பாரதி முற்போக்கு வாலிபர் சங்கம் செயலாளர் வ.பாலமுருகன், ச.சேது, கணேசன் மற்றும் கவிஞர்கள் இரா.சிவானந்தம், கார்த்திகேயன் எழுத்தாளர் பார்த்திபன், திரைபட இயக்குனர் வரதன் செல்லப்பா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வை ஆர்.ஜே. மணிகண்டன் தொகுத்து வழங்கினார். எழுத்தாளர் ராஜேஷ் ராதாகிருஷ்ணன் ஏற்புரை நிகழ்த்தினார் த.க.இ.பெ நகர பொருளாளர் சு.மாரிமுத்து நன்றி கூறினார்.

## சிறப்பு கருத்தரங்கு

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் புதிய கிளை தொடக்க விழாவும் மகாகவி பாரதியின் நினைவு நாள் சிறப்புக் கருத்தரங்கும் நடைபெற்றது.

நிகழ்விற்கு நத்தம், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆசிரியை,க. செல்லம் தலைமையேற்று பாரதியை பற்றிய மிகச் சிறப்பான கவிதை ஒன்றை வாசித்தார். நந்தசிவம் புகழேந்தி வரவேற்புரையாற்றினார்.

தகஇபெ மாவட்டச் செயலாளர் சு.பிரபாகரன், சிறார் எழுத்தாளர் ஏ.ஆர். முருகேசன் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலத் துணைச் செயலாளரும், தமிழ்த்துறை பேராசிரியருமான முனைவர் பா.ஆனந்தக்குமார் பாரதியின் ஆளுமை பற்றி மிக அருமையானதொரு சிறப்புரை வழங்கினார்.

நிகழ்வில் மூங்கில்பட்டி அரசுப்பள்ளியின் தலைமையாசிரியர் மணிமேகலை பாரதியைப் பற்றிய அருமையானதொரு பாடலை இனிமையான குரலில் பாடினார்.

முடிவில் ந.கோகுல கிருஷ்ண குமாரி, மதுரை சட்டக்கல்லூரி மாணவி அவர்கள் நன்றி கூறினார்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கிளை நிர்வாகிகள் கிளைத் தலைவர் க.செல்லம், கிளைச் செயலாளர் நந்தசிவம் புகழேந்தி, கிளைப் பொருளாளர் முரளி உள்ளிட்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## மகாத்மா காந்தியடிகள் பிறந்தநாள் விழா

சாத்தூர் தனுஷ்கோடி அரங்கத்தில் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் மற்றும் எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி அறக்கட்டளை இணைந்து மகாத்மா காந்தி பிறந்த தின விழாவும், நூல் வெளியீட்டு விழாவும் நடத்தியது.

முதல் நிகழ்வாக மகாத்மா காந்தி படம் திறக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் நடந்த கூட்டத்திற்கு பட்டதாரி ஆசிரியை மகாலட்சுமி தலைமை வகித்தார். பொன்னுச்சாமி முன்னிலை வகித்தார்.

"காந்தியும் மத நல்லிணக்கமும்" என்ற தலைப்பில் கல்லூரி மாணவி விஜயலட்சுமி உரையாற்றினார். பேராசிரியர் கமலா அவர்கள் மகாத்மா காந்தியை நேரில் சந்தித்த நிகழ்வை நினைவு கூறி வாழ்த்துரை வழங்கினார்.

'மகாத்மா காந்தி 155 ஆம் ஆண்டு பிறந்த நாள்' என்ற தலைப்பில் செவல்பட்டி சரஸ்வதி குழந்தைகள் பள்ளி தாளாளர் முத்துலட்சுமி சிறப்புரை ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து பாவலர் அன்பு ஆறுமுகம் எழுதிய "வள்ளுவ நோக்கில் வாழ்வியல்" என்ற நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது .

த.க.இ.பெருமன்ற மாநில பொதுச் செயலாளர் மருத்துவர்.அறம் நூலை வெளியிட்டு சிறப்புரை ஆற்றினார். திருக்குறள் முத்துக்குமாரசாமி அவர்கள் நூலைப் பெற்றுக் கொண்டு சிறப்பு உரையாற்றினார். த.க.இ.பெ மாவட்டச் செயலாளர் நவநீதகிருஷ்ணன், தியாகராஜ கல்லூரி பேராசிரியர் சரவணன் ஜோதி, தஞ்சை தமிழ் பல்கலைகழகத்தின் தமிழ்த்துறை பேராசிரியர் வீரலட்சுமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஆசிரியை இனியாள்புகழேந்தி அவர்கள் ஏற்புரை வழங்கினார்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், காரைக்குடி மற்றும் தேவகோட்டை கிளை சார்பில் அண்ணல் மகாத்மா காந்தியடிகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

## வேதாரண்யத்தில் வாங்க பேசலாம் கலை இலக்கிய அமர்வு, நூல் வெளியீடு

நாகை மாவட்டம்,வேதாரண்யத்தில் கலை இலைக்கியப் பெருமன்றம் சார்பில் வாங்க பேசலாம் அமர்வுக்கு பெருமன்றத்தின் முன்னோடிகளில் ஒருவரான புலவர் இரா.கணேசன் தலைமை வகித்தார். நிகழ்வின் தலைவர் புலவர் இரா.கணேசன் குறித்த பதிவையும் சொல்லியாக வேண்டும். கவிஞர் வாய்மைநாதன், ஆ.வி. வை.மு போன்றவர்களுடன் தொடக்கக் காலம் தொடங்கிய பெருமன்ற ஈடுபாடு கொண்டவர்.

கிளைத் தலைவர் இள.தொல்காப்பியன், பேராசிரியர் பி.பிரபாகரன், துணைச் செயலாளர் வீ.சத்தியராஜ், துணைத் தலைவர் த.சுகன்யா ஆகியோர் முன்னிலை வகித்துபேசினர்.

விழாவில், கவிஞர்கள் வீ.கார்த்திகேயன், ப.ஓவியா ஆகியோர் கவிதைகள் வாசித்தனர். கவிஞர் கண்ணையன் பாடல்களை பாடினார். கவிஞர் தங்க. குழந்தைவேலு எழுதிய "வி(த்து)ழுதுகள் தந்த முகவரிகள்" நூல் வெளியிடப்பட்டது.

நிகழச்சியில், மாவட்டத் தலைவர் புயல் சு.குமார், மாவட்டச் செயலாளர் தென்னடார் அம்பிகாபதி, நல்லாசிரியர் வீ.வைரக்கண்ணு, கவிஞர் லெ.பக்கிரிசாமி, ஆர்.ராஜகோபால் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

## பொதுவுடமைக் கவிஞர் தமிழ் ஒளியின் நூற்றாண்டு தொடக்க விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் காஞ்சிபுரம் மாவட்டக் குழுவின் சார்பாக கவிஞர் தமிழ் ஒளியின் நூற்றாண்டு தொடக்க விழா செங்கல்பட்டில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் கவிஞர் சி. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற விழாவில், மாவட்ட துணைத் தலைவர் ஓவியக்கவிஞர் வீரமணி வரவேற்புரை நிகழ்த்தினார்.



கவிஞர் தமிழ் ஒளியின் படத்தினை சி.டி. சம்பத் திறந்து வைக்க மாவட்டத் தலைவர் ஜீவா மணிக்குமார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மாவீரன் பகத்சிங் படத்தை தேசிய செயலர் டி.எஸ். நடராஜன் மற்றும் மாவட்டச் செயலர் கவிஞர் ராமலிங்கம், விவசாய தொழிலாளர்களின் விடிவெள்ளி பி சீனிவாசராவ் படத்தை ஆசிரியர் ராமலிங்கம் மற்றும் பாபு, மேயர் சிவராஜ் படத்தை கவிஞர் ஆ. கிருட்டிணன் மற்றும் இருதயராஜ், செங்கை இலக்கியவாதி அந்தோணி பால் படத்தை கவிஞர் கல்லை ஜெயராமன் மற்றும் வீரராகவன் திறந்து வைத்து மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

ஜீவா நூலகத்தை மாநில செயற்குழு உறுப்பினர் மருத்துவர் ஏ.ஆர்.சாந்தி திறந்து வைத்தார். மருத்துவர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் எழுதிய "சனாதன தர்மமும் சமூக நீதியும்" என்ற நூலை ஜீவா மணிக்குமார் வெளியிட வீரமணி மற்றும் சி.ராமலிங்கம் பெற்றுக் கொண்டனர்.

ஆசிரியர் மணிவாசகம், ஏ.ஐ. ஒய். எஃப் மாவட்டத் தலைவர் சேகுவாரா தாஸ், தேசிய செயலாளர் டி எஸ் நடராஜன் ஆகியோர் உரையாற்றினர். "கவிஞர் தமிழ் ஒளியின் பணிகளில் இயக்கமும் இலக்கியமும்" என்ற தலைப்பில் மாநில செயற்குழு உறுப்பினர் முனைவர் பேராசிரியர் கணபதி இளங்கோ கருத்துரை வழங்கினார்.

செங்கல்பட்டு கிளையின் புதிய தலைவராக கவிஞர் கிருட்டிணன், துணைத் தலைவராக சந்திரசேகர், செயலாளராக ஓவியக்கவி வீரமணி, துணைச் செயலாளர்களாக வசந்த மாலா, சா கா பாரதிராஜா, பொருளாளராக கே.பாலா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**திருப்பூர்:** தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் திருப்பூர் வடக்கு மாநகரம் கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு தொடக்கவிழா மற்றும் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் நினைவுநாள் சிறப்புக் கூட்டம் பாரதிசுப்பராயன் தலைமையில் நடைபெற்றது. த.நா.க.இ.பெருமன்ற மாநிலத் துணைச்செயலாளர் த.சசிகலா வரவேற்புரை நிகழ்த்தினார். வடக்கு மாநகர்ச்செயலாளர் எஸ்.ஏ.காதர், பட்டுக்கோட்டையாரையின் பாடலைப் பாடி துவக்க உரை நிகழ்த்தினார்.

மாவட்டத்தலைவர் பி.ஆர்.நடராசன் கவிஞர் தமிழ்ஒளி மற்றும் எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி குறித்து பேசினார். திருப்பூர் மாநகரத் துணை மேயர் எம்.கே.எம்.,ஆர்.பாலசுப்பிரமணியம் வாழ்த்துரை வழங்கினர். மாநிலப் பொதுச்செயலாளர் மருத்துவர் த.அறம், சிறப்புரையாற்றினார்.

மக்கள் இசைப் பாடல்களையும், சிறப்பான கவிதைகளையும் தோழர்கள் கா.ஜோதி, ஆசிரியர் பெ.இராமன், ஆசிரியர் சி.இராமகிருஷ்ணன் ஆகியோர் பாடி இசைத்தனர்கள். கவிஞர் ஆ.அருணாசலம் ஆசிரியர் அ.பழனி ஆகியோர் தொகுப்புரை வழங்கினர். நிகழ்சியை நிறைவு செய்து க.இராமசுப்பிரமணியம் பேசினார்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் பட்டுக்கோட்டை கிளையின் சார்பாக மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவு நாளை முன்னிட்டு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபத்தில் மாலை அணிவித்தல் நிகழ்வும், மணிக்கூண்டு அருகில் உள்ள பட்டுக்கோட்டையார் சிலை அருகில் புகழஞ்சலி கூட்டமும் நடைபெற்றது. இந்நிகழ்வில் மூத்த தோழர் சி.பக்கிரிசாமி, சி.ராமலிங்கம், ஆர். பிரகாசம், வாசு. இளையராஜா, பாலதண்டாயுதம், மா.சுகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## நாட்டுப்புற கலைஞர்களின் மாநில மாநாடு

தமிழ்நாடு தோழர் ஜீவா அம்பேத்கர் நாட்டுப்புறக் கலைஞர்கள் சங்கத்தின் 5 ம் ஆண்டு மாநில மாநாடு கடலூர் மாவட்டம் திட்டக்குடியில் நடைபெற்றது.

மாநில செயலாளர் கா.வீரமணி தலைமையில் திட்டக்குடி கடைவீதியில், முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் பி.டி.மன்னன் பேரணியை துவக்கி வைத்தார். பேரணியில் கோலாட்டம், பறையிசை, ஒயில் கும்மி, மோளம், காளியாட்டம், ஆகிய நாட்டுப்பபுறக் கலைஞர்களின் கலை நிகழ்வுகளை மக்கள் கண்டு களித்தனர். அரியலூர் மாவட்ட தலைவர் ஆ.ஏகாம்பரம் தலைமையில், வரவேற்பு குழு தலைவர் எம்.நிதிஉலகநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநில தலைவர் எஸ்.கே.கங்கா,மாநிலப் பொருளாளர் பா.ப.ரமணி,மாநில குழு உறுப்பினர் நாட்டுப்புற இசைக் கலைஞர் மு.ஆதிராமன், இந்தியகம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் பி துரை,தி.மு.க.கடலூர் மாவட்ட விளையாட்டு அணி செயலாளர் சி.வே.க.வெங்கடேசன், வி.சி.க.மாவட்ட செயலாளர் வீர.திராவிடமணி, ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர். சுப்பிரமணியன், சங்க மாநில ஒருங்கிணைப்பாளர் ந.கண்ணதாசன், வரவேற்பு குழு பொருளாளர் வி.பி.முருகையன் ஆகியோர் கலந்து கொண்டனர்.கலைஞர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அருட்செல்வி நன்றி கூறினார்.



JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 14.10.2023 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# லக்னோவில் இடதுசாரி ஜனநாயக கட்சிகளின் மாபெரும் பேரணி



இடதுசாரி ஜனநாயகக் கட்சிகள் லக்னோவில் ஏற்பாடு செய்திருந்த மாபெரும் பேரணியில், உத்தரப் பிரதேசம் முழுவதிலும் இருந்து மக்கள் பங்கேற்றனர்.

இரட்டை இஞ்சின் என்று பிஜேபி சொல்லிக் கொள்வதெல்லாம், வெறுப்பும் துயரங்களும் நிறைந்தது என்பதை மக்கள் உணா்ந்துள்ளனா். உ.பி.யில் விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம், ஊழல் மற்றும் புல்டோசர் ராஜ்யத்தால் மக்கள் சோர்ந்து போயுள்ளனர். திரளாக கூடியிருந்த மக்களிடையே டி.ராஜா, சிபிஐ, சீதாராம் யெச்சூரி, சிபிஐ(எம்), தீபங்கர் பட்டாச்சார்யா, சிபிஐ(எம்எல்), அகில இந்திய பார்வர்டு பிளாக்கின் ஜி.தேவராஜன், லோக் ஜனசக்தியின் ஜாவேத் ராசா ஆகியோர் நிகழ்ச்சியில் பேசினர்.

நமது ஜனநாயகத்திற்கு, இந்த முக்கியமான நேரத்தில் இடதுசாரி ஜனநாயக சக்திகளின் ஒற்றுமை அவசியம். பிரித்து ஆட்சி செய்யும் சக்திகளை ஒற்றுமையாக முறியடிப்போம்.

**தோழர் டி ராஜா அவர்களின் ட்விட்டர் செய்தியில் இருந்து**

1ஆம் பக்க தொடர்ச்சி

போராட்டங்களில் ஈடுபட்டனர். பல இடங்களில் சாலை மறியல்களும் நடைபெற்றன. இந்த கடையடைப்பு மறியல் போராட்டத்திற்கு திமுக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ், மதிமுக, விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட அரசியல் கட்சிகளும் வணிகர் சங்கங்கள், வர்த்தக அமைப்புகள், தொழிற்சங்கங்கள் ஆதரவு அளித்ததால் முழு கடையடைப்பு, மறியல் போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது.

**தஞ்சாவூர்:** பழைய பேருந்து நிலையத்திலிருந்து பேரணியாக புறப்பட்டு காந்திஜி சாலை இன்சூரன்ஸ் ஒன்றிய அலுவலகம் முன்பு மாபெரும் மறியல் போராட்டம் நடைபெற்றது. காவிரிப் படுகை பாதுகாப்பு கூட்டியக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் என்.வி.கண்ணன், விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சோ.பாஸ்கர், விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளர் பெ.சண்முகம், திமுக தஞ்சை மாநகர செயலாளர், தஞ்சை மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி, விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் கோ.ஜெய்சங்கர் உள்ளிட்டோர் மறியல் போராட்டத்தில் பங்கேற்றனர்.

**தஞ்சை வடக்கு** மாவட்டத்தில் 10 இடங்களில் நடந்த சாலை மறியலில் மு.அ.பாரதி, சாமு.தர்மராஜ் உள்ளிட்டோர் தலைமை தாங்க இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

**திருவாரூர்** மாவட்டத்தில் 11 இடங்களில் நடைபெற்ற மறியலில் 9000 பேர் பங்கு கொண்டனர். கோ.பழனிச்சாமி; முன்னாள் எம்எல்.ஏ; ஏ.கே.எஸ்.விஜயன் முன்னாள் எம்.பி; பி.எஸ்.மாசிலாமணி, சாமி. நடராஜன்; வை.சிவபுண்ணியம் முன்னாள் எம்.எல்.ஏ; வை செல்வராஜ் உள்ளிட்டோர் தலைமை வகித்தனர்.

**நாகை** மாவட்டத்தில் 6 இடங்களில் மறியல் நடந்ததில் 2500 பேர் அளவில் பங்கு கொண்டனர். இதில் திமுக மாவட்ட செயலாளர் என்.கௌதமன்; சிவரு. பாண்டியன்: ஆர்.கே.பாபுஜி உள்ளிட்டோர் தலைமை ஏற்றனர்.

**மயிலாடுதுறை**யில் அ.சீனிவாசன் மற்றும் பலர் தலைமை ஏற்க 800 பேர் அளவில் பங்குகொண்டனர்.

**புதுக்கோட்டை**யில் பி.மாதவன் மற்றும் பலர் தலைமை வகித்ததில் 800 பேர்கள் கலந்துகொண்டனர்.

**திருச்சி**யில் நடந்த மறியலில் மேயர் மு.அன்பழகன்; சிவ.சூரியன் உள்ளிட்ட 200 பேர் பங்குகொண்டனர்.

**கடலூர்** மாவட்டத்தில் இரு இடங்களில் நடந்த மறியலில் எம்.சேகர் உள்ளிட்டோர் தலைமையில் 300 பேர் பங்கு கொண்டனர்.

**அரியலூர்** திருமானூரில் நடந்த மறியலில் 150 பேர் பங்குகொண்டனர்.

பல இடங்களில் ஆயிரக்கணக்கானோர் பேரணியாகச் சென்று மறியலில் ஈடுபட்டனர்.

ஏஐஒய்எஃப் – ஏஐஎஸ்எஃப் வடசென்னை சார்பாக தோழர் கோட்டீஸ்வரன் நினைவாக

# போதை இல்லா தமிழகம் விழிப்புணர்வு பிரச்சாரம்





- சமூகத்தை சீரழிக்கும் போதை கலாச்சாரத்தை ஒழித்திட !
- பெருகிவரும் கொடூர குற்ற செயல்கள் தடுத்திட !
- படிப்படியாக மதுவிலக்கை அமல்படுத்திட !
- இளைஞர்களின் எதிர்காலத்தை பாதுகாத்திட !

வலியுறுத்தி தோழர் இரா.கோட்டீஸ்வரன் நினைவாக வடசென்னை மாவட்டம் முழுவதும் ஏஐஒய்எஃப் – ஏஐஎஸ்எஃப் சார்பாக 50 இடங்களில் 50 வாகனங்களில் இளைஞர் மாணவர்களின் “போதை இல்லாத தமிழகம்’’ பிரச்சார பயணம், அக்டோபர் 8 அன்று நடைபெற்றது. சிந்தனை சிற்பி சிங்காரவேலர் சிலைக்கு அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநில செயலாளர் க.பாரதி அவர்கள் மாலை அணிவித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை முன்னாள் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பிரச்சார பயணத்தின் போது அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநில தலைவர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில செயலாளர் கீ.சு.குமார், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட துணைச் செயலாளர் காவிரி செல்வம், முகேஷ் குமார், பீஹார், பெகுசாராய், ஏஐஎஸ்எஃப் உள்ளிட்டோர் பேசினர். திவ்ய ஸ்ரீ ஏஐஎஸ்எஃப் நிறைவு செய்தார்.

இராயபுரம் சிக்னல் அருகில் உள்ள சிங்காரவேலர் மணிமண்டபத்தில் இருந்து துவங்கிய பிரச்சார இயக்கம் ஆர்.கே.நகர், திருவொற்றியூர், மாதவரம், கொளத்தூர்,திருவிக நகர் வழியாக பெரம்பூர் பாரதி நகரில் மாலை நிறைவடைந்து, மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ஏஐஒய்எஃப் மாவட்ட தலைவர் ஆர்.கோட்டி சுரேஷ் தலைமையேற்றார். ஏஐஒய்எஃப் மாவட்ட செயலாளர் ஆ.சுரேஷ் வரவேற்புரையாற்றினார். மூ.காவிரி செல்வம் பா.செல்வராஜ் டி.ஆசிப், நா.வசந்தபாரதி, ஏ.குமார் ஆர்.பிரபா, ச.அருண், இ.வரபிரசாத் ஆகிய தோழர்கள் முன்னிலை வகித்தனர்.

தோழர் கோடீஸ்வரன் நினைவை பகிரும் நிகழ்வில் எஸ்.தர்மலிங்கம், கே.எல்.நரசிம்மன், உமா சங்கர், எஸ்.கோபால், வி.ஹரி, கிருஷ்ணன், எஸ்.ஜேம்ஸ், வழக்கறிஞர் ஜெகநாதன், வழக்கறிஞர் கணேசமூர்த்தி, என்.ராஜேந்திரன், ஆர்.துளசிதாஸ், ரமேஷ் ஐ.சி.எஃப்., தளபதி, ஏ.ஆர்.ஜெயக்குமார், சீனிவாசன், கேசவன்,அம்பத்தூர், ஜி.வெங்கடேசன் ஆகியோர் தங்கள் நினைவுகளை பகிர்ந்தனர்.

ஏஐஒய்எஃப் மாநில தலைவர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி சிறப்புரையாற்றினார். ஏஐஎஸ்எஃப் மாவட்ட தலைவர் இரா.ராமசாமி நன்றியுரையாற்றினார்.

ஏஐஒய்எஃப் நியூ சாஸ்திரி நகர் தோழர்களின் பறை இசையாட்டம், வியாசை தோழர்கள் அகாடமியின் சிலம்பாட்டம், ரஜினி ரவியின் போதைக்கு எதிரான மற்றும் மத ஒற்றுமையை வலியுறுத்தும் ஆடல், வியாசை தோழர்களின் போதை இல்லாத தமிழகம் நாடகம், ரேகாவின் நாட்டுப்புற விழிப்புணர்வு பாடலுக்கான நடனம் ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றது.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.